Deviyin **KANMANI** -Tamil Fortnightly **DECEMBER** - 1, 2010 Regd. No. TN/CH(C)/360/09-11 Registered With Registrar of News papers for India Under No.49510/89 Published every 1st and 15th of every month.



## இந்த நாவல் பற்றி...


கண்மணியில் "என்றென்றும் நீ வேண்டும்" என்ற நாவலையடுத்து மீண்டும் "பூவே... உன்னை நேசித்தேன்" என்ற இந்த நாவலை வாசகர்களுக்கு படைக்கிறேன்.

இதில் சமூக அக்கறை, சேவை, காதல், வலி, சோகம், ஆனந்தம், மனப் போராட்டங்கள் என்று கலந்து எழுதியிருக்கிறேன். வாசகர்கள் படித்து மகிழ்வார்கள். அன்பான விமர்சனங்களை எதிர்பார்க்கிறேன்.

மிக்க அன்புடன்
-ஆர்.மகேஸ்வரி

தேவியின்
கண்மணி
ரூ.7

ஆர்.மகேஸ்வரி



# பூவே உன்னை நேசித்தேன்...!

# பூவே உன்னை நேசித்தேன்...!

மொட்டை மாடியில் நின்று சில்லென்று வீசிய குளிர்ந்த காற்றில் அவ்வப்போது பெருத்த இரைச்சலுடன் விண்ணில் எழுந்து பறந்து போய் கொண்டிருந்த விமானங்களின் ஒளி நாளங்களை ரசித்துக் கொண்டிருந்தாள் நேத்ரா.

அவள் வீடு ஏர்போர்ட்டிலிருந்து ஓரிரு கிலோமீட்டர் பக்கத்தில் இருந்ததால் இரைச்சல் நாள் முழுக்க பழகிப் போயிருந்தது.

சமீபமாய் மருத்துவப் படிப்பை முடித்திருந்த நேத்ரா எம்.பி.பி.எஸ்., முடித்த கையோடு டி.ஜி.ஓ. முடித்து இப்போது முழுமையான மகப்பேறு மருத்துவர்!

சிறுவயது முதற்கொண்டே அன்பையும், பண்பையும், பாசத்தையும், கருணையையும், சேவை மனப்பான்மையையும் ஊட்டி வளர்த்துள்ளனர். பரணிதரன் - ஈஸ்வரி தம்பதியினர்!

நேத்ரா... கருணையுள்ளத்திற்கு சொந்தக்காரி! தந்தை பரணிதரன் அரசு பள்ளியில் தமிழாசிரியராய் பணிபுரிகிறார். தாய் இல்லத்தரசி.

தங்களது மகளை ஒரு டாக்டராக்க வேண்டும் என்ற ஒரே குறிக்கோள்... அவர்களிடத்தில் இருந்தது. நேத்ராவும் வளர வளர அதே குறிக்கோளைக் கொண்டிருந்தாள்.

தான் டாக்டராகி தன்னிடம் வரும் நோயாளி

ஆர்.மகேஸ்வரி



களுக்கு வலிக்காமல் ஊசி போட வேண்டும். சிறு சிறு கசப்பில்லாத மாத்திரைகளை கொடுக்க வேண்டும் என்று சிறு வயதிலேயே எண்ணியிருந்த நேத்ரா... வளர வளர மருத்துவ தொழில் பெரிய அளவில் கார்ப்பரேட் தொழிலாக மாறி மேல் நாடுகளைப் போல, இணைய தளத்தில் கன்சல்டேஷனை பெறக்கூடியதாக மாறிப் போய்க் கொண்டிருந்ததைக் கண்டு சலிப்புற்றிருந்தாள்.

தான் டாக்டர் தொழிலை இன்முகத்தோடும்... சேவை மனப்பான்மையோடும் பார்க்க வேண்டும். ஏழையென்று வருபவர்களுக்கு இலவச மருத்துவம் செய்ய வேண்டும் என்றெல்லாம் அவளுள் பெரிய பெரிய லட்சியங்கள்.

அதுவும் தனது தொழிலை எந்தவித வசதியும் இல்லாமல் வருந்தும் கிராம மக்களுக்கோ அல்லது மலைப் பகுதி பழங்குடி மக்களுக்கோ அர்ப்பணிக்க எண்ணினாள்.

''கொஞ்ச நாட்கள் டாக்டர் ஜெகதீஷ்கிட்ட பயிற்சி எடுத்துக்கோ, நேத்ரா. அவன் என்னோட நண்பன்னு தெரியும். அவனும் உன் பெண்ணை ஹாஸ்பிட்டலுக்கு எப்போடா அனுப்பறேன்னு கேட்டு நச்சரிக்கிறான்! அவனுக்கு என்ன பதில் சொல்லட்டும், நேத்ரா?''

தந்தை பரணிதரன் கேட்க...

''பயிற்சியெல்லாம் ஜி.எச்ல கிடைக்கறத விடவா? தனியாரிடம் தேவையில்லப்பா!'' பட்டென்று சொன்னாள், நேத்ரா.

''அவன் சிறந்த மருத்துவன்! கைராசி மருத்துவன்னு மக்கள் கிட்ட பெயர் எடுத்தவன்! அவனிடம் போனால் கண்டிப்பா குணமாயிடும்னு மக்கள் கிட்ட அசைக்க முடியாத நம்பிக்கை! அவனது அணுகுமுறை, சிகிச்சை முறை பற்றியெல்லாம் பொறுமையையும் நீ கற்றுக் கொள்ளலாம், நேத்ரா! நீ என்ன சொல்றே...?''

''பொறுமை, சகிப்புத் தன்மை எல்லாவற்றையும் உங்களிடமிருந்து கற்றிருக்கிறேன்! நோய் பற்றியும், அதனைக் குணமாக்கும் முறையும் எனக்கு அத்துபடிதான்!''

''பின்னே என்ன செய்ய திட்டம்? வாடகைக்கு இடம் பார்க்கட்டுமா, நேத்ரா? தனியா கிளினிக் வைத்து பார்த்து கொள்கிறாயா...?''

''செய்யலாம்பா! என்ன அவசரம்? படித்து முடித்து விட்டு வந்த அலுப்பு உடம்பிலேயும், மனசிலேயும் தொக்கி நிற்குதுப்பா! கொஞ்சம் அதைப் போக்கிட்டு

அப்புறமா எதையும் சிந்திக்கலாமேப்பா!''

இப்படி நேத்ரா சொல்ல... தாய் ஈஸ்வரி கணவரைப் பார்த்து சொன்னாள்.

''நேத்ரா சொல்வதிலும் நியாயம் இருக்கப் போலதான் தெரியுதுங்க! பிள்ளை கஷ்டப்பட்டு படிச்சி முடிச்சிட்டு வந்திருக்கா! கொஞ்சம் ரிலாக்ஸ் பண்ணிக்கட்டும். மனம் புத்துணர்ச்சிக்குத் திரும்பட்டும்! பிறகு முழு நேரமாக கவனிக்கட்டும்!''

''உன் இஷ்டம், நேத்ரா!'' என்று சொல்லிவிட்டார் பரணிதரன்.

அப்பாவும் அவளும் பேசி ஒரு வாரமிருக்காது. அதற்குள் அந்த விளம்பரம் அவளை ஈர்க்க... அவளின் உடலும், மனமும் துள்ளி விட்டது.

சோர்வு இருந்த இடம் தெரியாமல் ஓடி ஒளிந்து கொண்டது.

'மலையடிவாரக் கிராமத்தில் சேவைக்காய் நிறுவியுள்ள எங்களின் மருத்துவமனையில் பணிபுரிய அன்புள்ளமும், கருணையும் மிகுந்த மருத்துவர்களும், செவிலியர்களும் தேவை' என்றும், எந்த தேதியில் நேர்முகத் தேர்வு என்றும் கூறியிருந்தார்கள்.

பரணிதரனிடம் அந்தச் செய்தியைக் காட்ட ...

''என்னம்மா இப்படி சொல்றே...? ரெஸ்ட் எடுக்கணும்னு சொன்னே! இப்போ எங்களையெல்லாம் பிரிந்து... முந்நூறு கிலோ மீட்டர் கடந்து அந்த இண்டர்வியூக்கு போகணுமாடா?''

''என்னப்பா தப்பு?''

''எங்களுக்கு நீ ஒரே செல்லப்பெண்! நினைவிருக்கட்டும்! உன்னைப் பிரிந்து நானும், உன் தாயும் எப்படி இருப்போம்? உன் திருமணம் வரையாவது நீ எங்களோடு இருக்கக்கூடாதா?''

அப்பா முகம் வாடிக் கேட்க...

''எனக்கு வேலை கிடைத்து விட்டால் நீங்களும் அங்கே அருகிலுள்ள பள்ளிக்கு மாறுதல் வாங்கிட்டு வந்துடுங்கப்பா! இந்த ஜன

''மன்னர் போர்க்களத்திலிருந்து ஏன் வெளிநடப்பு செய்கிறார்?''

''எதிரிப்படைகளிடம் தொடர்ந்து அவரால் அடி வாங்க முடியவில்லையாம்!''

-வே.ராம்குமார்
வேலூர்





நெருக்கடி, வாகனப்புகை, சுற்றுச்சூழல் மாசு, தூசு, ஆறாய் ஓடும் சாக்கடை, அசுத்தக் காற்று... எல்லாத்துக்கும் முழுக்குப் போட்டுட்டு அந்த மலையடிவார கிராமத்துக்கே வந்துடுங்க! இனிமேலாவது நகரத்தின் சந்தடியை விட்டுட்டு அமைதியா வாழலாம்ப்பா!''

நேத்ரா தந்தையிடம் கெஞ்ச...

''அந்த வேலை எவ்வளவு நாட்களுக்கு நிரந்தரம்? உன்னை ஒருவனுக்கு திருமணம் செய்து வைத்து கண் குளிர பார்க்க வேண்டாமா?''

பரணிதரன் கண்களில் பெரும் ஆசையை வழிய விட்டு கேட்க...

''எனக்கு திருமணம் தேவையில்லேப்பா!

மருத்துவ துறைக்கும், மக்கள் சமுதாயத்துக்கும்... என் எதிர்கால வாழ்க்கையை முதலில் அர்ப்பணிக்கணும் . அதுக்கப்புறம் மத்ததெல்லாம்!''

''நீ இப்படி பேசக்காரணம் ... நீ இன்னும் உன் மனம் கவர்ந்தவனைச் சந்திக்காததால்தான்!''

ஈஸ்வரி கொஞ்சம் கோபத்தோடு இடையில் புக...

''உனக்கு கற்பனை வளம் ஜாஸ்திம்மா!'' என்று நேத்ரா சிரிக்க...

''நிச்சயமா நேத்ரா! விரைவிலேயே உன் ஆளு உன் விழியில் வருவான்... உன் வழியில் விழுவான்! அவனை நீ நெஞ்சார நேசிப்பாய்! உன் நேசம்... திருமணம் என்ற அன்பு பிணைப்பில் பிணைக்கப்படும்!''

''அம்மா சீரியலெல்லாம் பார்த்துட்டு போர் அடிக்காதேம்மா! ப்ளீஸ்...''

''தொலைதூரம் பயணித்து இந்த நேர்முகத்தேர்வில் கலந்து கொள்ள வேணுமான்னு தோணுது எனக்கு.

ஈஸ்வரி மறுப்பாக கூற... நேத்ராவிற்கு லேசாய் கோபம் எட்டிப் பார்த்தது.

''வேலை எனக்கே கிடைக்கும்னு என்னம்மா நிச்சயம்? முயற்சி செய்து பார்ப்போமே! எனக்கும் காடு, மலை, வனம்னு சுத்தணும்னு ஆசையா இருக்கு! ரெண்டு இடம் இருக்காம்! தம்பி உதவ்யும் வரேன்னு பிராமிஸ் பண்ணியிருக்கான்!''

''ஒத்த பிள்ளையை பெத்த மனம் என்ன பாடுபடும்னு உனக்கெப்படி தெரியும்? பள்ளிப் படிப்பு, கல்லூரி படிப்பு எல்லாமே இந்த சென்னையில்தான் படிச்சே! நமக்குள்ளே இதுநாள் வரை பிரிவே ஏற்பட்டதில்லே!

உன்னைப் பிரிஞ்சி எப்படி நேத்ரா இருப்போம்? பெரிய பிரிவு வேதனை கொடுக்காதே, நேத்ரா!''

''எனக்கு திருமணம் செய்து வைக்கணும்னு ஒத்த கால்ல நிக்கிறீங்களே! அப்போ மட்டும் உங்களை பிரிஞ்சி போகமாட்டேனா...?''

நேத்ரா நறுக்கென்று கேட்க...

''உனக்கு இந்தச் சென்னையிலேதான் மாப்பிள்ளைப் பார்க்கப் போறோம்! அதுவும் வீட்டோட மாப்பிள்ளையா இருக்க சம்மதிக்கிற மாப்பிள்ளைக்குத்தான் உன்னைக் கொடுப்பேன்!''

''உங்களுக்கு ஆனாலும் பேராசைம்மா! பையனை பெத்தவங்க அப்படி நினைக்க மாட்டாங்களா? நானும் என் புருஷனும் தனிக்குடித்தனம் போயிட்டோம்னா என்ன பண்ணுவ?''

நேத்ரா சிரித்தபடி சொல்ல...

''ஏய் கள்ளி ... '' என்று ஈஸ்வரி மகளின் கன்னத்தில் கிள்ள...

அங்கே மகிழ்ச்சி அலையலையாய் பரவியது!

மாடியில் குளிர் நிலவு நடைபோடும் அழகை ரசித்துக் கொண்டிருந்த நேத்ராவை அப்பாவின் அழைப்பு குரல் எட்ட நினைவுகள் கலைந்தாள்.

''இதோ வரேம்பா...'' என்று மாடியிறங்கினாள்.

நேத்ரா ...தேவதையை ஒத்த பேரழகி!

அழகான குண்டு முகம்! அதில் கொஞ்சி விளையாடும் மீன் குஞ்சுகளாய் இரு நீண்ட நயனங்கள்! கதுப்பு கன்னங்கள்! அந்த கன்னங்களில் சிரிக்கும் போது சின்னதாய் விழும் கன்னக்குழி! மலராய் சிவந்த இதழ்களும் பளிச்சிடும் வரிசைப் பற்களும் யாரையுமே வசீகரித்து விடும்.

அவளைப் படைத்த பிரம்மனே... அவளை நிறுத்தி அவள் மேனியில்... முகத்தில் ... சின்ன திருத்தம் ஏதாவது செய்ய வேண்டுமா என்று ஆராய்ந்தால்...ம்கூம்... திணறத்தான் வேண்டும்! அத்தனை லட்சணமும் பொருந்திய பெண்ணவள்!

இளகிய மனதிற்கு சொந்தக்காரி!

சிறுவயதில் தனது பென்சில், நோட், புத்தகம் போன்றவற்றை இல்லாத மாணவர்களுக்கு கொடுத்து விட்டு வந்து விடுவாள்.

அவளின் இந்த இரக்க குணம் கண்டு தாயும், தகப்பனும் சந்தோசப்பட்டார்களே தவிர... கண்டிக்கவில்லை.

வறுமையில் உள்ள தோழிகளுக்கு பீஸ் கட்ட சொல்லுவாள்! தீபாவளி, பொங்கல் பண்டிகையின் போது உடை எடுத்து தரச் சொல்லுவாள்!

அவள் சொல்வதை இன்முகத்தோட செய்வார்கள்!

உதய்க்கு எவ்வளவோ செய்திருக்கிறாள்.

நேத்ராவும், உதய்யும் நல்ல நண்பர்கள்!

சந்தேகக் கண்ணோடு பார்க்கும் மனிதர்கள் கூட ...

பின்னாளில் அவர்களின் உண்மையான தூய்மையான நட்பு கண்டு அதிசயித்து இருக்கிறார்கள்!

மருத்துவக் கல்லூரியில் உதய்யின் நட்பு அவளுக்கு பாது



காப்பு வளையமாய் காத்தது.

காதலைச் சொல்லியும், தவறான கண்ணோடும் வந்த நிறைய பேரையும் அவள் புறமுதுகிட்டு ஓடச் செய்திருக்கிறாள்.

இது வரை எந்த ஒரு ஆண்மகனும் அவளை வசீகரிக்கவில்லை. அவளின் இதயத்தைச் சலனப்படுத்த வில்லை!

இனியா... ஒருவன் பிறந்து வரப்போகிறான்? அல்லது கண்ணில் தென்படப் போகிறான்? என்பது அவளின் உறுதியான நம்பிக்கை!

அதுவல்லாமல் அவள் இந்த மருத்துவத் தொழிலை ரொம்பவே நேசிக்கிறாள்!

அதற்கான முதல் முயற்சியாய் இந்த நேர்முகத்தேர்விற்கு சென்று ... அதில் வெற்றி பெற்று ... அந்த கிராமத்தில் பணிபுரிய ஆவல் கொண்டாள்.

அம்மா தோசையைத் தட்டில் வைத்து சாம்பார் ஊற்ற... சிந்தனையோடு உண்டாள் நேத்ரா.

''நேத்ரா... நீ நாளைக்கு போகத்தான் போறீயா...?''

ஈஸ்வரி முகம் வாடிக் கேட்க...

''அப்பா... அம்மாவை இப்படி தொண தொணக்க வேண்டாம்னு சொல்லுங்களேன்! எனக்கென்ன வயசாடிச்சு? அதுவும் இப்ப உடனடியா திருமணம் வேண்டாம்னு சொல்றேன்! மீண்டும் மீண்டும் அதே பேச்சையே பேசறாங்களே!''

''நீ இப்படி சொல்வது சரியில்லே, நேத்ரா! எங்க வம்சம் உன்னோட முடிஞ்சிடணுமா...? உன்னைக் கல்யாண கோலத்தில் பார்க்கணும்! கணவனோட சந்தோசமா வாழறதை ஆனந்தமா ரசிக்கணும்! உனக்கு பிறக்கும் பிள்ளைகளைத் தூக்கி வச்சி கொஞ்சணும்னு பெத்த மனம் ஏங்காதா...?''

பரணிதரன் சோகமாய் சொல்ல... நேத்ராவின் உள்ளம் சட்

''எதுக்கு ஜாமீன் வேண்டாம்னு சொல்ற''

''நான் சுத்த சைவம் எசமான் எனக்கு எந்த மீனும் பிடிக்காது''

-கு.பரமேஸ்வரி
பம்மல்



டென்று இளகிவிட்டது.

"என்ன நான் திருமணம் செய்துக்கணும்? அவ்வளவு தானேப்பா...?"

"ஆமா!"

"செய்துக்கிறேன்! ஆனால் அந்த ஆண் மகனை எனக்கு மனப்பூர்வமா பிடிக்கணும்! இந்த நேத்ரா மனகல சலனத்தை உண்டு பண்ற ஆள் இருக்கானா...? இல்லையா...? ன்னு பார்த்துடலாம்!

கட்டாயமாய் நீ அப்படி ஒரு ஆண்மகனைச் சந்திக்கத்தான் போறே. அதுவும் விரைவில்!"

ஈஸ்வரி அழுத்தமாய் சொல்ல...

"எனக்கென்னவோ நீ சொல்வதில் நம்பிக்கையில்லேம்மா!"

நேத்ரா உதடு பிதுக்கி ஏளனமாய் சொன்னாள்.

அவளின் நம்பிக்கையின்மையை உடைத்தெறிய ஒருவன் வரப்போகிறான் என்று அறியாமல்.

## 2

கல்வராயன் மலை!

அந்த மலைத்தாயின் மடியில் சுகமாய் துயில் கொள்ளும் நிலமகளின் முகத்தில் அன்பின் உயிர்நிலை மிளிர்கிறது!

அழகிய மலையடிவார கிராமம் ' சக்கரவர்த்திபுரம்' இயற்கையின் இனிய சூழலில் அமைந்திருக்கும் அந்த சுந்தரபூமி.... சொர்க்க பூமி...தன்னை காண வருவோரையெல்லாம் ... பச்சைக் கம்பளம் விரித்து குளுமையுடன் வரவேற்றுக் கொண்டிருக்கிறது.

எங்கும் பசுமை! எங்கும் செழுமை! காண்போரின் கண்களைக் கட்டியிழுக்கும்!

சிலு சிலுக்கும் சாரலும்... சலசலக்கும் காற்றும் நிலவும்... மலையும் மலைச்சார்ந்த, குறிஞ்சி பூமி!

இயற்கையும், மனிதனும் இணைந்து வாழ்கிற வாழ்க்கைக்கான சான்றாக 'சக்கரவர்த்திபுரம்' திகழ்கிறது.

அர்ஜுன் இயற்கை உயிராற்றல் வேளாண் பண்ணை' நம்மை அன்புடன் வரவேற்கும்!

அர்ஜுன் எம்.எஸ்.சி. அக்ரி முடித்து வாழையைப் பற்றி ஆராய்ந்து விவசாயத்திலே டாக்டரேட் பட்டம் பெற்றுள்ளான்!



இயற்கை வேளாண்மையை உயிர் மூச்சாய் கொண்டவன்!

அங்கே அவனுக்கு ஐந்நூறு ஏக்கருக்கு மேல் விவசாய நிலமிருக்கிறது.

வேற்றுமை பார்க்காது, வறுமையில் வாடும் 150 குடும்பங்களுக்கு இரண்டு ஏக்கர் நிலம் கொடுத்து அதே நிலத்தில் ஸ்டாங்கான வீடும் கட்டிக் கொடுத்திருக்கிறான். நிலம் அர்ஜுனுக்கு சொந்தம்! அதில் விதைத்து, அறுத்து உண்ண அவர்களுக்கு உரிமையுண்டு.

அவர்களுக்கு காளைமாடு, பசுமாடுகள் வாங்க உதவி செய்துக் கொண்டிருக்கிறான்.

அவர்களுடைய வாழ்வின் ஜீவநாடியே அர்ஜுன்தான்! அவர்கள் எந்த குறையுமின்றி நிம்மதியாய் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

அவன் இருநூறு ஏக்கரில் விவசாயம் செய்கிறான்.

அந்த மக்களே அவன் பண்ணையின் விவசாய வேலைகளுக்கு வருகிறார்கள். நிறைவான கூலியைப் பெற்று இன்பமாய், சுய கௌரவத்தோடு வாழ்கிறார்கள்.

அவர்களின் பிள்ளைகள் படிக்க தரமான பள்ளியைக் கட்டி நிர்வகித்து வருகிறான்.

தொண்டுகள் பல ஆற்றி வருவதுடன்... அங்கே ஆதரவற்ற குழந்தைகளுக்கான இல்லம், முதியோர்களுக்கான இல்லம் என்று செயல்படுகிறது.

அங்குள்ளவர்கள் நோய், நொடி என்றால் இரண்டு கிலோமீட்டர் பயணித்து எடுத்தவாய் நித்தம் பிரைமரி ஹெல்த் சென்டருக்கு போக வேண்டும். இல்லத்து பிள்ளைகள், பெரியவர்களுக்கு ஒரு நோய் என்றாலும் அங்கேதான் அழைத்து செல்ல வேண்டும்.

அதனால், அந்த கிராம மக்களுக்கும், இல்லத்தவர்களுக்காகவே இலவச மருத்துவமனையைக் கட்டியுள்ளான்.

இரண்டு டாக்டர், இரண்டு நர்ஸ் போதும்.

அதற்கான நேர்முகத்தேர்வு பத்து மணிக்கு உள்ளது.

அதற்குள் பண்ணையையும், அன்றைய வேலைகளையும் பார்த்து விட்டு வர பைக்கை எடுத்துக் கொண்டு கிளம்பினான் அர்ஜுன்.

அர்ஜுன் அங்குள்ள மக்களுக்கு இறைவன், தேவதூதன் என்றே சொல்லலாம்.

இயற்கை விரும்பி!

செயற்கை அவனுக்கு எதிரி!

இயற்கை உரங்களைப் பயன்படுத்தி ... இயற்கை வேளாண்மை செய்து கொண்டிருக்கிறான்!

விவசாயிகளுக்கு அங்கே வாரம் ஒருமுறை சுற்றுச்சூழல் காப்புப் பயிற்சி, மண் வளக்காப்புப் பயிற்சி, நீர் மேலாண்மை குறித்த பயிற்சி, இயற்கை கலப்பு உரத்தயாரிப்பு பயிற்சி, இயற்கை பூச்சிக் கொல்லி தயாரிப்பு பயிற்சி, பஞ்சகவ்யா, அமுதக் கரைசல், தேமோர்

கரைசல், சொல்லுயிரி, மண்புழு உரத்தயாரிப்பு பயிற்சி என்று அனைத்து வகையான பயிற்சிகளும் அளிக்கிறான்!

விவசாயிகளும், வேளாண்மையைப் பயிலும் மாணவர்களும் வந்து.. ஆர்வத்தோடு பயிற்சி பெற்று பயனடைகின்றனர்.

செயற்கை உரம், பி.டி.நஞ்சுணுபுகுத்திய விதைகளை விடுத்து ... இயற்கை உரத்தையும், பாரம்பரிய விதைகளையும் பயன்படுத்தி விவசாயத்தை மேற்கொண்டனர் விவசாயிகள்.

அடுத்ததாய் பள்ளிகளுக்கு சென்று சுற்றுச்சூழல் பாதுகாப்பு, இயற்கை நேசிப்பு, காடு வளர்ப்பு, பசுமை நேசிப்பு, தாவரங்களின் நன்மைகள் என்ற தலைப்புகளில் சொற்பொழிவு ஆற்றிவிட்டு வருகிறான்.

அவனுடைய விவசாய நிலத்தில் தென்னை, வாழை, மா, பலா, மாதுளை, கொய்யா அத்தனையும் பல ஏக்கர்களில் விரிந்து பரந்து கிடக்கிறது.

நெல்லும், கரும்பும், சூரிய காந்தியும், கம்பும், சோளமும் பல ஏக்கர்களில் பரந்து ரம்யமான தென்றலுக்கு தலையசைத்துக் கொண்டிருக்கிறது.

ஒரு பக்கம் பெரிய மூலிகைத் தோட்டம் பரந்திருக்கிறது.

ஒரு பக்கம் பெரிய கொட்டிலில் பசுமாடுகளின் மூலம் போதுமான பால் கிடைத்துக் கொண்டிருக்கிறது.

அர்ஜுன் அழகன்... ம்கும்... பேரழகன்! பேராண்மைக்காரன்! பேரறிவு படைத்தவன்! பேருள்ளம் கொண்டவன்!

தாத்தா சக்கரவர்த்தி போல அசாத்திய உயரம் கொண்டவன். பரந்து விரிந்த நெஞ்சம்...

அந்த உயரமும் காணும் பெண்களை அப்படியே வாரி சுருட்டி தன் வசம் வைத்துக் கொள்ளும்!

அந்த அடர்ந்த மீசையும்... அழுத்தமான உதடுகளும் ... கூர்மையான பார்வையும் காண்போரின் புருவத்தை உயர வைக்கும்!

இயற்கை காற்றை சுவாசித்து... இயற்கை உணவை உண்டு ... கடுமையாய் உழைத்து உரமேறிய கட்டுடலுக்கு சொந்தக்காரன், அர்ஜுன்.

இளவரசன் கணக்காக இருப்பான்.

வயது முப்பத்தைந்து நடக்கிறது. இன்னும் திருமணமாகவில்லை.

பண்ணையிலிருந்து வரும் அனைத்து வருமானத்தையுமே சமூதாயத்திற்கே செலவிடுகிறான்.

அர்ஜுனின் கடும் உழைப்பால் கல்வராயன் மலை, அதைச் சுற்றியுள்ள சமவெளிகள் அத்தனையும் மரங்களோடு பசுமையாய் காட்சியளிக்கிறது. எந்த பகுதியில் மழை பெய்யாவிட்டாலும் அங்கே ஆண்டுக்கு பரவலான நல்ல மழை பொழியும்.



மக்களும் செழித்தனர்.

மூலிகைத் தோட்டம், பழத்தோட்டம், நெல் வயல், சோயா தோட்டம் என்று ஒரு சுற்று சுற்றிவிட்டு...

அங்கே குடியிருக்கும் மக்களையும் நலம் விசாரித்தான்.

ஜாதி, இன, மத, வர்க்க பேதமின்றி ஒற்றுமையோடு வாழும் மக்களைப் பார்க்கும் போது இதயத்திற்கு நிறைவாய் இருந்தது.

கடைசியாய் பங்களாவிற்கு அருகில் இருந்த இல்லத்து குழந்தைகளைக் கொஞ்சி விட்டு...

முதியோர்களின் நலம் விசாரித்து விட்டு... அவர்களின் பாசத்தில் உள்ளம் நெகிழ்ந்து குதூகலமாய் பங்களாவிற்கு வர...

தேவேந்திரனும், வசந்தியும் எதிர்கொண்டனர்.

''மணி ஒன்பதரை ஆகுது.

பத்து மணிக்கு இண்டர்வியூன்னு விளம்பரம் கொடுத்திருக்கே! பத்து பேருக்கும் மேல் வந்திருக்காங்க! அவங்களைக் சான்பரன்ஸ் ஹால்ல உட்கார வைத்துஇருக்கேன்!''

தேவேந்திரன் சொல்ல...

''இதோ குளிச்சிட்டு ரெடியாகிடறேம்பா! அம்மா,, அவங்களுக்கு குடிக்க, உண்ண ஏதாவது கொடுத்தீங்களா...?''

''சாப்பிட ஏதும் வேண்டாம்ன்னு சொல்லிட்டாங்க, அர்ஜுன், காபி மட்டும் போதும்ன்னு சொல்ல... கயல்விழி எடுத்துட்டுப் போய் இருக்கா!'' வசந்தி கூற....

''ரொம்ப நல்லதும்மா...! இதோ நொடியில குளிச்சிட்டு வந்துடறேன்...!''

பாத்ரூமிற்குள் ஓடினான்.

அர்ஜுன் திரும்பி வந்தபோது.. அங்கே தாத்தா காத்திருந்தார்.

''என்ன தாத்தா.. சாப்பிட்டாச்சா..?''

''இவர் போலி டாக்டர்னு எப்படிச் சொல்றே?''

''பேஷண்ட்டுக்கு சிலிண்டருக்குப் பதில் சமையல் கேஸ் சிலிண்டரை வெச்சிருக்கிறாரே!''

-எம்.அசோக்ராஜா
அரவக்குறிச்சிப்பட்டி



''ம்.... நேரத்துக்கு சாப்பிடலேன்னா...படபடன்னு மயக்கமும், களைப்பும் வந்து சாய்க்குதே, அர்ஜுன், நான் என்ன செய்ய?''

''பிபி, சுகர்ன்னு இருக்க உடம்புக்கு சரியான நேரத்துக்கு சாப்பிடறதுதான் நல்லது. பேரனுக்காக காத்திருக்க டுமச்சான வேலையெல்லாம் செய்யாத உங்களை ரொம்பவே பிடிச்சிருக்கு, தாத்தா!''

சக்ரவர்த்தியின் முறுக்கிய மீசையை மேலும் முறுக்கிவிட்டு கைகழுவிக் கொண்டு டைனிங் டேபிளுக்கு வந்தான்.

அர்ஜுன் அவசர அவசரமாய் உண்ண...

''என்ன அவசரம்? மெதுவா சாப்பிடுப்பா!''

வசந்தி அன்போடு சொல்லிவிட்டு... அர்ஜுனின் தலையைப் பாசமாய் கோதி.... முன்னுச்சி முடியைச் சிலுப்பி அழகு பார்க்க..

''அவங்கயெல்லாம் காத்திருக்காங்க இல்லையாம்மா? டாக்டர்ஸ் கடவுளுக்கு இணையானவங்க! போற உயிரையும் மீட்டு கொண்டுட்டு வந்து காப்பாத்தறவங்க! அப்படி ஒரு புனிதமான தொழிலைச் செய்யற அவங்களை நான் காக்க வைக்கலாமாம்மா? ம்?''

''சரிதான், அர்ஜுன்! ஆனால் இப்படி அவசர கதியில் அள்ளிப் போட்டுட்டால் உடம்பு கெட்டுப் போகாதா, அர்ஜுன்?''

தேவேந்திரன் வந்து தோள்மீது கைவைத்து பாசமாய் சொல்ல....

இருவரின் அக்கறையில், பாசத்தில் பனியாய் நெகிழ்ந்தான்.

''இப்படி ஒரு பாசமான தாயும், தகப்பனும், தங்கையும் கிடைக்க... நான் ஏதோ போன ஜென்மத்தில் தவம் செய்திருக்கேன்! அதான் கடவுள் உங்களை எனக்கு வரமாய் கொடுத்திருக்கிறார்!''

''உன்னைப் போல புனிதமான, அன்பான நல்ல பிள்ளைக்கிடைக்க நாங்களுமே கொடுத்து வச்சிருக்கோம்பா, அர்ஜுன்!''

வசந்தி கண்களில் வழிந்த நீரை முந்தானையில் துடைக்க..

''என்னம்மா இது அழுதுட்டு...? ம்? கண்ணைத் துடையுங்க?'' அர்ஜுன் வேகமாய் அதட்டினான்.

அர்ஜுன் தட்டில் கை கழுவ... அவன் கைப்பற்றி டவல் எடுத்துக் கொடுத்தான் வசந்தி.

பங்களாவை ஒட்டியிருந்த கான்ப்ரன்ஸ் ஹாலுக்கு நடக்க.. கயல்விழி எதிர்பட்டாள்!

கயல்விழிக்கு சற்று கால் ஊனம்! லேசாய் விந்தி விந்தி நடப்பாள்!

''கயல்... இண்டர்வியூக்கு எத்தனை பேர் வந்திருக்காங்க?''

''ஆண் ஏழு, பெண் நான்கு என்று மொத்தமே பதினோரு பேர் தான் அண்ணா! அத்தனைப் பேரும் இளைஞர், இளைஞிகள்! சமீபமாய் படிப்பை முடித்திருப்பார்கள் போல!''

''கண்ணன் அங்கே தானே இருக்கான்?''

''ஆமாண்ணா!''

''சரி நீ போம்மா!'' என்று கூறிவிட்டு கான்ப்ரன்ஸ் ஹாலுக்குள்



பிரவேசிக்க... அனைவரும் எழுந்து வணங்கினர்.

அவனைக் கண்டு ஆச்சரியத்தில் ஒரு ஜோடி விழிகள் விரிந்தன. அந்த அழகிய விழிகளுக்கு சொந்தக்காரி நேத்ரா.

அங்கே வந்து இறங்கியதும் அங்கு நிலவிய இயற்கை, சுற்றுச்சூழல், பசுமை, தென்றலின் இனிமை, பனிச்சாரலின் குளுமை என்று கண்டு அதிசயித்துப் போனவள்... அர்ஜுனைப் பற்றி கண்ணன் விளக்கியதைக் கேட்டு... பேராச்சரியப்பட்டுப் போனாள், நேத்ரா.

அவனின் சேவையைக் கேட்டு நெகிழ்ந்த இதயம்.. அவனின் தோற்றம், அழகு, கம்பீரம், ஆண்மைகண்டு மேலும் நெகிழ்ந்து.. நெகிழ்ந்து... பாதைப் போட்டு.. பயணப்பட்டு... அர்ஜுனிடம் போய்விட்டது!

'நேத்ரா இனி இதயமில்லாமல் எப்படி இயங்குவாள்?'

'இதயத்தைத் திருடியவன் அதற்கு கைமாறாய் அவன் இதயத்தைக் கொடுத்தால்தான் அவளால் சுவாசித்தல் தொழிலைச் செய்து... உயிர்வாழ முடியும்!'

'கடவுளே... எப்படியாவது இங்கே எனக்கு வேலைகிடைக்க வேண்டும்?'

'என் இதயம் கவர்ந்தவனின் அருகில் வேலை செய்யும் பாக்கியத்தைக் கொடு!'

'அம்மா.. நீ தீர்க்கதரிசிதான்! இனியொருவன் பிறந்து என் இதயத்தை கவரப்போகிறானா...? என்று இறுமார்த்திருந்த என்னிடம் 'உன்னைக்கவர ஒரு மன்மதன் விரைவிலேயே உன் வழியில் வருவான்... உன் விழியில் விழுவான்' என்றாயே...

இதோ.. இங்கே.. முந்நூறு கிலோ மீட்டருக்கு அப்பால்.... நல்லிதயம் படைத்த.. அற்புதமான இயற்கை வேளாண்மை விவசாயியாக என்னவன் வாழ்ந்து கொண்டிருக்கிறானே!'

'அம்மா... என் இதயத்தில் பெரும் சலனம்.. ! அந்த சலனத்தை ஏற்படுத்தியவன், அர்ஜுன்!'

'அர்ஜுன், அர்ஜுன்...அர்ஜுன்' என்று அவள் இதயம் அவன் பெயரையே மனனம் செய்தது.

'அர்ஜுன்.. உன் மனதில் யாராவது இருக்கிறார்களா?'

'இல்லையென்றால், உனக்கு என்னைப் பிடிக்குமா, செல்லக்குட்டி?'

'சலனம், சஞ்சலம், கண்டதும் காதல், நேசம் அத்தனையும் பொய்யென்று... காதலித்தவர்களைக் கண்டு நகைத்திருக்கிறேன், அர்ஜுன்!'

'அது உண்மைதான் என்று எனக்கு பாடம் கற்பித்திருக்கிறாய் நீ!'

உதய் உள்ளே போய் வந்ததும்.. நேத்ராவை கண்ணன் பலமுறை அழைக்க.. நேத்ரா நினைவிலிருந்து நிஜத்திற்கு வந்து... அவசர அவசரமாய் உள்ளேப் போனாள்.

அவன் தலைக்கு மேலே சுவரில் இயற்கை வேளாண்மையின் தந்

தையான 'மசானபுகோகா' படம் பெரிய அளவில் மாட்டப்பட்டு இருந்து- ஒரு ஜப்பானியர் அர்ஜுனின் இதயத்திற்குள்! ஆஹா.. என்ன அற்புதம்!

அர்ஜுன் எதிர் இருக்கையைக் காட்ட... நேத்ரா அமர்ந்தாள்.

''உங்க பேர் நேத்ரா! ஊர்?''

''சென்னை''

''ஓ... மேடம்.. அவ்வளவு தொலைவிலிருந்தா வரீங்க?''

அர்ஜுன் ஆச்சரியப்பட்டு அவளின் கண்களை மலர்ச்சியுடன் நோக்க...

நேத்ரா... அர்ஜுனின் மலர்ந்த விழிகளுக்குள் தடுமாறி விழுந்து விட்டாள், இனி எழவே முடியாத அளவு!

''பள்ளிப்படிப்பு..'' என்று அவளின் சர்டிபிகேட்டைப் புரட்ட... நேத்ரா சொன்னாள்.

''சென்னையில்தான், சார்! பனிரெண்டாம் வகுப்புல நல்ல மார்க் எடுக்க.. மெரிட்ல மருத்துவம் படிக்க இடம் கிடைச்சது, படிச்சேன், சார்!''

''ஓ, கவர்ன்மெண்ட் ஸ்கூல்ல படிச்சி... இந்த அளவு முன்னேறி யிருக்கீங்களே, மேடம்... கல்லூரி படிப்பில் கோல்ட் மெடலிஸ்ட்... வாவ்.. ரியலி டேலண்ட்டு கேர்ள்தான்! பென்டாஸ்டிக்!''

அர்ஜுன் ஆச்சரியப்பட்டு மெல்ல புன்னகைக்க... அந்த புன்ன கையின் விளைவாய் வலது கன்னத்தில் சின்னதாய், அழகாய் குழி விழ... அந்தக் கன்னக்குழியையே ஆசையாசையாய் நோக்கிக் கொண் டிருந்தாள், நேத்ரா.

அவன் அவளின் பார்வையின் அர்த்தம் புரியாமல்...

''என்ன மேடம்..?'' என்று கேட்க.....

''எல்லாமே மோசம் அல்ல''

''அரசு பள்ளிகளிலும் வருஷத்துல 100 சதவீதம் தேர்ச்சி காட்டும்

''டாக்டர் நீங்க முதல்ல எழுதின மாத்திரையும், கடைசியா எழுதின மாத்திரையும் தான் கிடைக்கலே...''

''முதல்ல எழுதினது தேதி... கடைசியா எழுதினது என் கையெழுத்து...''

கே.பிரசன்ன குமார்
குடந்தை





பள்ளிகள் நிறைய இருக்கின்றன சார்! இதை சொல்ல வந்தேன்.''

''நான் சொல்வது மிக முக்கியமானது. இந்த மருத்துவமனை சேவைக்காக ஏற்படுத்தப்பட்டது. வியாபார நோக்கம் கிடையாது. எங்க பள்ளி குழந்தைகள், இல்லத்து குழந்தைகள், முதியவர்கள், இங்கு குடியிருக்கிற விவசாயிகள், சுற்று கிராமத்து மக்கள் என்று அனைவரின் நலன் கருதி நான் காட்டிய மருத்துவமனை இது! உங்க விடம் கருணையும், ஜீவகாருண்யமும், இரக்கமும் மேலோங்கி இருக்க வேண்டும்! இருந்தால்தான் இங்கு பணி புரியவதில் அர்த்தம் இருக்கும்''

அர்ஜுன் கேட்க.. நேத்ரா

''புரிகிறது சார்'' என்றாள்.

''சரி நீங்க எதிர்பாக்கிற சம்பளத்தை இதில் எழுதி கொடுத்துட் டுப்போங்க!''

அவள் அந்த வெள்ளைத்தாளை வாங்கி ஏதோ கிறுக்கி அவனி டம் நீட்டிவிட்டு... நன்றி சொல்லி வெளியேறினாள், வேலை கிடைக் குமோ.. கிடைக்காதோ.. என்ற தவிப்புடன்.

அவளுக்கு இனிமையான ஆச்சரியம் காத்திருக்கிறது என்று அறி யாமல்!

## 3

இண்டர்வியூக்கு வந்திருந்தவர்கள் எழுதிக் கொடுத்திருந்த வெள்ளைத் தாட்களைப் பிரித்துப் பார்த்தான். எல்லோரும் ஐம்பதா யிரம், அறுபதாயிரத்திற்கு மேல் சம்பளம் வேண்டும் என்று எழுதி யிருந்தனர்.

உதய்... 'உங்களின் விருப்பம்போல சம்பளம் தரவும்' என்று எழு தியிருந்தான்.

நேத்ரா எழுதிய தாளை எடுத்து பார்த்தான்.

''இங்கு நிலவும் இயற்கை சூழலையும், பாசமான மனிதர்களை யும் எனக்கு ரொம்பவே பிடித்திருக்கிறது. உண்ண உணவு, வசிக்க இருப்பிடம் மட்டும் கொடுத்தால் போதும்! இங்குள்ளவர்களுக்கு இலவசமாய் சேவை செய்யக்காத்திருக்கிறேன்! சம்பளம் என்று எது வுமே வேண்டாம்!''

அர்ஜுனுக்கு நேத்ராவை நினைத்து ஆச்சரியமாய் போய்விட்டது.

'இந்தக் காலத்தில் இப்படி ஒரு எளிய, அபூர்வ பெண்ணா..? சம்

பணத்தை விரும்பாத மருத்துவப் பட்டதாரி இருப்பார்களா?'

மருத்துவம் படித்தவர்கள் 99 சதவீதம் பேர் சம்பாதிக்க ஆசைப் பட்டவர்களைத்தான் அவனும் பார்த்திருக்கிறான்! அவர்கள் மத்தியில்... ''சம்பளம் வேண்டாம்... உண்ண உணவு போதும்... வசிக்க இருப்பிடம் கொடு... மக்களுக்கு இலவசமாய் சேவை செய்கிறேன்'' என்கிறாள்!'

'இந்த தூய மனம், தாராள குணம், அழகான பண்பாடு... யாருக்கு இருக்கும்?

'நிச்சயம் அவள் நல்லப் பெண்ணாய் தான் இருப்பாள்!'

மிக மிக எளிமையாய் எந்த அலட்டலும் இல்லாமல்... கண்ணியமானத் தோற்றத்தோடுதான் இருக்கிறாள்!

அரசு பள்ளியில் படித்து... பெரிய மருத்துவராய் ஆகியிருக்கிறாள்! கிரேட்!

அரசு பள்ளி என்றதும் அவன் கண்களில் சட்டென்று கண்ணீர் சுரந்தது!

ஏதேதோ ஞாபகங்கள் நினைவைக் காயப்படுத்தின! கண்களைக் கரைய வைத்தன.

கொஞ்ச நேரத்தில் பொங்கிய கண்ணீர் மீண்டும் உள்ளிறங்கியது! காயத்தைக் கொடுத்த நினைவுகளைப் புறந்தள்ளி நிகழ்வுக்கு வந்தான்!

கண்ணனை அழைத்தான். அவன் வந்ததும்...

''கண்ணா.. உதய், நேத்ரா ரெண்டுபேரையும் உள்ளே அனுப்பு. மீதி பேருக்கு லாரி சொல்லி வீட்டுக்கு அனுப்பிடு''

கொஞ்ச நேரத்தில் கண்ணன் வந்து ''பாஸ் உங்களை உள்ளே கூப்பிடறார்!'' என்று கூற...

நேத்ரா உள்ளுக்குள் துள்ளிவிட்டாள்.

உதய்யைப் பார்த்து புன்னகைத்தாள். இருவரும் உள்ளேப் போக....

'உட்காருங்க, சார்! மேடம்... நீங்களும்தான்!'' என்று சீட்டைக் காட்ட இருவரும் அமர்ந்தார்கள்..

''ரெண்டு பேருமே சென்னை.. ?ம்?''

''ஆமா சார்... பக்கத்து பக்கத்து வீடும் கூட!''

''சென்னை மருத்துவ கல்லூரியில படிச்சிருக்கீங்க? வருஷம் எல்லாம் ஒண்ணாவே இருக்கு!''

''சிறுவயது முதற்கொண்டு நல்ல நண்பர்களும் சார்!''

''கிரேட்! நீங்க மகப்பேறு மருத்துவர்! இவர் பொது நல மருத்துவர்! ரெண்டு பேரும் எங்க ஆஸ்பிட்டலுக்கு வேண்டும்!''

''நிச்சயமாவா சார்? ரொம்ப சந்தோஷம் சார்!'' நேத்ரா ஆனந்தமாய் சொன்னாள்.

''உங்க விருப்பம்போல சம்பளம் கொடுங்கன்னு சொன்ன உதய்



சாரை பிடிச்சிருக்கு! சம்பளம் வேண்டாம்னு உண்ண உணவு, வசிக்க இருப்பிடம் கொடுத்தால் இலவசமாய் பணிபுரிய காத்திருக்கிறேன் என்ற நேத்ரா மேடத்தை ரொம்பவே பிடிச்சிருக்கு!''

அர்ஜுன் சொல்ல... நேத்ராவின் இதயத்திற்குள் பனிமழை சில்லென்று பொழிந்தது.

''சிம்பிளி நேத்ரா மேடம்... நீங்க வெரி வெரி கிரேட் தான் யாருக்கு வரும் இந்த தயாள குணம்.....? இந்த நவநாகரீக உலகில் பணத்தின் பின்னே செல்பவர்கள்தான் அதிகம்! குணத்தின் பின்னே செல்பவர்களை விரல்விட்டு எண்ணிடலாம்!''

''உங்களைப் பற்றி இப்போ கொஞ்சமாத்தான் கேள்விப்பட்டேன், சார்! உங்களோட கம்பேர் பண்ணும் போது என்னோட சேவை இன்னும் தொடங்கவே இல்லை'' என்று நேத்ரா நெகிழ...

''நான் செய்யறேன்னா இவர்கள், என் மக்கள் நீங்க?''

''மக்கள்ல என்ன என் மக்கள்... உங்க மக்கள்? எல்லோரையுமே நம் மக்களா நினைச்சால் இது சாத்தியம்தான் சார்!''

''உங்க நல்ல மனசுக்கு பட்டுக்கம்பளம் விரித்து வரவேற்க காத்திருக்கேன், மேடம்! ஆனால், வயது பெண்ணை சம்பளம் இல்லாமல் வேலை வாங்கறோமேன்னு என் மனசாட்சி என்னை இடிக்கும்! அதனால் நான் கொடுக்கும் சம்பளத்தை நீங்க ஏத்துக்கணும்!''

அர்ஜுன் உறுதியாய் சொல்ல...

''சரி கொடுங்க! அதை நான் வேற விதமா பயன்படுத்திக்கிறேன்!'' என்றாள் நேத்ரா.

''எங்க நேத்ராகிட்ட நிறைய நல்ல குணங்கள் இருக்கு, சார்! அதை நீங்க ஒவ்வொன்றாக கண்டால்... ஆச்சரியத்துடன் உச்சிக்கே சென்றுவிடுவீர்கள்''

உதய் நேத்ராவைப் பற்றி சிலிர்த்து சொல்ல...

''உதய்க்கு எப்பவுமே என் புராணம் பாடினாத்தான் அன்றைய பொழுது நல்லாவே போகும்! ஏய் உதய்... சும்மா இருக்க மாட்டயா...?''

நேத்ரா உதய்யைப் பார்த்து அதட்டினாள்.

''உங்கள் வேலைக்கான உத்தரவை கண்ணன் பிரிண்ட் செய்து கொடுத்துடுவான்! கையெழுத்துப் போட்டு கொடுத்துடுங்க!''

''ரொம்ப நன்றி சார்!'' இருவரும் ஒரேக்குரலில் சொல்ல..

''நன்றியெல்லாம் எதுக்கு? அந்நியர்களுக்குத்தான் நன்றியை மறக்காமல் தெரிவிக்கணும்!''

இருவரும் புரியாமல் கேள்வியாய் பார்க்க....

''இன்றிலிருந்து நானும் உங்களுடைய தோழன்!''

அர்ஜுன் சொல்ல... உதய், நேத்ரா இருவரும் அகமகிழ்ந்து போனார்கள்.

''பங்களாவை விட்டு சற்று தள்ளி ஒரு பெரிய கெஸ்ட்ஹவுஸ்

இருக்கு அங்கே தங்கிக்கிறீங்களா? இல்ல... நம்ம பங்களா மாடியில் பெரிய பெரிய அறைகள் இருக்கு. மாடிக்கு போக வழி வெளியே யும் இருக்கு! அதில் தங்க விருப்பமா...? ம்..''

''பங்களா மாடியிலே தங்கிக்கிறோம், சார்!''

நேத்ரா முந்திக் கொண்டு சொன்னாள். என்றும் இல்லாமல் அவள் முகத்தில் தனி களை வந்ததை உதயும் கவனிக்காமல் இல்லை!

''சாப்பாடு, டிபன் எல்லாமே நேரத்துக்கு மாடிக்கு வந்துடும்! உங் களுக்கு ஒரு குறையும் இல்லாமல் நான் பார்த்துக்கிறேன்!''

''தேங்க்யூ, சார்!''

''அதற்கு கைமாறா.. நீங்க அர்ப்பணிப்பு உணர்வோட எங்க மக் களுக்கு மருத்துவம் பார்க்க வேண்டும்!''

''நிச்சயமாய், சார்!''

''இன்னும் ஒரு வாரத்தில் மருத்துவமனை திறப்பு விழாவுக்கு ஏற்பாடு செய்துடறேன்! எல்லாம் முடித்துவிட்டு தகவல் தரேன் வந் துடுங்க''

இருவரும் தலையாட்டினர்.

மூவரும் வெளியில் வந்து நடந்தார்கள்.

''இந்தக் காலத்தில் இப்படி ஒரு அபூர்வமான இளைஞனைப் பார்க்கறதுக்கு ரொம்ப பெருமையாகவும், சந்தோஷமாகவும் இருக்கு சார்! மருத்துவம், பொறியியல், ஐ.ஏ.எஸ், ஐ.பி.எஸ்., ஐ.எப்.எஸ்.ன் னும், கம்ப்யூட்டர்ங்கிற மாய உலகிற்கும் அடிமையாகி இருக்கற இந் தக் காலத்து இளைஞர்கள் மத்தியில் இயற்கை விவசாயம் செய்யற உங்களைப் பார்க்க அதிசயமாயிருக்கு சார்!''

உதய் மனப்பூர்வமாக சொல்ல... அதை மோதிப்பதைப் போல அர்ஜுன் சின்ன புன்னகை ஒன்றைச் சிந்தினான்.

வீட்டிற்குள் அழைத்துபோய் ஹால் ஷோபாவில் அமர வைத் தான்.

''இவங்க ரெண்டு பேரையும்தான் தேர்ந்தெடுத்திருக்கியா, அர் ஜுன்?''

தேவேந்திரன் கேட்க..

''ஆமாம்ப்பா!'' என்றான்.

''இவங்க ரெண்டு பேருக்கும் அர்ப்பணிப்பு உணர்வு, இரக்கம், உயர்ந்த குணம், உயிர்களிடத்து அன்பு, கருணை என்று மேலோங்கி இருக்குப்பா! எல்லோரும் சம்பாதிக்கவே மருத்துவம் படிச்சிட்டு வர.... இவர்கள் சேவை செய்யவே இந்தப் படிப்பைத் தேர்ந்தெடுத் துப் படிச்சிருக்காங்க!'' என்ற அர்ஜுன் இருவரைப் பற்றியும் சொன் னான்.

''நேத்ரா மேடம்... கிரேட் தானேப்பா...? மலர்களில் குறிஞ்சி தான் அபூர்வ மலர்! பெண்களிலும் நேத்ரா போல அபூர்வ பெண்கள் இருக்காங்கன்னு நினைக்கும்போது ரொம்ப சந்தோஷமா இருக்



குப்பா!''

அர்ஜுன் சிலாகித்து சொல்ல...

''என் மகன் யாரையும் சட்டென்று புகழமாட்டாம்மா! உன்னைப் புகழறான்னா உன்னிடம் உள்ள அந்த நல்ல குணத்தை, மனத்தை இனம் கண்டு கொண்டது தான் காரணம்!''

தாத்தா சக்ரவர்த்தி அருகில் வந்து நேத்ராவை உற்றுப் பார்த்து விட்டு...

''நல்ல மனமும் உன்னிடம் இருக்கு!

பேரழகும் உன்னிடம் புதைந்து கிடக்கு! இந்த அழகு பெட்ட கத்தை மாலையா சூடிக்க யாருக்கு அதிர்ஷ்டம் இருக்கோ!'' என்றார்.

'உங்க பேரனுக்கு அந்த அதிர்ஷ்டம் இருக்கணும்ன்னு இறை வனை வேண்டிக்கங்க, தாத்தா!'

நேத்ரா மனதிற்குள் சொல்லிக் கொண்டாள்.

''அர்ஜுன்! முதியோர் இல்லம் வரைக்கும் போயிட்டு வரேன்! அவங்களோட கொஞ்ச நேரம் பேசிட்டு இருந்தால் எனக்கும் மகிழ்ச்சி. அவங்களுக்கு உற்சாகம் ஊற்றா பொங்கிடும்! எல்லோரும் அங்கே என்னை எதிர்பார்த்துட்டு இருப்பாங்க!''

''தாத்தா சாப்பிட்டுட்டு போங்களேன்!''

''வந்து சாப்பிடறேன், அர்ஜுன்! கயல்விழி இப்போதான் பெரிய டம்ளர் நிறைய ஆப்பிள் ஜுஸ் கொடுத்தாள் வயிறு புல்!'' என்று கூறி விட்டு வெளியேறிவிட்டார்.

''சாப்பிடலாமில்லையா...?''

அவர்களைப் பார்த்து அர்ஜுன் கேட்க...

''இப்போதா...? மணி பனிரெண்டுதான் ஆகுது! நாங்க கிளம்பறோம், சார்!''

உதய் சொல்ல....

''அதெல்லாம் முடியாது! நீங்க சாப்பிட்டுவிட்டுதான் போக ணும்!''

''மேக்கப் மேன் ஏன் அடிக் கடி லீவு போட்டுடுறார்?''

''ஒவ்வொரு தடவையும் மேக் கப் போட்டு முடிஞ்சதும் பயத் தில் அவருக்கு ஜுரம் வந்திடு தாம்!''

-எம். அசோக்ராஜா
அரவக்குறிச்சிப்பட்டி



''சாப்பாட்டை கன்னக்குறிச்சியில பார்த்துகிறோமே சார்''

''என்ன பேசறீங்க, நேத்ரா மேடம்? என் நண்பர்கள்னு சொன்னேன்! அதை நீங்க எங்க வீட்டுல சாப்பிட்டு நிரூபிக்கக் கூடாதா?''

இருவரும் மௌனமாய் இருக்க.... அர்ஜுன் சமையல் கட்டிற்கு சென்றான்.

கயல்விழியும், வசந்தியும் பதார்த்தங்களைக் கொண்டு வந்து டைனிங் டேபிளில் வைத்தார்கள்.

இருவருக்கும் அவர்களை அறிமுகப்படுத்தினான்.

அவனுடைய தாய் வசந்தியின் முகத்தில் சின்ன மலர்ச்சியில்லை! மாறாய் முகம் சிந்தனையில் ஆழ்ந்திருந்தது!

வசந்தியின் உணர்ச்சியற்ற முகத்தைக் கண்டு நேத்ராவிற்கு ஒரு மாதிரியானது.

அர்ஜுனின் தாய்க்கு தன்னைப் பிடிக்கவில்லை! அவர்களுக்கு பிடித்தாற்போல நடந்து கொள்ள வேண்டும் என்று எண்ணினாள்.

வாழையிலைப் போட்டு பரிமாறினார்கள்.

கீரைக்கூட்டு, வாழைப்பூ பொரியல், எண்ணெய் கத்திரிக்காய் வதக்கல் என்று வைத்துவிட்டு சாதத்தை வைத்தனர்.

''ரசாயன உரம் போடாமல் இயற்கை உரம் போட்டு எங்க தோட்டத்துல விளைஞ்ச கீரை, காய்கறிகள்! ரொம்ப சுவையும், சத்து மிகுந்ததாகவும் இருக்கும். சாப்பிடுங்க!''

அர்ஜுன் சொல்ல... சாதத்தின் கலர் செந்நிறமாய் இருக்க... நேத்ராதான் கேட்டாள்.

''சார்... சாதம் ஏன் பழுப்பு செந்நிறமாய் இருக்கு?''

மிஷினில் கொடுத்து அரைச்ச அரிசியில் சாதம்ன்னால் தவிடு எல்லாம் நீக்கப்பட்டு வெள்ளையாய் இருக்கும்! அறுவடையான நெல்லை நாங்க ஊறவச்சி, வேக வச்சு, உலர்த்தி எடுத்து வச்சிக்குவோம்! பிறகு தேவையான நெல்லை இதற்கென இருக்கும் .. தீட்டப்படாத அந்த அரிசியில் தான் சமைப்போம்! இது 'கைக்குத்தல் அரிசி' சாதம், நேத்ரா மேடம்! சத்து மிகுந்தது! சாப்பிட்டுப் பாருங்க.... சுவையும் அபாரமா இருக்கும்!''

அர்ஜுன் சொல்ல... சாம்பாரில் பிசைந்து இரண்டு பிடி உண்டவள் அர்ஜுனைப் பார்த்து...

''அருமை சார்! சுவை அபாரம் சார்! ஆஹா இயற்கைச் சூழல், இயற்கைக்காற்று, இயற்கை உணவு, மாசற்ற சுற்றுச்சூழன்னு அருமையான வாழ்வு வாழ்ந்துட்டு இருக்கீங்க, அர்ஜுன் சார்!''

நேத்ரா ரசித்து சொல்ல...

வசந்தி அவளைக் கோபத்தோடு பார்த்தாள்.

வசந்தியின் கண்களில் தோன்றியது வன்மமா....?

பொறாமையா..? கோபமா...?

அல்லது இதெல்லாம் நேத்ராவிற்கு ஏற்பட்ட பிரமையா...?



# 4

பாணிதரனும், சல்வரியும் மகளின் வரவிற்காக தவிப்போடு காத்திருந்தனர்.

இரவு ஒன்பது மணிவாக்கில் முகத்தில் புன்னகை மின்ன நேத்ரா உள்ளே நுழைய.. அந்தத் தாயின் உள்ளத்தில் வேதனை ஏற்பட்டது.

''வேலை கிடைச்சாச்சிம்மா''

நேத்ரா சொல்ல... சல்வரியின் முகம் கவலையில் கருங்கியது. கண்களிரண்டும் காவிரியை உற்பத்தி செய்ய.. உதடு பிதுக்கி அழுதாள், சல்வரி.

''அம்மா... ஏன் அழறே..? இந்த வேலை எனக்கே கிடைக்கணும்ன்னு நான் வேண்டாத தெய்வமில்லை! உதவிக்கும் கிடைச்சிருக்கும்மா! எங்க ரெண்டு பேருக்கும் கிடைக்க பூரித்துவிட்டேன், தெரியுமா...? நீயானால்....?''

நேத்ரா தாயிடம் கோபித்தாள். தாயின் விழிநீரை துடைக்கப் போக அந்தக் கையைத் தட்டிவிட்டாள், சல்வரி, ''ஏய்.. முதல்முதல்ல வேலை கிடைச்சிருக்குன்னு பெத்த பிள்ளை சொல்லும் போது இப்படி அபசகுனமா அழலாமா? உனக்கு புத்தி கொஞ்சம் கூட இல்லையா?''

பாணிதரன் அதட்ட...

''அவளைப் பிரிந்து எப்படி இருப்பது?''

''எதுக்கும்மா பிரியணும்? என்னோட.. நீங்களும் வந்துடுங்க! உங்களையும் கூட்டிட்டுப் போறேன்!''

''இங்கே அப்பாவை தனியே விட்டுட்டு எப்படிடி நான் வாழமுடியும்?''

''உனக்கு புருஷன் எப்படி முக்கியமோ... அதுபோல இந்த வேலை எனக்கு முக்கியம்!''

''நீ சொன்னால் கேட்க மாட்டாயா...?''

''நீங்க நான் சொன்னால் கேட்க மாட்டீங்களா?''

தாயைப்போலவே நேத்ரா சின்ன சிரிப்போடு கேட்க...

''வயசு பெண்ணை அவ்வளவு தூரம் வேலைக்காக அனுப்பிட்டு மடியில நெருப்பை கட்டிட்டு இருக்க சொல்றியா? அங்க இருக்கற மனிதர்கள் பத்தி ஒன்னுமே தெரியாது! மலைவாழ் மக்கள்ன்னு சொல்றே? காடு, கழனி, மலை, வனம்ன்னு இருக்கற மக்கள்....

நாகரீகம் தெரியாமல் முரடர்களாய் இருப்பாங்கன்னு பயப்பட

றேன்''

''நீங்க எந்த காலத்துல இருக்கீங்க?

பதினேழாம், பதினெட்டாம், நூற்றாண்டில் இருக்காதீங்க!

கணவன், குழந்தை, சமையல், வீடுன்னு இருந்தால் இப்படித் தான் வெளியுலகம் தெரியாமல்.. நாட்டுல என்ன நடக்குதுன்னு தெரியாமல் இருப்பீங்க! பட்டப்படிப்பு படிச்சுட்டு சந்தோசமா விவசாயம் செய்யற இளைஞர்கள் அங்கே இருப்பதா அர்ஜுன் சொல்றார்!''

''என்னடி நக்கலா...?''

''பின்னே? அங்கே வந்து பாருங்க! அர்ஜுன் பேரரசன் போல கோலோச்சிட்டு இருக்கார்!''

நேத்ரா ஆவலோடு சொல்ல.. அந்த அன்னையின் உள்ளத்தில் அதிர்ச்சி உருவானது.

''யாருடி அர்ஜுன்?''

''எனக்கு வேலைக் கொடுக்கற முதலாளிம்மா! ஐநூறு ஏக்கர் நிலத்துக்கு சொந்தக்காரர்! அதில் இருநூறு ஏக்கரை பயிர் செய்து அதில் விளையும் விளைச்சலை, வருமானத்தை அநாதை இல்லம், முதியோர் இல்லம், பள்ளி, கிராம மக்களுக்குன்னு வாரி வாரி வள்ளலா வழங்கறார்ம்மா!...

மீதி முந்நூறு ஏக்கரை நூற்றம்பது விவசாயிகளுக்கு தலா ரெண்டு ஏக்கர்ன்னு பிரிச்சி கொடுத்து, வீடு கட்டி கொடுத்து, விவசாயம் செய்து வாழ வழிவகை செய்து கொடுத்திருக்கார்!''

ஈஸ்வரி வாய் பிளந்து கேட்க... பரணிதரன் ஆச்சரியத்தோடு கேட்டுக் கொண்டிருந்தார்.

''அவ்வளவு நிலங்களும் 'கோமுகி அணை' பாசன நிலங்கள்! பத்து ஏக்கருக்கு ஒரு கிணறுன்னு வெட்டி வச்சிருக்கார்.

நிலங்களை தனக்கே வச்சிட்டு பயிர் செய்தாலோ அல்லது பல தொழிற்சாலைகளை நிறுவி இருந்தாலோ.. தமிழ்நாட்டில் விரல் விட்டு எண்ணக்கூடிய பணக்காரர்களில் ஒருவராய் இருப்பார்!

ஆனால் அந்த தயாளன் அப்படி செய்யலே! அந்தப்பகுதி மக்களுக்காக வாழறார்! இயற்கை விவசாயம் செய்யறார்! மூன்று மாவட்டங்கள் அவர் கொடுத்த விழிப்புணர்வால் விழித்து... இயற்கை வேளாண்மை முழுமையா செய்யுது!

அங்கே தான் மதிய உணவு உண்டேன்! கைக்குத்தல் அரிசி சோறும், கீரையும், காய்கறிகளும், கிழங்குகளும், கெட்டித் தயிரும்ன்னு அந்த உணவினுடைய சுவை இன்னும் நாக்குல நிக்குதும்மா!...

உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் இயற்கைச் சூழல், இயற்கை மண்மணத்தோட தென்றல் காற்று தன் பொற்கரங்களால் வருடி நலம் விசாரித்து விட்டு போகும் தெரியுமாம்மா...?

அங்க வாழற மக்கள் அத்தனைப் பேரும் பாக்கியசாலிகள்! இந்த



நகரத்து நெருக்கம், வாகனபுகை, தொழிற்சாலை கழிவு, சாக்கடை நாற்றம்ன்னு இங்க வாழற வாழ்க்கை ஒரு வாழ்க்கையா?''

அங்க மக்கள் வாழறதுதான் சொர்க்கமான, சுத்த வாழ்க்கை!'' நேத்ரா சொல்லி முடிக்க...

அம்மாவின் முகம் கொஞ்சம் தெளிந்தாற் போல இருந்தது.

''நீ என்ன தான் செய்யப்போறே, நேத்ரா?''

''அர்ஜுன் சார் தகவல் சொல்லும் போது கிளம்புவேன்!''

''என்ன வயசிருக்கும்?''

''முப்பதுக்கு மேல் இருக்கலாம்!''

''கல்யாணமாயிடிச்சா...?''

''ம்கூம்!''

''ஏன்?''

''தெரியலே!''

''அங்கே யாரெல்லாம் இருக்காங்க?''

''அவர் அம்மா, அப்பா, தங்கை, தாத்தா, எக்கச்சக்க வேலைக்காரர்கள்! பண்ணையில குடியிருக்கற மக்கள், ஆசிரம குழந்தைகள், இல்லத்து முதியோர்கள்ன்னு பெரும் ஜனத்திரளே இருக்கும்மா!''

''பயமின்றி இருக்கலாமா?''

''அந்த காலத்திலேயே அவர் தாத்தா சக்ரவர்த்தி ஐநூறு ஏக்கருக்கும் ஸ்ட்ராங்கா கம்பி வேலி போட்டு இருக்கார்! பண்ணைக்குள்ள போகவும், வெளியே வரவும்.. கிழக்கும், மேற்குமா பெரிய பெரிய கேட் இருக்கு! உள்ளுக்குள்ளே எங்கே போகணும்ன்னாலும் தார் சாலை! நூறு மீட்டருக்கு ஒரு சூரியசக்தி விளக்கு! இன்பமா வாழற மக்கள்ன்னு நமக்கு பெரிய பாதுகாப்பும்மா! நீ பயப்படவே வேண்டாம். தெரியுமா...?''

நேத்ரா சின்ன முகம் சுருக்கி அழகாய் சொல்ல..

''ஏய் ஈஸ்வரி.. உனக்கு எதுக்கு பயம்? பிள்ளை ஆசைப்படறாள்! போகட்டும்! சரியில்லேன்னால் நேத்ராவே திரும்பி வந்துடுவாள்!

''மன்னருக்கு ''யுத்தம்'' என்றாலே பிடிக்காதாம்''

''வேறென்ன பிடிக்குமாம்?''

''முத்தம்' என்றாலே முகம் மலர்ந்து விடுமாம்.''

-சிவ.ராமலிங்கம்
ஆத்தூர்



உன் மகளைப் பத்தி உனக்கு முழுமையா தெரியும் தானே?''

''தெரியுங்க! ஆனாலும் பெத்த மனசில்லையா கலங்குது!''

''அப்படின்னா ஒண்ணு செய். நேத்ரா கூட நீயும் போய் தங்கிக்கோ!'' பரணிதரன் சொல்ல...

''நீங்க சாப்பாட்டுக்கு என்ன செய்வீங்க? உங்களுக்கு ஓட்டல் சாப்பாடு ஒத்துக்காது!

அது அவ்சரை மேலும் ஆழப்படுத்துமே!'' சட்டென்று சொன்னாள் ஈஸ்வரி.

''கொஞ்ச நாட்கள் நேத்ரா கூட தங்கி... அங்குள்ள மனிதர்கள், அழகையெல்லாம் பார்!

உனக்கு பயமில்லேன்னால் நேத்ராவை விட்டுட்டு வந்துடு! அதுவரையிலும் எனக்கு தெரிஞ்ச சமையலை செய்து சாப்பிட்டுட்டு இருக்கேன்!''

''இதுதாம்மா கரெக்ட்! வந்து என்னோட ஐந்து, பத்து நாட்கள் இரு! என்னைப் பத்திய கவலை அகன்றதும் கிளம்பிடு!''

''என்ன ஈஸ்வரி யோசிக்கிறே? நான் சமாளித்துக் கொள்வேன்! நீ போயிட்டு வா!''

ஒரு வாரத்திற்குள் அர்ஜுனிடமிருந்து போன் வந்தது.

''ஹலோ... நான் அர்ஜுன் பேசறேன்!''

அவன் குரல் இனிமையாய் காதுமடல்களைத் தீண்டி.. மழைச் சாரலாய் நெஞ்சுக்குள் இறங்கியது.

''சொல்லுங்க அர்ஜுன் சார்?''

''நாளை மாலை வந்துடறீங்களா? அடுத்த நாள் காலை மருத்துவமனை திறப்பு விழா!''

''உங்க போனுக்காகதான் காத்துட்டு இருந்தேன்! வந்துடறோம் சார்! ஆமா.. நர்ஸுங்களை செலக்ட் செய்தாச்சா?''

''ம்... ரெண்டு பேர் போதுமில்லே!''

''போதும்...

போதும்!''

''வச்சிடறேன் நேத்ரா மேடம்'' என்று போனைக் கட் செய்தான்.

தாய், தந்தையிடம் விஷயத்தைச் சொன்னாள்.

தனக்கு தேவையான ஆடைகளைப் பெட்டியில் அடுக்கினாள்.

''உனக்கு என்னம்மா செய்யட்டும்?'' என்று ஈஸ்வரியைப் பார்த்து நேத்ரா கேட்க...

''அம்மாவையும் கூடவே கூட்டிட்டுப் போடா நேத்ரா. இங்கே அவளை விட்டுட்டு போனேன்னால் புலம்பித் தள்ளிடுவாள்! அப்புறம் என் ரெண்டு காதும் கிழிஞ்சிப் போயிடும்! மூளையும் கலங்கிப் போயிடும்!''

பரணிதரன் மனைவியைப் பார்த்து சிரித்தபடி சொல்ல... ஈஸ்வரி அவரை முறைத்தாள்.



உதய், நேத்ரா, ஈஸ்வரி மூவரும் சக்ரவர்த்திபுரத்தில் வந்து இறங்கினர்.

மதிய நேரம் என்றாலும் வெயில் சுள்ளென்று தாக்கவில்லை! இனிமையான மலைக்காற்று அவர்கள் தேகம் தீண்டி சென்றது!

ஈஸ்வரி பிரமிப்போட நேத்ராவின் பின்பு சென்றாள்.

''நேத்ரா... இடம் ரொம்ப அழகா, அருமையா இருக்குடி!'' ரசித்து சொல்லவும் செய்தாள்.

''அதே போல அர்ஜுன் தாத்தா, அவரோட அப்பா, அம்மா, கயல்விழி எல்லோரும் அருமையான நல்ல மனிதர்கள் தாம்மா! உன் மனதில் உள்ள பயம் இன்னும் கொஞ்ச நேரத்திலேயே மேகமா கலைஞ்சி போயிடும்!''

இவர்கள் வருகையை அறிந்து அர்ஜுன் உள்ளிருந்து பரபரப்பாய் வெளியே வந்தான்.

''உதய், நேத்ரா... வாங்க! இது யாரு.. நேத்ரா மேடம் அம்மாவா...? சாயல் தெரியுது! வாங்கம்மா! ரொம்ப அருமையான, அழகான பெண்ணை பெத்து வச்சிருக்கீங்கம்மா!''

அர்ஜுன் சொல்ல... ஈஸ்வரி கேள்வியாய் நோக்க...

''நான் நேத்ரா மேடத்தோட புற அழகைச் சொல்லலேம்மா! அவங்க அப்பழுக்கில்லாத அக அழகைச் சொல்றேன்!'' என்று சிரித்த அர்ஜுனை ஈஸ்வரிக்குமே பிடித்து விட்டது.

''உன் வரவு நல்வரவாகட்டும், நேத்ரா பெண்ணே!'' என்று தாத்தா வரவேற்க.. அவர் காலில் சட்டென்று விழுந்து வணங்கினாள், நேத்ரா.

தாத்தா நெகிழ்ந்து போய் அவளைத் தூக்கி ''அமோகமாய் இருப்பேம்மா!'' என்று ஆசிர்வதித்தார்.

''கைகழுவிட்டு வாங்க! சாப்பிடலாம்!''

தேவேந்திரன் சொல்ல.. கயல்விழி சொம்பு நிறைய நீரோடு வந்து நின்றாள்.

ஆனால் வசந்தியின் முகத்தில் சிறு மலர்ச்சி கூட இல்லை கடமைக்காய் வரவேற்பது போல... ஈஸ்வரிக்கும், மற்றவர்களுக்கும் பட்டது.

மூவருக்கும் பயங்கர பசி!

பீர்க்கங்காய் துவையல், கீரை மசியல், முருங்கைக்காய் சாம்பார், கண்டைக்காய் காரக்குழம்பு, கெட்டித்தயிர் என்று மூவரும் பிடி உணவு அதிகமாகவே சாப்பிட்டு விட்டு எழுந்தனர்.

மாடி அறைக்கு அழைத்துப்போனான், அர்ஜுன். உதய்க்கு ஒரு அறை, நேத்ராவுக்கு ஒரு அறை என்று தனித்தனியே இருந்த அறையைக் காட்டினான்.

''பயணக்களைப்பு போக ஓய்வு எடுக்கறீங்களாம்மா?'' என்று



''அந்த பெண்ணின் கழுத்தில் கட்டாயத்தாலி கட்டினாயா?''

''நான் தங்கத்தாலி தான் கட்டினேன்.''

-சிவ ராமலிங்கம்
ஆத்தூர்

மிகுதியான பாசத்தோடு கேட்க...

''சரிங்க தம்பி!'' என்றாள் புன்னகையோடு சுன்வரி.

அர்ஜுன் வெளியேறியதும்...

''என்னம்மா? அர்ஜுன் சார் எப்படி தெரியறார்?'' நேத்ரா கேட்க.

''ரொம்ப நல்லவராத்தான் தெரியறார்! இவ்வளவு பிரமாண்டம் இருந்தும் கொஞ்சம் கூட இவர் கிட்ட சின்ன அலட்டல் இல்லையே, நேத்ரா எல்லோரும் பாசமா வரவேற்றாங்க! அன்பா உணவு பரிமாறினாங்க! தென்பட்ட மக்கள் எல்லோரும் அன்பா பார்க்கறாங்க! பேசறாங்க!''

''கிராமத்து மக்கள் மேல் நீ கொண்ட கணிப்பு தப்புன்னு புரிஞ்சுதா யாம்மா?''

''ரொம்ப சரி, நேத்ரா ஆனால் அர்ஜுன் அம்மாவின் முகம் ஒரு மாதிரி இருந்ததே! வரவேற்றதுல கொஞ்சம் கூட மலர்ச்சியில்லே! சாமானப் பேச்சில்லே முகத்துல சின்ன புன்னகைக்கு கூட பஞ்சமா? முகம் கடுகடுன்னு இருந்தது. அதே சமயம் வாடியும் தெரிஞ்சது! ஏன்? இத்தனை நல்ல பிள்ளையைப் பெற்ற தாய் ஏன் அப்படி விட்டேத்தியா நடந்துட்டாங்க...?''

''கல்யாணமாகாத தன் மகன் புதிதாக வரும் பெண் மேலே ஆசைப்பட்டுடுவான்னு கூட பயம் இருக்கலாம்!''


''என்ன தப்பு, நேத்ரா?''

சுன்வரி பட்டென்று சொல்ல... நேத்ரா ஆச்சரியப்பட்டாள்.

''என்னம்மா சொல்றே...?''

''உன்மேல் ஆசைப்பட்டா என்ன தப்புங்கிறேன்? உனக்கு அழகில்லையா...? அறிவில்லையா...? நல்ல படிப்பில்லையா...? இல்லை நல்ல குணமில்லையா...? ம்...? என்ன, அவங்க வசதிக்கு ஈடாக மாட்டோம்... பணம் இன்று வரும்... நாளை நம்மை விட்டு போயிடும்! ஆனால் பண்பாட்டையும், பாசத்தையும், நல்ல மனசையும் காசு





எடுத்து [illegible] முடியுமா?'' உன்னை வி[illegible] அருமையான பெண்ணை.. மருமகளா தன் மகனுக்கு அந்தம்மாவால கட்டி வச்சிட முடியுமா...''

''அம்மா.. அம்மா... நீதானா பேசறே?'' நேத்ரா தழுதழுப்போடு கேட்க..

''அர்ஜுன் மாதிரி நல்ல ஆண் மகன் மருமகனா வரணும்ன்னு என்னைப்போல பெண்ணைப் பெத்தவங்க அத்தனைப்பேரும் ஆசைப்படுவாங்க, நேத்ரா!''

ஈஸ்வரி கண்களில் ஆசை மினுமினுக்க சொல்ல...

''அம்மா.... அம்மா...'' நேத்ரா உருகலோடு சொல்ல..

''அர்ஜுன்... உன் மனசுல சின்ன சலனத்தைக் கூட ஏற்படுத்தலையா, நேத்ரா?''

நேத்ராவைப் பார்த்து ஈஸ்வரி நேருக்கு நேராய் கேட்க..

''அ... அம்மா...'' தாய் தன் மனதை நன்கு படித்து பேசுவதைக் கேட்டு, அதிர்ச்சியோடு தடுமாற...

''பெத்த பெண்ணோட மனம் ஒரு தாய்க்கு நல்லாவே தெரியும், நேத்ரா! சொல்லு உனக்கு அர்ஜுனை ரொம்ப பிடிச்சிருக்கு தானே? அர்ஜுன் உன் மனசை கவர்ந்துட்டார்தானே?''

''அம்மா நீ எப்படி''

''நேர்முகத்தேர்வுக்கு சென்று வந்ததிலிருந்து அர்ஜுனைப் பற்றி வாய் ஓயாமல் ரசித்து பேசிட்டு இருந்தியே! அப்போதே லேசா பொறி தட்டிச்சி! இங்க வந்து இறங்கினதும்.. உன் கண்ணில் தெரிந்த மின்னலையும், அர்ஜுனை நீ காதலோடு நோக்கிக் கொண்டிருப்பதையும் வைத்து ஆணித்தரமா உறுதியாயிடிச்சி!''

''கல்யாணம் வேண்டாம்ன்னு சொல்லிட்டு இருந்த நான்...'' நேத்ரா இழுக்க...

''இதுநாள் வரை உன் மன்மதனை சந்திக்கலே! திருமணம் வேண்டாம்ன்னு உளறிட்டு இருந்தே! இப்போ உன் மன்மதனை சந்திச்சதும் கணவன், குழந்தைன்னு உன் கண்கள்ல கனவுகள் விரிஞ்சிடிச்சி! சரியா...?''

''ம்...'' என்று நேத்ரா உண்மையை ஒத்துக் கொண்டாள்.

''அம்மா.. என் ஆசை நிறைவேறுமா...? அர்ஜுன் என்னை நேசிப்பாரா..? என்னை மணந்துப்பாரா...?''

''அர்ஜுனை மணக்க தேவையான அத்தனை தகுதிகளும் நிறைந்த பெண் நீ! அப்புறம் எதற்கு பயம்? கட்டாயம் அர்ஜுன் உன்னை மணந்துக்குவார்! தாயின் வார்த்தைகளை நம்புடி, என் செல்லக்குட்டி!'' ஈஸ்வரி சொல்ல...

நேத்ரா நம்பினாள்.



# 5

இளஞ்சூரியன் விருது வென்ற மகிழ்வில் நடைபோடும் இளைஞனாய் துள்ளலோடும், துடிப்போடும் சுறுசுறுப்பாய் நடைப்போட்டுக் கொண்டிருந்த இளங்காலைப் பொழுது!

அர்ஜுன் பண்ணைக்கு சுற்றுப்பகுதி மக்களே திரண்டு இருந்தனர்.

பணக்காரர்களும், பாமரர்களும், இயற்கை வேளாண்மை விஞ்ஞானிகளும், விவசாயிகளும் குவிந்து விட்டனர்.

இயற்கை வேளாண் விஞ்ஞானி பெரியவர் ஐயா நம்மாழ்வார் அங்கே சிறப்பு விருந்தினராய் வந்திருந்தார்.

அர்ஜுன் கோட் சூட் சகிதமாய் கம்பீரத்தோடு காட்சியளித்தான்!

வைத்தவிழி எடுக்காமல்... அவனையே பார்த்துக் கொண்டு இருக்க வேண்டும் போல நேத்ராவின் மனது ஏங்கியது!

மற்றவர்களின் நகைப்புக்கு ஆளாகக் கூடாது என.. மனம் என்ற குரங்கை வலுவான கயிறு போட்டு பிணைத்து தன்கைப்பிடியில் வைத்து கொண்டு மேடையில் அமர்ந்திருந்தாள்.

நேத்ரா தலைக்கு குளித்து.. நீண்ட கூந்தலை தளர தளர பின்னி.. நெருக்க கட்டிய மல்லிகையையும், கனகாம்பரத்தையும் சூடி.. எளிய பட்டுடுத்தி இருந்தாள்! அந்த எளிய அலங்காரத்திலேயே அனைவரின் கண்களுக்கும் தேவதையாய் தெரிந்தாள்!

எல்லோரின் பார்வையும் ரசிப்போடு அவளை ஆராய.. ஆனால் அவள் விரும்பும் அர்ஜுனோ ஒரு நொடி கூட ரசிப்பான பார்வையால்.. அவள் மேனியை விழிகளால் தொடவில்லை!

அவனின் சின்ன வருடலான பார்வைக்காக தவம் இருக்கும் நேத்ராவின் மனதை அறியாமல் கம்பீரமே கால் முளைத்து வந்தாற்போல அமர்ந்திருந்தான்!

வந்திருந்த அத்தனை பெரிய மனிதர்களும் அவனை வாழ்த்தினார்கள்! அவனின் சேவையை மனதார புகழ்ந்தார்கள்!

அத்தனை புகழ்ச்சிக்கும் சம்மந்தம் இல்லாதவன் போல.. முகத்தில் சிறுசலனத்தைக் கூட காட்டாமல்... அவன் உட்கார்ந்திருந்த தோரணையைக் கண்டு வியந்துதான் போனாள், நேத்ரா.

புகழ்ச்சிக்கும், பாராட்டுக்கும் மயங்காதவர்கள் யாருமே இருக்கமாட்டார்கள்! அவன் மயங்கவில்லை! மகிழவில்லை!

அவனைக் காண காண கண்கள் விரிந்தது!

நெஞ்சம் நெகிழ்ந்தது!

நேசத்தின் ஆழம் அதிகமானது!

கட்டுப்படுத்த பெரும் சிரமப்பட்டாள், நேத்ரா!

விழா இனிதே முடிந்தது!

வந்திருந்த அத்தனை விருந்தினர்களுக்கும் காலை உணவு பரிமாறப்பட்டது.

உண்டார்கள்! விடைப்பெற்று சென்றார்கள்!

உதய், நேத்ரா, மற்றும் இரண்டு செவிலியர்களையும் ஓய்வெடுத்துக் கொள்ளச் சொன்னான்.

மாலை மாடியேறி வந்தான், அர்ஜுன்.

நான்கு பேரும் அவன் முன்பு கூடிவிட்டனர்.

''ஆஸ்பிட்டலுக்கு தேவையான மருந்து, மாத்திரை, காட்டன் இத்யாதி இத்யாதி என்று பெரிய லிஸ்ட் போட்டு கொடுத்துடுங்க, உதய் சார்!''

''கம்பெனிகளுக்கு ஆர்டர் கொடுத்தால் உடனடியாய் மருந்துகளை கொண்டு வந்து குவித்து விடுவார்கள் தானே, நேத்ரா மேடம்?''

''கட்டாயம் சார்!''

''வரும் வெள்ளியன்றிலிருந்து மருத்துவமனை இயங்கும்! அதுவரை ஓய்வெடுத்துக் கொண்டு வயல், வனம், தோட்டம் என்று சுற்றிப்பாருங்கள்! என்னையும் அழைத்தால் நானுமே வருவேன்!''

என்ற அர்ஜுன் ஈஸ்வரியைப் பார்த்து கேட்டான்.

''என்னம்மா.. எங்க இடம் பிடிச்சிருக்கா என்ன?''

'ரொம்ப பிடிச்சிருக்கு, தம்பி! உங்களைப் போல நல்ல குணம் உள்ளவங்க இங்கே இருக்கும் போது நான் எதுக்கு நேத்ராவுக்கு காவல் இருக்கணும்? நான் கிளம்பலாம்ன்னு பார்க்கிறேம்ப்பா!''

''அதுக்குள்ளே என்ன அவசரம்மா...?''

''முந்நூறு கிலோ மீட்டர் தாண்டி போறாளே இங்கே காடு,

''மேனேஜர் நின்று கொண்டே பைல்ஸ் பார்க்கிறாரே..ஏன்?''

''அவருக்கு ''பைல்ஸ்'' இருக்கிற விஷயம் உனக்கு தெரியாது போலும்.''

-சிவ.ராமலிங்கம்
ஆத்தூர்





மலைன்னு எப்படி இருக்குமோன்னு பயந்துட்டு வந்தேன், தம்பி!''

''இப்போதும் பயமிருக்கா...?''

''பயம் சுத்தமா போயிடுச்சி! அவரையும் இங்கே மாற்றல் வாங்கிட்டு வரச் சொல்லணும்! வேகண்ட் இருந்தால் சொல்லுங்க, தம்பி! நாங்களும் நேத்ராவோடவே வந்து தங்கிடறோம்!''

''கண்டிப்பா சொல்றேம்மா! உங்க கணவரோட மாறுதலுக்கு உதவறேன்!''

''அவருக்கு பிபி, சுகர், அல்சர்ன்னு உடம்புல எக்கச்சக்க நோயிருக்கு! அவர் எப்படி.. என்ன சமைச்சி உண்டு, உடம்பை கெடுத்துக்குவாரோன்னு கவலையா இருக்கு! நான் நாளை கிளம்பறேன், தம்பி!''

''உங்க விருப்பம்மா!''

''எங்க நேத்ராவை பத்திரமா பார்த்துக்குங்க, தம்பி! நேரத்துக்கு உண்ண, உறங்க மாட்டாள்! பார்த்துக்கங்க!''

''செய்யறேம்மா!''

அர்ஜுன் திடமாய் சொல்ல.. ஈஸ்வரி நிம்மதி கொண்டாள்.

மறுநாள் ஈஸ்வரி கிளம்பும் போது மகளிடம் சொன்னாள்

''நேத்ரா உன் நேசத்தை அவசரப்பட்டு அர்ஜுனிடம் சொல்ல முயற்சிக்காதே!''

''ஏன்?''

''வயது ஆண்கள்.. இளம் பெண்களைக் கண்டால் அவர்கள் முகத்தில் சின்ன சலனம், சஞ்சலம், ஆர்வம், புன்சிரிப்பு, கள்ளப் பார்வைன்னு இருக்கும்! ஆனால், அர்ஜுன் பார்வையில் இதெல்லாம் இல்லையே! நீ கவனிச்சியா?''

''ஆமாம்மா!''

''தேவதையை ஒத்த பேரழகியை கண்டுமே.. அவர்கிட்ட சின்ன சலனம் கூட இல்லேன்னால் அவர் கிட்ட ஏதோ காயம், வலி இருக்கு! அந்த வலி தந்த கஷ்டம், துயரம், வருத்தம், துக்கம், வேதனைன்னு கவலையா திரண்டு அவர் மனசை மரக்கட்டையா ஆக்கியிருக்கலாம்! மனசை மாண்டு போக செய்திருக்கலாம்''

ஈஸ்வரி அழுத்தம் திருத்தமாய் சொல்ல...

''அம்மா... நீ என்னம்மா சொல்றே?''

''அவருக்குள்ளே பயங்கரமான வலி இருக்கு நேத்ரா! அந்த வலிக்கு நீ மருந்தா இருந்தால்.. அவர் மனம் மாறலாம்! அவருக்குள்ளே என்ன வலி இருக்கு? சோகம் இருக்குன்னு கண்டுபிடி? வயசு முப்பத்தஞ்சி ஆகுதாம்! இத்தனை வசதியும், செல்வாக்குள்ள ஆம்பிளை திருமணம் செய்து மனைவி, குழந்தைன்னு சந்தோஷமா வாழாமல்... இப்படி சந்நியாசியா வாழறார்ன்னா அவருள்ளே ஏதோ புதைஞ்சிருக்கு நேத்ரா!''

''மெல்ல கண்டுபிடிக்கறேம்மா!''

''அவசரப்பட்டு யாரிடமும் கேட்டு வைக்காதே!''

"சரிம்மா!"

"உன் காதலை உன்னுள்ளே புதைச்சிவை அவசரப்பட்டு சொல்ல போய் அர்ஜுனுக்கு கோபம் வந்துட்டா உன் மனதின் ஆசைகள் நிறைவேறாமல் போகும்!"

"ஏம்மா இப்படி பேசறே?"

நேத்ராவின் கண்கள் நீரில் மிதக்க...

"நிஜம் பேசினால் வலிக்கத்தான் செய்யுமடா, நேத்ரா கண்ணு! நீ அவர் அருகில் வேலை பார்க்கணும்! உன்னிடமுள்ள அமைதியை, அடக்கமான அன்பை, பாசத்தை, பிரியத்தை அவரிடம் கொட்டு! உன் அக்கறையை பேச்சில் காட்டு! உன் சேவை மனப்பான்மையை செயலில் காட்டு! தன்னால அந்த ஆண் உள்ளம் உன் காதலையும், பாசத்தையும் புரிஞ்சிக்கும்!"

நேத்ராவை மடியில் போட்டு ஆதரவாய் வருடினாள், தாய்.

"கண்டிப்பா செய்யறேம்மா!"

"நீ உடம்பை பத்திரமா பார்த்துக்கோ! அர்ப்பணிப்பு உணர்வோடு உன் வேலையை செய்!"

"ம்..."

"உதய் உன்னோட இருப்பதாலும், அர்ஜுன் நல்லவராய் இருப்பதாலும் எனக்கு ஒரு பர்சண்ட் கூட பயமில்லே, நேத்ரா!"

பின்னர் சின்ன சிரிப்போடு மகளைப் பார்த்து சொன்னாள், ஈஸ்வரி.

"ஏய் நேத்ரா... என் மருமகனை பத்திரமா பார்த்துக்கோடி!" என்று கண்களை உருட்டி சொல்ல...

"ஆஹா... மருமகனாமே? அவர் உங்களுக்கு மருமகன்னால்... எனக்கு என் புருஷன்! அதெல்லாம்-நான் அவரை நல்லாவே பார்த்துப்பேன்! நீங்க கவலைப் படாமல் போயிட்டு வாங்க!" என்று நேத்ரா சொல்ல...

இருவரும் சேர்ந்து சப்தமாய் சிரிக்க... அங்கே சிரிப்பு அலையலையாய் பரவியது.

## 6

மாலைநேரம்!

பனிக்காற்றும், தென்றலும் கைக்கோர்த்து... சிறுபிள்ளையின் குதூ-



லத்தோடு ஆட்டம் போட்டுக் கொண்டு வந்து... நேத்ராவின் மென்மையை தீண்டி... முன்னுச்சி முடியைச் சிலுப்பி கடந்து போனது!

இயற்கைக் காட்சிகளை ரசித்துக் கொண்டே... இனிமையான தென்றலின் மென் தீண்டலை அனுபவித்துக் கொண்டு நேத்ரா, அங்கே இருந்த சூரியகாந்தி பயிரிடப்பட்டிருந்த வயல்வரப்புக்கு அருகிலே சோளமும், கம்பும் கதிர்முற்றி பெருமையோடு தலைநிமிர்ந்து நின்றிருந்தது!

அந்த இயற்கை வனப்பில் மைனாக்களும், கிளிகளும், குயில்களும், காகங்களும், தேன் சிட்டுக்களும், குருவிகளும், இன்னும் பெயர் தெரியாத பறவைகளும் கதிருக்கு கதிர் உட்கார்ந்து ஆனந்தமாய் உண்பதும்... பறந்து திரிவதுமாய் இருந்த காட்சி கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது!

நேத்ரா வாழ்க்கையில் இது போல ரம்மியமான காட்சியை, அமைதியை, இடத்தைக் கண்டதே இல்லை!

தன்னுடைய காமரா செல்லில் இந்தத் தோட்டக் காட்சிகளை கிளிக் செய்துவிட்டு வரப்பில் கால்களைத் தொங்கப் போட்டுக் கொண்டு உட்கார்ந்து விட்டாள்.

யாரோ நடந்து வரும் ஓசைக் கேட்டது!

திரும்பினாள், அவள் இதயத்தைத் திருடிய கள்வன் அவள் அருகில் வந்து அமர்ந்தான்.

"என்ன நேத்ரா மேடம்... மனசுக்கு புடிச்ச காட்சிகளை பதிவு பண்ணலீங்க போல?"

"ஆமா, அர்ஜுன் சார்! நான் இதுவரை இது போல அழகான வாழ்க்கை வாழ்ந்ததில்லே! எதைப் பார்த்தாலும் அதிசயமா தெரியுது! கம்பங் கொல்லை, சோளக்காடு, தென்னந்தோப்பு இப்படி கிட்டே போய் நின்னு பார்த்ததில்லே! நிறைய தானியங்களோட பேர்... இங்கு விளையிற பயிர்களோட பேர்கூட தெரியலே...

இந்தியாவின் முதுகெலும்பு 'விவசாயம்' அப்படிப்பட்ட நல்ல விவசாய நாட்டுல பிறந்துட்டு... இங்கு விளையற சில பயிர்கள் பேர் தெரியாமல் நான் சுன்னமா இருக்கேன்னு நினைக்கும் போது வெட்கக்கேடா இருக்கு, அர்ஜுன் சார்!"

நேத்ரா நிஜமான வருத்தத்தோடு சொன்னாள்.

"இன்னமுமே அரிசியும், கோதுமையும், ராகியும் தொழிற்சாலையிலே தயாரிக்கற பொருள்ன்னு நினைச்சிட்டு இருக்கிற நகரத்து குழந்தைகளும் இருக்கத்தான் செய்றாங்க!"

"இயற்கை விவசாயம் செய்யணும்ன்னு ஏன் தோன்றியது?"

"தாத்தாவும், இங்குள்ள விவசாயிகளும் இயற்கை வேளாண்மையை விட்டுட்டு... செயற்கை வேளாண்மை மேல் மோகம் கொண்டு... விவசாயத்தில் இரசாயன உரத்தையும், பூச்சிக் கொல்லியையும், பூஞ்சாணக் கொல்லியையும், களைக் கொல்லியையும் பயன்-

படுத்தி விவசாயம் செய்ய... விளைச்சலும் குறைந்து.. நிலமும் விஷத்தன்மைக்கு மாறி, மண்வளம் குன்றிப் போய் பூஞ்சையாய்க் காணப்பட்டது!

பூச்சிகளை அழிக்க பயன்படுத்திய மருந்துகள்.. பூச்சிகளை அழிப்பதற்கு முன்னதாக நன்மை செய்யும் பூச்சிகளையும், மண்புழுக் களையும் அழிக்கும் தன்மை கொண்டது!..

மண்புழு உழவனின் நண்பனில்லையா? மண்புழுவுக்கு சமாதி கட்டிட்டு அதில் விதை விதைத்தால் எப்படி விளைச்சல் விளையும்?...

மண்ணை ஆராய்ந்தேன்! நஞ்சான மண்ணை நல்ல மண்ணாக்க இயற்கை விவசாயத்தை மேற்கொண்டேன்!..

என் கடின உழைப்பில் விளைச்சல் பெருக மெல்ல மெல்ல இந்த விவசாயிகளையும் என் வழிக்கு கஷ்டப்பட்டு கொண்டு வந்தேன்!...

மண்மகளும் மீண்டும் உயிர்பெற்று விட்டாள்! எங்களை அமோகமாய் வாழ வைக்கிறாள்!''

செயற்கை வேளாண்மையால் மனிதர்களுக்கு நீரழிவு, அழுத்தம், காமாலை, சோகை, பார்வைக்குறைவு, புற்றுநோய், ஆண், பெண் மலட்டுத்தன்மை போன்ற கொடிய நோய்கள் நம் மனித இனத்தை பிடிக்குதுன்னு தெரியாத மக்களும் இருக்காங்க! மக்களுக்கு இன்னும் விழிப்புணர்வு வேணும், அர்ஜுன் சார்!'' நேத்ரா சொல்ல...

''பருத்தி விதையில் பி.டி.நஞ்சணுவைப் புகுத்தி விற்பனைக்கு விட்டிருக்கிறது, மான்சான்டோங்கிற அமெரிக்க கம்பெனி! இந்தக் கம்பெனி பருத்தியோட நிற்காமல் தக்காளி, கத்திரி, வெண்டை, மக்காச்சோளம், சோயா, மொச்சை, நிலக்கடலை, முட்டைகோசு, காலிப்ளவர்ன்னு அனைத்து விதைகளிலும் நஞ்சணுவை புகுத்தி விற்பனைக்கு கொண்டு வருகிறது.

பயிரை நோய் தாக்காமல் இருக்க விதையிலேயே பூச்சிக் கொல்லியை புகுத்த.. அந்த நஞ்சணு விதையை விதைக்கும் போது.. அந்த

''மாப்பிள்ளைக்குப் பெரிய ஹீரோ னு மனதில் நினைப்பு?''
''என்னாச்சு?''
''வீடியோவில் அவருக்கு ஒரு டைட்டில் ஸாங் வேணும் னு அடம் பிடிக்கிறார்!''

எம்.அசோக்ராஜா,
அரவக்குறிச்சிப்பட்டி





விதையிலிருந்து வரும் வேர், தண்டு, கிளை, இலை, பூ, காய், கனி அத்தனையும் நஞ்சாவே இருக்கும்!..

அந்த நச்சு செடியிலிருந்து கிடைக்கும் காய், கனிகளை உணவாக பயன்படுத்துவதால்... அந்த நச்சு நம் உடலிலும் கலக்கப்படுகிறது!''

''நிஜம்தான், அர்ஜுன் சார்!''

''இதனால் தாய்ப்பால் கூட நஞ்சாகி வருவதாக ஆய்வு கட்டுரைகள் கூறுகின்றன.! சிறு குழந்தைகள் நீரழிவு, அழுத்தம், ரத்தசோகை, புற்றுன்னு வந்து பாதிச்சி இறந்துபோக இந்த உரங்களும், பூச்சிக் கொல்லிகளும் தான்!...

அந்தக் காலத்துல இதுபோன்ற நோய்கள் இருந்ததா? நம் முன்னோர்கள் இதுபோன்ற அரக்க நோய்களால் பாதிக்கப்பட்டார்களா?''

''இல்லைதான், அர்ஜுன் சார்!''

''ஹார்லிக்ஸையும், பூஸ்ட்டையும், போர்ன் விடாவையும், காம்ப்ளானையும் குடித்து புரோட்டீன், வைட்டமின், மினரல்ஸ் போன்ற சத்துக்களைத் தேடிக் கொண்டார்களா?...

இயற்கையில் விளைவித்த அரிசி, கம்பு, ராகி, கோதுமை, பருப்பு வகைகள், சோளம், வரகு, சாமைன்னு பயிர்வகைகளைச் சாப்பிட்டு நம் முன்னோர்கள் ஆரோக்கியத்தோடு நூறு வருஷம் வாழவில்லையா?..

இன்று மனிதனின் ஆயுட்காலம் குறைய என்ன காரணம்? எல்லாம் செயற்கை.. செயற்கையால் விளைந்த தீமைகள்தான்!''

''ஆமாம், அர்ஜுன் சார்!''

''புதுசா மரபணு மாற்று விதைகளை வேற சந்தைக்கு கொண்டு வர முயற்சி நடந்துட்டு இருக்கு!''

''ஆமா.. மரபணு மாற்று கத்திரியை சந்தைப்படுத்த மான்சான்டோ கம்பெனி முயற்சிப்பதாகவும்.. அதற்கு பல சமூக அமைப்புகள் எதிர்ப்பு தெரிவிப்பதாகவும் நாளிதழில் படித்தேன், சார்!''

''வாகனப் பெருக்கம், தொழிற்சாலைகளிலிருந்து வெளிவரும் புகை, கழிவு வேளாண்மையில் நைட்ரஜனை முதன்மைப்படுத்தும் இராசயன உரங்களைப் பயன்படுத்துவதாலும்.. இன்று பூமி சூடாவது துரிதப்படுத்தப்படுகிறது..!

பூமி வெப்பமாவதால் இமயமலை போன்ற இடங்களில் உள்ள பனி ஆறுகளும், பனி பாறைகளும் உருகிவிட்டால் இன்னும் அறுபது, எழுபது ஆண்டுகளில் மழைப்பொழிவு அதிகம் நிகழாது! தண்ணீர் இல்லையேல் விவசாயம் செய்ய முடியாது! விவசாயம் செய்யலேன்னால் உணவு தட்டுப்பாடு நிலவும்! உணவின்றி மக்கள் பசி, பட்டினி என்று மடிவர்!

சில நாடுகளில் பனி உருகுவதால் கடல் மட்டம் உயர்ந்து... நாடே நீரில் மூழ்கும் அபாயம் வரும்!..''

''கண்டிப்பா, அர்ஜுன் சார்!''

''இயற்கை வேளாண்மையால் மட்டுமேதான் உலகம் வெப்பமடைதலை தடுக்க முடியும்!''

''அரசாங்கம் உங்க இயற்கை வேளாண்மையை ஊக்குவிக்கலையா, அர்ஜுன் சார்?''

''ஊக்குவிக்கலேன்னு சொல்ல முடியாது! ஆனாலும் கம்பெனிகாரர்களுக்கு சாதகமா பலர் அரசாங்கத்துல இருக்கிறாங்க''

''மற்ற நாடுகள்ல விவசாயம் எப்படி இருக்கு?''

''இயற்கை வழி வேளாண்மையை பல நாடுகள் கடைபிடித்து, நேத்ரா! குறிப்பா சொல்லணும்ன்னால் ஜப்பான், ஆஸ்திரேலியா, சுவீடன், நார்வே, ஹாலந்து நாட்டு விவசாயிகள் இதில் ஈடுபட்டு வெற்றிகரமாக நடைப்போடறாங்க..!

கியூபா நாட்டில் அரசாங்கமே இயற்கை வழி வேளாண்மையைக் கையில் எடுத்து தனது தேசத்தையே சொந்தக்காலில் நிறுத்தியிருக்கு! அங்குள்ள மக்கள் சத்தும், சுவையும் மிகுந்த உணவு உண்பதாக அந்த நாட்டு அரசாங்கம் மார்தட்டிக் கொள்கிறது.!

நமது நாட்டில் ஒரு மாதத்துக்கு 80 விவசாயிகள் தற்கொலை செய்துக் கொள்வதாக புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன! விவசாயிகளின் கோரிக்கையை அரசு கண்டு கொள்வதே இல்லை!''

அர்ஜுன் கவலையோடு சொன்னான்!

''விவசாயிகளுக்கு வட்டியில்லாக் கடனும், இலவச மின்சாரமும், மானியத்தொகையில் விதையும், கடன் தள்ளுபடின்னு செய்வதால் அரசும், ஆட்சியாளர்களும் மார்தட்டிக் கொள்கிறார்களே, அர்ஜுன்?''

நேத்ரா கேட்க.. அர்ஜுனின் முகத்தில் கோபம் கொப்பளித்தது.

''விவசாயிகள் என்ன உழைப்பதற்கு சோம்பேறித்தனம் படுபவர்களா..? அரசாங்க பரோபகாரிபோல விவசாயிகளுக்கு கடனும், இலவச மின்சாரமும், மானியத்தில் விதையும், கடன்தள்ளுபடின்னு எதுக்கு தானும்? நாங்க என்ன பிச்சைக்காரர்களா..?''

அர்ஜுனின் கோபம் சரியெனப்பட்டது!

''நாங்க விளைவிச்ச பொருட்களுக்கு சரியான தொகையை நிர்ணயித்து கொடுத்தாலே போதும், நேத்ரா! எங்கள் விளை பொருட்களுக்கு குறைந்த நிர்ணயத் தொகையை நிர்ணயித்து கொடுத்து விட்டு..

'உங்களுக்கு கடன் கொடுத்தோம்... அந்தக் கடனைத் தள்ளுபடி செய்தோம். எங்களுக்கு ஓட்டுபோடுங்கன்னு வந்து நிற்பாங்க...!'

சீரான விலை இருந்துட்டா விவசாயம் நிம்மதியான தொழில், நேத்ரா!

இன்னொரு கூத்து சில பணக்கார நாடுகள்ல நடந்துட்டு இருக்கு! உணவு உற்பத்திக்காக விளைவிக்கும் கோதுமை, சோயா, மொச்சை, மக்காச்சோளம் போன்ற உணவு தானியங்களை பயோ டீசலா மாற்றுகின்றனர்..



அல்லது பசுத் தீவனமாகவும், பன்றித் தீவனமாகவும், கோழித் தீவனமாகவும் மாற்றுகின்றன. இதனால் உணவு பற்றாக்குறைப் போக்க வெளிநாடுகள்ல இருந்து இறக்குமதி சாத்தியமில்லை!..

இதன் காரணமாய் விலைவாசி உயர்வு!..

மண் வளத்தோட இருக்கணும்! நிறைய மழை பொழியணும்.. உணவு உற்பத்தியில் தன்னிறைவு அடையணும்ன்னால் அதற்கு எல்லாமே மூல ஆதாரமாக நாம் கடைபிடிக்க வேண்டியது இயற்கை விவசாயத்தை தான்!''

''ரொம்ப கரெக்டா சொன்னீங்க, அர்ஜுன் சார்! இந்த சமுதாயத்திற்கு உங்க பங்களிப்பு கிரேட் தான்! உங்கள் இந்த பணி மென்மேலும் வளர்ச்சியடைய வாழ்த்துக்கள், அர்ஜுன் சார்!''

அவள் உளப்பூர்வமாய் சிலிர்த்து சொன்னாள்!

# 7

மருத்துவ உபகரணங்களும், மருத்துவ பொருட்களும் பெரிய லாரியில் வந்திறங்கின!

மருந்துகளின் விலைப்பட்டியலைப் பார்த்தபோது.. நேத்ராவிற்கு மயக்கம் போட்டு விழாத குறைதான்!

எவ்வளவு தொகை?

ஏகப்பட்ட வசதிகளும், சொத்துக்களும் இருந்தாலும் இப்படி கணக்கில்லாமல் மற்றவர்களுக்கு செலவு செய்ய நல்ல மனம் வேண்டும்!

அப்படி ஒரு மேன்மை மிகுந்த நல்ல மனம் அர்ஜுனிடம் இருக்கிறது! அந்த நல்ல மனதைச் சொந்தமாக்கிக் கொள்ள நேத்ரா தவிப்பதில் தவறில்லை!

அர்ஜுனைக் காணும் அத்தனைப் பெண்களுமே அவனைச் சொந்தமாக்கிக் கொள்ளதான் விரும்புவார்கள்!

மருத்துவர்கள் இருவரும், செவிலியர்கள் இருவரும் சேர்ந்து உபகரணங்களை அந்தந்த இடத்தில் வைத்தனர்! மருந்து, மாத்திரைகளை பிரித்து அடுக்கினர்!

காலை முதல் மாலைவரை வேலை சரியாய் இருந்தது.

கயல்வழி காபி, டீ, ஜூஸ் என அடிக்கடி கொண்டுவந்து கொடுத்து புத்துணர்ச்சி ஊட்டினாள்.

அவள் புன்னகை தவழும் முகத்தோடு கொண்டு வந்து கொடுத்து உபசரித்தது பிடித்திருந்தாலும்.. ஊனமான காலோடு விந்தி விந்தி நடந்து... அவர்களுக்கு சேவை செய்தது கண்டு பரிதாபம் ஏற்பட்டது! கூடவே பாசமான பிணைப்பும் ஏற்பட்டது!

நேத்ராவிற்கு வருங்கால நாத்தனார் வேறு!

கயல்வழி மூலமாய் சில காரியங்களை நிறைவேற்றி கொள்ளும் சமய சந்தர்ப்பம் வரலாம்! அதுவும் இல்லாமல் கயல்வழியை கண்டவுடன் யாருக்கும் பிடித்து விடும்!

நேத்ரா அவளை ஒருபங்கு தாங்கினாள் என்றால் உதய் நான்கு பங்காய் தாங்கினான்.

அவள் எடுத்து வரும் பிளாஸ்கையும், கப்பையும் வாங்கி மற்றவர்களுக்கு ஊற்றிக் கொடுத்தான்!

''கயல்.. எதுக்கு சிரமப்படறே?'' என்று கண்டித்தான்,

'' விழுந்துடப்போறே, கயல்!'' என்று பரிவோடு அருகில் ஓடி தடுக்கி விழப் போனவளைத் தாங்கினான்.

''நீ உட்கார், கயல்!'' அவர்களுக்கு உதவ வந்தவளை அன்புடன் கோபித்துக் கொண்டான்.

முடியாதவர்கள் மேல் உதய் பரிதாபப்படுவான் தான்! ஆனால் கயல்வழி மேல் அதிக அக்கறை காட்டுவது போல நேத்ராவிற்கு தோன்றியது.

அர்ஜுனும், கண்ணனும் புதுச்சேரியில் ஒரு விவசாயக் கண்காட்சி என்று சென்று இரவுதான் திரும்பினர்!

நான் முழுக்க.. அந்த நால்வரும் கஷ்டப்பட்டதை கயல்வழி அவனை நிறுத்தி வரிவரியாய் வாசித்து விட பங்களாவிற்குள் செல்லாமல் மாடிப்படி ஏறினான்.

உதய், நேத்ரா, செவிலியர்களுக்கு மனப்பூர்வமாய் நன்றியைத்

''ஏன் ஏ.டி.எம். மெசினையே திருடிட்டே?''

''மற்றவர்கள் ஏ.டி.எம். மைத் தொட்டால் பணம் வருது. நான் எத்தனை தடவை தொட்டாலும் பணமே வரலை அதான் மெஷினையே திருடிட்டேன் எசமான்!''

-எம். அசோக்ராஜா, அரவக்குறிச்சிப்பட்டி





தெரிவித்தான்.

''இது எங்களுடைய வேலை! இதைச் செய்ததற்காக நீங்க இவ்வளவு பாராட்டி, நன்றி தெரிவிக்க வேண்டாம்!''

''இரண்டு நாட்களுக்கு மேலாகும் அந்த வேலையை முடிக்க அதை ஒரே நாளில் முடிக்க உங்களுக்கு நன்றி சொல்வதில்.. நான் ஒன்றும் குறைந்து விட மாட்டேன்! நேத்ரா மேடம்.. உங்களுடைய இந்த தன்னடக்கம்தான் உங்களுக்கு மணிமகுடமே!''

''ஐய்யோ சார்.. எங்க வேலையை செய்தோம்! இது எங்க கடமையும் கூட!''

''சரிங்க மேடம்.. நன்றி சொல்லலே! இனி புகழவும் இல்லே! கல்வராயன் ஹில்ஸ் மேல போய் பார்த்திருக்கீங்களா..?''

''ஊஹூம்.''

''நாளை கல்வராயன் மலைக்கு போகலாமா?''

''காத்திருக்கேன், சார்! உங்க கிட்ட நானே இதைக் கேட்கணும்னு நினைச்சேன்!''

''எங்களுக்கு மலையில் ஒரு இடம் விடாமல் தெரியும், சார்!''

நர்ஸ் இருவரும் ஒதுங்கிக் கொண்டனர்.

மறுநாள்..

அர்ஜுன், உதய், நேத்ரா, கயல்விழி என கிளம்பினர். வசந்தி மதிய சாப்பாடு, பழ ஜூஸ், ஸ்நாக்ஸ் என்று காரில் எடுத்து வைத்து விட்டாள்.

''உதய் சார்.. நீங்க பின்னாடி வந்து அமருங்க! உங்களுக்கு போறப்ப ஒரு இடம் விடாமல் விளக்கறேன்!'' என்று உதய்யைப் பார்த்து கயல்வழி சொல்ல.. உதய் அர்ஜுனின் கட்டளைக்காய் காத்திருக்க.. அர்ஜுன் சின்ன புன்னகையுடன் தலையசைக்க.. உதய் ஏறி கயல்விழியின் அருகில் அமர்ந்தான்.

அர்ஜுன் காரை இயக்க... நேத்ரா அவன் பக்கத்தில் அமர்ந்தாள்.

ஸ்கார்பியோ கார் கிளம்பியது!

நேத்ராவின் மனசெல்லாம் மல்லிகை காடாய் வாசம் வீசியது! அர்ஜுன் அருகில் அமர்ந்து பயணிக்கும் வாய்ப்பு கிடைக்கும் என்று அவள் நினைக்கவில்லை!

கயல்விழிக்கு மனதிற்குள் நன்றி சொன்னாள்.

கார் மெல்ல மேடேறியது! கொண்டை ஊசி வளைவுகளில் லாவகமாய் அர்ஜுன் காரினைச் செலுத்தினான்.

மலை ஏற ஏற.. குளிர்ச்சி அதிகரித்தது!

அவளைத் தொட்ட தென்றல்.. அவனை வந்து ஏகாந்தமாய் தீண்ட சிலிர்த்துப் போனாள்!

அவன் இழுத்து சுவாசித்து வெளிவிட்ட சுவாசத்தை.. அவளும் இன்பமாய் சுவாசித்தாள்!

அவன் கேசத்தை கலைத்து விளையாடிய காற்றின் கைகள்..

அவள் முன்நுச்சி கேசக்கருளையும் கலைத்து விளையாடி செல்ல.. ஆனந்தப்பட்டாள்.

மலைராணி பச்சைப்பட்டுடுத்தி.. சிங்காரமாய் மேனியெங்கும் அழகைப் பரப்பி.. கம்பீரமாய் காட்சியளிக்க.. அதையெல்லாம், கம்பீரமான தோற்றத்தையும், கள்ளத்தனமாய்.. கடைக்கண்ணால் நோக்கி ரசித்துக் கொண்டே வந்தாள்!

அர்ஜுன் கார் ஓட்டுவதிலேயே குறியாய் இருக்க.

உதய்யும், கயல்விழியும் தொண தொண என்று பேசிக் கொண்டு அங்கே அர்ஜுனும், நேத்ராவும் இருப்பதை கண்ணுறாமல் வந்தது கூட நேத்ராவிற்கு சாதகமாய் போய்விட்டது.

மேல் பரிசும் தாண்டி பெரியார் நீர்வீழ்ச்சி வந்ததும் அர்ஜுன் காரை நிறுத்தினான்.

'' ஹலோ நேத்ரா.. பெரியார் நீர்வீழ்ச்சி வந்தாச்சி.. இறங்க நீங்களா?'' எனக் கூற...

நேத்ரா சட்டென்று சுதாரித்து.. ஒரு சின்ன அசட்டு சிரிப்போடு இறங்கினாள்.!

''அருவியில் குளிக்கலாமா, அர்ஜுன் சார்?'' என்று சிறுகுழந்தையாய் கேட்க!

''ஊ ஹூம்.. முதல்ல மலர்வனம், அடுத்ததா பழத்தோட்டம் பார்த்துட்டு வந்து குளிக்கலாம்! மேலே கூட மலர்வனமும், பழத் தோட்டமும் இருக்கு! அதைவிட இங்கு இருப்பது பெட்டரா இருக் கும்!'' என்று கூறியவாறு அர்ஜுன் நடக்க, பின்னாடியே நடந்தனர்.

மலர்வனத்தில் விதவிதமான ரோஜாக்கள் கண்களைக் கவர்ந்தது.

மலர்களை ஆவலோடு பார்த்துகொண்டு அர்ஜுன் பின்னே சென்றாள். நேத்ரா.

கயல்விழியும், உதய்யும் சுவாரசியமாக பேசிக் கொண்டு மலர் வனத்தை சுற்றி வந்தனர்.

பழத்தோட்டத்தில் பெயர் தெரியாத பழ மரங்களை அர்ஜுன் நேத்ராவுக்கு விளக்க.. சின்ன தலையசைப்போடு விழிகள் விரிய பார்த்துக் கொண்டு வந்தாள்.

உதய், கயல்விழி ஜோடி இவர்களைத் தொடரமாட்டார்கள்! பின் தங்கி விடுவார்கள்!

எல்லாம் முடிந்து பெரியார் நீர்வீழ்ச்சியில் பெண்கள் இருவரும் இறங்கிவிட... ஆண்கள் தூரத்திலேயே நின்று கொண்டனர்!

மூலிகை வாசத்தோடு ஓடிவந்து வெள்ளிக் கம்பியாய் தலையில் விழுந்த நீர் உடலுக்கும், மனதிற்கும் புத்துணர்ச்சியைத்தர... ஆனந்த கூத்தாடினாள். நேத்ரா.

இறக்கை முளைத்த சிறுகுழந்தையாய் நேத்ரா குதித்த விதம்.. குளித்த விதத்தை தூரத்திலிருந்து கண்ணுற்ற அர்ஜுனின் உதடுகளில் சிறுநகை முகிழ்த்தது!





''செட்டியைத்தாண்டி எங்க நேத்ரா டூர் அது. இதுன்னு போனதில்லே, சார்! அவளுக்கு தெரிந்ததெல்லாம் அம்மா, அப்பா, படிப்பு, கல்லூரி, ஜன நெருக்கடி, வாகன இரைச்சல், டிராபிக்ஜாம்தான்! இப்படி ஒரு பிரமிப்பான, அழகான இடத்தைப் பார்த்ததில்லே! அருவியில் குளியல் போட்டதில்லே!'' உதய் சொன்னான்.

''ரொம்பநேரம் குளிர்ச்சியான தண்ணீர்ல நின்றால் உடம்புக்கு ஒத்துக்காமல் போயிடும்! அப்புறம் நேத்ராவோட அம்மாவுக்கு பதில் சொல்ல வேண்டிவரும்! பெண்கள் இருவரையும் கரையேறச் சொல்லுங்க, உதய்!''

உதய் அருவிக்கருகில் சென்றான்.

''ஏய் நேத்ரா.. கயல்விழி ரெண்டு பேரும் குளிச்சது போதும்! மேடேறி வாங்க!''

''பிளீஸ்.. பிளீஸ் உதய்.. இன்னும் கொஞ்ச நேரம்டா!''

நேத்ரா உதய்யிடம் கெஞ்ச..

''குளிர்ச்சியான தண்ணீர்ல ரொம்ப நேரம் இருந்தால் டாக்டரம்மாவுக்கு ஒத்துக்காமல் போகும்ன்னு அர்ஜுன்சார் கவலைப்படறார்!'' என்று குறும்பாய் சொல்ல..

நேத்ரா அருவியைவிட்டு அவனருகில் வந்து

'' ஏய் உதய்.. நிஜமாவா? இல்லை புளுகு மூட்டையை நீயே அவிழ்த்து விடறியா?''

'' உன்மேல ஆணை, நேத்ரா! இன்னொன்றும் சொன்னார். உன் அம்மாவுக்கு கைக்கட்டி பதில் சொல்லணும்ன்னு!''

''அதானே பார்த்தேன்! என் மேல் உள்ள அக்கறையில் சொல்லலே! அம்மா மேலுள்ள பயத்தில் சொல்லியிருக்கார்! தடியா.. அதைச் சரியா சொன்னா என்ன?''

''உன் மேல் அக்கறை.. அம்மா மேல் பயம்ன்னு இரண்டு காரணங்களுக்காகவும் கூட அர்ஜுன் சார் மேடேறி வரச் சொல்லியிருக்கலாம்லா?'' உதய் சொல்ல...

''என்னடி இது என் ஒரு காதில் மட்டும் பஞ்சை வைச்சு அடைச்சிட்டே?''

''உங்கம்மாவைப் பத்தி நான் சொல்றதை நீங்க இந்தக் காதில் வாங்கி அந்தக் காதில் விட்டுடக் கூடாதேன்னு தாங்க.''

-எம்.அசோக்ராஜா,
அரவக்குறிச்சிப்பட்டி





அடுத்த நொடி அருவியில் நின்ற கயலை இழுத்துக் கொண்டு மேடேறினாள்.

நேத்ராவின் உடலில் ஒட்டிய ஆடை அப்பட்டமாய்.. அவளின் அங்கங்களின் பிறப்பை வெளிப்படுத்தி எடுத்துக் காட்ட இது நாள் வரை சலனப்படாத அர்ஜுனின் கண்களும், மனதும் சலனத்திற்கு ஆட்பட்டு... உடனே சுதாரித்தது! அவசர அவசரமாய் அர்ஜுன் வேறு புறம் திரும்பிக் கொண்டான்!

காரில் இருந்த உடைகளை எடுத்துப்போய் அருகில் இருந்த உடைமாற்றும் அறையில் மாற்றிக் கொண்டு வந்து இருவரும் அமர.. கார் மீண்டும் மேடேறியது.

முல்லைத்தோட்டம், கரியாலூர், வெள்ளிமலை, ஈச்சங்காடு, மூங்கில் தோட்டம், கருமத்துறை என்று ஒவ்வொரு இடமாய் பார்த்தனர்.

உணவு உண்டனர். மாலை நான்கு மணி வாக்கில் மேகம் நீர்வீழ்ச்சிக்கு சென்றனர்.

''நேத்ரா மேடம்.. அருவியில இறங்கிடாதீங்க! தண்ணீர் பயங்கர ஜில்லென்று இருக்கும்! மாலை நேரக் காற்று, லேசாய் கொட்டற பனி, ஜில்லென்ற நீர் என்று எல்லாம் சேர்ந்தால் உடம்புக்கு வந்து படுத்துடுவீங்க!''

அர்ஜுன் அக்கறையோடும், பாசத்தோடும் கூற.. அவள் வார்த்தைகளுக்கு மதிப்பு கொடுத்தாள்.

ஒய்யாரமாய் ஓடி வந்து பள்ளத்தில் கொட்டிய அருவிநீரை இமை கொட்டாமல் பார்த்து சிரித்தாள்.

பிறகு சின்ன திருப்பதி பெருமாள் கோயிலுக்கு வந்தனர்.

'பெருமாளே.. எனக்கு அர்ஜுன் வேண்டும்! அர்ஜுன் என்னை விரும்ப வேண்டும்! அர்ஜுன் என்னை மணந்து கொள்ள வேண்டும்!'

நேத்ரா மனமுருகி வேண்டிக் கொண்டாள்.

'அவளின் இந்த பிரார்த்தனை நிறைவேறுமா...?

அல்லது நிர்மூலமாகுமா..?'

# 8

மருத்துவமனை இயங்க ஆரம்பித்து விட்டது.

மருத்துவமனைக்கு பண்ணையில் உள்ள மக்கள், சுற்று கிராமத்து மக்கள் என்று நூறு பேருக்கு குறையாமல் வருவார்கள்!

இலவச மருத்துவமனைதான் ஆனால் அதிகப்படியான கூட்டம் வருவதில்லை.

தலைவலி, சிறிய காய்ச்சல் என்று வந்தனர். நாட்கள் இறக்கைக் கட்டி இனிமையாய் பறந்தது!

முதல் மாத சம்பளமாய் ரூபாய் முப்பதாயிரம் கொடுத்தான்.

உதய் வாங்கிக் கொண்டாள்! ஊரில் அவள் சம்பளத்தை எதிர் பார்த்து கல்லூரி செல்லும் தம்பியும், விதவைத்தாயும் உள்ளனர்.

ஆனால், நேத்ரா வாங்க மறுத்தாள்.

அர்ஜுன் வற்புறுத்த அவளிடமிருந்து சம்பளத்தை பெற்றுக் கொண்டான்.

நேற்று ஒரு பெரியவர் ஆஸ்பத்திரிக்கு வந்தார். பேரனின் பள்ளி படிப்புவரை அர்ஜுன் உதவி செய்ததாகவும்.. மீண்டும் அர்ஜுனை தொல்லைத்தர விரும்பாமல்.. கல்லூரியில் சேர்க்காமல்.. விவசாயத்தை கவனி என்று சொன்னதாகவும் சொன்னார்.

அவர் குடியிருப்பது பக்கத்து கிராமம்.

பெரியவரின் விலாசம் தெரிந்து.. அவரின் வீட்டிற்கு நேத்ரா சென்றாள்.

''உங்க பேரனின் படிப்பு செலவிற்கு வைத்து கொள்ளுங்கள்'' என்று முழுதாய் முப்பதாயிரத்தையும் கொடுக்க...

பெரியவர் ''தாய்.. தாய்... தெய்வமே..'' என்று கையெடுத்து வணங்க...

அந்தப் பேரன் ஓடிவந்து காலில் விழுந்து கதறிவிட்டான்.

''என்ன படிக்க ஆசை...?''

''பி.இ. அக்கா! கவுன்சிலிங் டேட் கூட வந்துடிச்சி! தாத்தா தான் படிச்ச படிப்பு போதும்! விவசாயத்தைப் பாருடான்னு சொல்லிட்டார்''

அந்த பேரன் சொல்லிவிட்டு அழ...

''கவுன்சிலிங் சென்னையில் தானே? என் வீட்டு அட்ரஸ் தரேன்! அங்கே போனால் அப்பா உனக்கு உதவி செய்வார்! உன் படிப்பு முடியும் வரை உனக்காகும் செலவை நான் ஏற்று செய்யறேன்! அழாதே! சந்தோஷம் தானே..?''

அந்த பெரியவரின் மனைவி இன்முகத்தோடு கொண்டு வந்து கொடுத்த மோரை அருந்தி விட்டு திரும்பி விட்டாள்.

மறுநாள் அந்த பெரியவர் வந்து விஷயத்தை அர்ஜுனிடம் கூறி விட்டு...

''டாக்டரம்மா தேவதை வம்சமய்யா! தெய்வமய்யா! அவங்க நல்லாயிருக்கணுமய்யா!'' என்று கூறிவிட்டு சென்றார்.

காலை நேரம் ஆஸ்பத்திரி பரபரப்பாய் இயங்கிக் கொண்டிருந்தது.

உதய் ஆண்களுக்கு ட்ரீட்மெண்ட் கொடுத்துக் கொண்டிருந்தாள்!



பெண்களுக்கு நேத்ரா சிகிச்சை அளித்து அனுப்ப செவிலியர்கள் அவர்கள் இருவரிடமிருந்து வரும் நோயாளிகளுக்கு ஊசி போட்டு, மாத்திரை கொடுத்து அனுப்பினர்.

அந்தப் பெண் கண்ணீரோடு நேத்ராவின் முன்பு நின்றாள்.

''என்னம்மா? என்ன பிரச்சனை? எதுக்கு அழறே? என்கிட்ட வந்து தட்ட இல்ல... உன்னுடைய குறையைச் சொல். நான் சரிப்படுத்தறேன் அதைவிட்டு அழுதுட்டு...?'' என்று நேத்ரா அதட்ட...

''நான் வெள்ளி மலை இருந்து வரேன், டாக்டர்! இங்க நல்லா பார்க்கறதா கேள்விபட்டு நம்பிக்கையோட வந்திருக்கேன்!''

''சரி உன் பிரச்சனை என்ன?''

''கல்யாணமாகி ஏழு வருஷமாகுது இன்னும் குழந்தையில்லே! ஊர் ஜனங்க எல்லாம் 'மலடி... மலடி'ன்னு சொல்றாங்க! என் மாமியார்காரி 'மலட்டு நாயே'ன்னு திட்றா! இந்த மலட்டு நாயை தலை முழுகிட்டு வாடா! நல்லப் பெண்ணாப் பார்த்து ஜாம்ஜாம்ன்னு உனக்கு கல்யாணம் பண்ணி வக்கிறேன்னு மாமியார்காரி வேப்பிலை அடிக்க.. அவரும் ரெண்டாம் கல்யாணத்துக்கு மனசை தயார்படுத்திட்டு வரார்!...

என் மாமியார்காரியோ.. எனக்கு தெரியாமல் ஊர் ஊரா பெண்பார்க்க போறான்னு அக்கம் பக்கம் சொல்றாங்க!'' என்று அந்தப் பெண் குலுங்கி குலுங்கி அழ..

''முதல் மனைவி இருக்க ரெண்டாவது கல்யாணம் செய்தால் செல்லாது! உன் சம்மதம் இல்லாமல் ஒரு துரும்பைக்கூட உன் புருஷன் கிள்ளிப்போட முடியாது! அப்படி கைமீறிப்போனால் என்கிட்டே சொல்! போலீஸ்ல கம்ப்ளைண்ட் பண்ணி... உன் புருஷனையும், மாமியார்காரியையும் கம்பி எண்ண வச்சிடலாம்!''

''அதெல்லாம் வேண்டாம், டாக்டரம்மா! என் புருஷன் நல்லவர்

''ஏன் அந்தப் படத்துல நடிக்க மறுத்திட்டீங்க?

ரொம்பவும் கவர்ச்சியா நடிக்கச் சொன்னாங்களா?''

''அதெல்லாமில்லே! படம் முழுவதும் புடவை கட்டிக்கிட்டு நடிக்கணுமாம்!''

-என்.குணசீலன்,
பட்டுக்கோட்டை.



தான்! மாமியார்காரிதான் அவர் மனசை கலச்சிவச்சிருக்கா! எனக்கொரு குழந்தை மட்டும் இருந்தால் போதும்... என் புருஷன் மனம் மாறிடும்!''

''ஆமா... உன்னுடையது காதல் திருமணமா...?''

''ஆமாம் டாக்டரம்மா! ரெண்டு பேரும் உயிருக்குயிரா விரும்பினோம்! ரெண்டு வீட்டிலேயும் பயங்கர எதிர்ப்பு! என் வீட்டுல மாப்பிள்ளைப்பார்க்க ஆரம்பிச்சிட்டாங்க! ஒரு நாள் சொல்லாமல் கொள்ளாமல் ஓடிப்போய் சின்ன திருப்பதி பெருமாள் கோவில்ல கல்யாணத்தை முடிச்சிட்டுப் போய்... அவங்க கால்ல விழ.. மன்னிச்சி ரெண்டு வீடும் ஏத்துக்கிட்டாங்க!''

''காதலிச்சி கல்யாணம் செய்துக்க எவ்வளவு சிரமப்பட்டீங்க.. அது போலத்தான் அவஸ்தையும், சிரமங்களும் நிறைந்தது.. கணவனின் உயிரணுவும், மனைவியின் கருமுட்டையும் சந்தித்து கர்ப்பம் ஆவதும்! எதுவரைப் படிச்சிருக்கே?''

''பத்தாவது வரை!''

''அப்போ விஞ்ஞானரீதியா உனக்கு விளக்கினா புரியும்தான்! பெண்ணின் சினைப்பையில் இருந்து ஒரு கருமுட்டை வெளியாகி, உயிரணுவுக்காக காத்திருக்கும். அந்த கருமுட்டையை உருவாக்க ஒரே ஒரு உயிரணு போதும் என்றாலும், உறவின் போது ஆணிடமிருந்து கோடிக்கணக்கான உயிரணுக்கள் செல்லும் ஆனால் எளிதாக சேர்ந்துவிட முடியாது. ஏராளமான தடை உண்டு''

என்று நேத்ரா விளக்க ஆரம்பிக்கும்போது அர்ஜுன் உள்ளே நுழைய.. செவிலி பரபரப்பாகி கதவு திறந்துவிட ஆயத்தமான போது... அர்ஜுன் வேண்டாம் என்று தடுத்து.. அங்கிருந்த இருக்கையில் அமர்ந்தான்.

உள்ளே நேத்ரா அந்த மலைஜாதிப் பெண்ணுக்கு அற்புதமான விளக்கம் கொடுத்தாள்.

இந்த அளவு டாக்டர் விளக்கம் கொடுக்க தேவையில்லை என்றாலும் அந்த பெண்ணின் முகத்தில் இருந்த சோகம் விலகி லேசாய் ஒளி வந்தது.

நேத்ராவைப் பற்றி சுற்றுப் பகுதி மக்களும், பண்ணை மக்களும் தூக்கி வைத்து பாராட்ட... அவள் நோய்களைப் பற்றி கொடுக்கும் விளக்கத்தாலும் இன்முகத்தோடு மருத்துவம் பார்த்து குணமாக்குவதாலும் தான்!

''கர்ப்பப்பையில கோளாறா? அல்லது கரு குழாய்ல கோளாறான்னு முதல்ல தெரியணும்! நீ இதுக்கு முன்னே ஏதாவது டாக்டர்கிட்ட செக்கப் செய்துட்டையா?''

''ம்கூம்.''

''நான் எழுதித்தரேன்! இந்த டெஸ்ட்டெல்லாம் போய் கன்னக்குறிச்சியில செய்துட்டு பின்பு என்னிடம் வா! முறையா வைத்தியம் செய்யறேன். அடுத்த வருஷமே கையில குழந்தையோட வந்து நின்னு என் குழந்தைக்கு பேர் வையுங்க டாக்டரம்மான்னு கேட்பபா!''

''நிச்சயமா நடக்குமா, டாக்டரம்மா?''

''ஏன் நடக்காம? பயமில்லாமல் போயிட்டு வாம்மா.''

அழுது கொண்டு போன பெண்... மனசில் நம்பிக்கையோடும், முகத்தில் புன்னகையோடும் வர செவிலி ஆச்சரியப்பட்டாள்.

''நேத்ரா ஒரு நல்ல மருத்துவர்'' என்று அர்ஜுனின் மனமும் சான்றளித்தது, பாராட்டியது.

# 9

அர்ஜுன் அவளை பெருமை பொங்க பார்த்தவாறே உள்ளே நுழைய... நேத்ரா அப்போது அவனை அங்கே எதிர்பார்க்கவில்லை. ஆச்சரியமாகி...

''வாங்க சார்! என்ன விஷயம் சார்? சொல்லியனுப்பி இருந்தா நானே உங்களை வந்து பார்த்திருப்பேனே?''

அர்ஜுன் பெரியவர் சொன்ன செய்தியை சொல்ல...

''இதைக் கேட்கத்தான் வந்தீங்களா? எல்லாம் உங்க அருகாமையில் இருக்கேனில்லையா... அதான் உங்க நல்ல குணத்துல கொஞ்சமா என்னிடம் வந்து தஞ்சம் புகுந்திடுச்சி. அந்த பெரியவர் சொன்னார் என்பதற்காக என்னை தெய்வமாகவும், தேவதையாகவும் பார்க்க வேண்டாம்! நானும், ரத்தத்தாலும், சதையாலும் ஆன சராசரி ஆசாபாசங்கள் நிறைந்த சாதாரண பெண் தான்!''

நேத்ரா கூற... அதற்கு பதிலாய் மென்மையான புன்னகையொன்றை உதிர்த்து விட்டுச் சென்றான் அர்ஜுன்.

அந்த புன்னகை ஒன்றை நினைத்து கொண்டே ஒரு நூறு ஆண்டுகள் வாழ்ந்து விடலாம் போல தோன்றியது நேத்ராவிற்கு.

''நேத்ரா உங்களுக்கு மதியம் பொழுது போகலேன்னால் என் புத்தக அறையில் ஏராளமான புத்தகங்கள் இருக்கு. எடுத்து படியுங்களேன்.''

ஒருநாள் அர்ஜுன் அனுமதி கொடுக்க அவள் அடுத்த நாளே அந்த அறையின் சாவியை கயல்விழியிடம் இருந்து பெற்று, திறந்து

உள்ளே போனாள்.

ஒரு பக்க அலமாரியில் கல்கி, சாண்டில்யன், விக்ரமன் போன்றோர் எழுதிய வரலாற்று நூல்களும்...

அடுத்த அலமாரியில் அகிலன், சிற்பி, ஜெயகாந்தன், சிவசங்கரி போன்றோர் எழுதிய சமூக நாவல் நூல்களும்...

அடுத்த அலமாரியில் பாரதி, பாரதிதாசன், கு.ப.ராசகோபாலன், வைரமுத்து போன்றோர் எழுதிய கவிதை நூல்களும்...

அடுத்த அலமாரியில் இயற்கை வேளாண்மைப் பற்றிய ஆங்கில நூல்களும், தமிழில் கோ.நம்மாழ்வார், நடராஜன் போன்றோர் எழுதிய நூல்களும் வரிசையாய் அடுக்கப்பட்டு இருந்தது.

கதை, கவிதை நூல்களைத் தவிர்த்து விவசாயம் பற்றி சொல்லிய நூல்களில் நான்கை எடுத்து வந்து படித்தாள். அதில் உள்ள செய்திகள் குறித்து அர்ஜுனிடம் விளக்கம் கேட்க... மலர்ந்த முகத்துடனே அவன் விளக்கினான்.

தினம் தினம் நூலகம் செல்வது வழக்கமாயிற்று.

அர்ஜுன் ஒரு நாள் அங்கு இருந்த போது...

''நல்ல தகவலைத் தரும் விவசாய புக் ஒன்றை எடுத்து தந்திங்களே அர்ஜுன்?''

'' எல்லாமே நல்ல தகவல்களைத் தரும் புத்தகம் தான் நேத்ரா! தற்போது நான் படிச்ச புத்தகம் இது! இதைப் படிச்சுப் பாருங்க.'' என்றவன்,

அமெரிக்க விஞ்ஞானி ஜெப்ரி எம்.ஸ்மித் எழுதிய 'மரபணு சூதாட்டம்' என்ற புத்தகத்தை கொடுத்தான்.

அதில் உள்ள தகவல்கள் நேத்ராவிற்கு ஆச்சரியத்தையும், அதிர்ச்சியையும் தந்தது.

அர்ஜுனோடு சேர்ந்து சாப்பிடும் நேரம், பொன்னான நேரம். அவனோடு பேசிக் கொண்டிருக்கும் நேரம் சொர்க்கமான நொடிகள் அவனோடு மலைக்கும், சமவெளி பிரதேசங்களுக்கும் செல்வதானால் அவளுக்கு ஏகப்பட்ட மகிழ்ச்சி.

மொத்தத்தில் அவன் அருகில் பார்வை படும் இடத்தில் வசிப்பதையே தான் செய்த தவத்தின் வரமாய் எண்ணினாள்.

ஒருநாள் அர்ஜுன் நல்ல மழையில் நனைந்து விட கடுமையான ஜுரம் வந்து விட்டது.

நேத்ரா கலங்கிவிட்டாள்!

உதய்யும், நேத்ராவும் மருத்துவம் செய்தார்கள்.

இரவு...

'' அம்மா நேரத்துக்கு மருந்து, மாத்திரை கொடுக்கணும்! அப்படி கொடுக்கலைன்னால் கட்டுக்குள் வந்த சுரம் அதிகரிச்சுடும்! ''

'' எந்தெந்த மாத்திரை, மருந்துன்னு சொல்லிடு! நான் கரெக்ட்டா கொடுக்கறேன். ''



'' நீங்க வயசானவங்க. இரவு கண் விழித்து எதுக்கு சிரமப்படணும்? நான் இரவு இங்கே தங்கியிருந்து இந்த வேலையை செய்யறேன்! நீங்க நிம்மதியா போய் தூங்குங்க! ''

இந்தப் பேச்சு ஹாலினுள் நடக்கிறது.

நேத்ரா சொல்ல வசந்தியினுள் சட்டென்று சினம் பூத்தது.

''ஏம்மா உன் மனசுல என்னதான் நினைச்சுட்டு இருக்கே? அர்ஜுன் என் பிள்ளை. எனக்கு இல்லாத அக்கறை உனக்கு வந்திடுச்சா? என்னை விட நீ சிறப்பா கவனிச்சுக்குவியா? ''

வசந்தி கோபத்தில் கத்தினாள்.

'' அதில்லம்மா உங்களுக்கு சிரமம் என்பதால் சொன்னேன்'' முடிப்பதற்குள்.

'' என் மகனுக்கு செய்வது சிரமமா? உனக்கு ஏன் இவ்வளவு அக்கறை? ம்? நீ எங்க மருத்துவமனைக்கு வேலைப்பார்க்க வந்த டாக்டர்! உனக்குன்னு ஒரு எல்லையிருக்கு. அந்த எல்லையைத் தாண்டி வர நினைக்க வேண்டாம்! புரிஞ்சுக்குவேன்னு நெனைக்கிறேன்! ''

கன்னத்தில் பளாரென்று அறைந்ததை போன்று துடித்து விட்டாள் நேத்ரா! கண்ணீரோடு திரும்பி படுக்கையில் போய் விழுந்து வெகுநேரம் கதறினாள்! விம்மினாள்!

மறுநாள் காலை... இரவெல்லாம் அழுது வீங்கிய முகத்துடன் நேத்ரா அர்ஜுனைப் பார்க்கப் போக

'' என்ன நேத்ரா உடம்பு சுகமில்லையா? முகம் வாட்டமா இருக்கு? ''

'' ம்கூம் நைட் சரியா தூங்கல அதான் ''

''பெற்றோர்கள் ஞாபகம் வந்துடிச்சா? இரண்டு நாள் விடுப்பு எடுத்துட்டு சென்னைக்கு போயிட்டு வர்றீங்களா? ''

'' ம்கூம் அவங்களே அடுத்த வாரம் வராங்களாம். ''

''அந்த டாக்டருக்கிட்டே ஒரு நல்ல குணம் இருக்கு!''

''என்ன?''

''ஆப்பரேசன் பண்றதுக்கு முன்னாடி நோயாளியிடம் உங்களோட கடைசி ஆசை என்னான்னு கேட்டு நிறைவேத்திட்டுத்தான், ஆப்பரேசன் பண்ணுவார்.''

-என்.குணசீலன்,
பட்டுக்கோட்டை



அர்ஜுனின் ஜுரத்தை ஆராய்ந்தாள்! ஜுரம் இல்லை! லேசாய் சளி மட்டுமே இருந்தது. நேத்ரா நிம்மதியானாள்.

ஆனால் அதிகப்படியான ஜுரம் வந்து படுத்து விட்டதால் அவன் வாடி வதங்கி தெரிந்தான்.

அவனை சிங்கத்தின் கம்பீரத்துடன் கண்டுவிட்டு படுக்கையில் காண மனதிற்குள் வலித்தது.

நான்கு நாட்கள் கழித்து புத்தக அறைக்கு சென்றாள் நேத்ரா.

தேவையான புத்தகத்தை எடுத்துக் கொண்டு திரும்பும் போது மேஜை மேல் இருந்த அந்த ஆல்பம் பளீரென கண்முன் பட்டது.

ஆர்வம் வந்து நாற்காலியில் அமர்ந்து ஒவ்வொன்றாய் திருப்ப சிறுவயது அர்ஜுன் முதல் இன்று வரை உள்ள கட்டான, கம்பீரமான அர்ஜுன் பலவித போஸ்களில் காட்சியளித்தான்.

அர்ஜுன் மன்மதனாய் மனதை அள்ளிக் கொண்டு போக கட்டுப்படுத்த முடியாமல் போட்டோவில் இருந்த அர்ஜுனுக்கு ஆசையாய் முத்தமிட மனம் துடித்தது.

அந்த நேரம் அறைவாயிலிலிருந்து இதையெல்லாம் கண்டு கோபத்தில் சிவந்த கண்களுடன் வசந்தி உள்ளே நுழைந்தாள்.

''என்ன இங்கே திருட்டு வேலை? அர்ஜுனை எங்கிட்ட இருந்து கவர்ந்துட்டுப் போக வந்த கள்ளிப் பெண்ணாடி நீ?'' நேருக்கு நேராக கேள்வி எழுப்பும் வசந்தியை இந்த நேரம் நேத்ரா எதிர்பார்க்கவில்லை.

''நான் திருடி இல்லேம்மா!''

வசந்தியின் குற்றச்சாட்டுக்கு மறுப்பு தெரிவித்தாள்.

''எங்க அர்ஜுன் ஆல்பத்தை ஏன் எடுத்த?''

''தற்செயலாகப் பார்த்ததும்'' முடிப்பதற்குள்...

''போட்டோவை நீ எதற்காக பார்க்கணும்? அர்ஜுனை மயக்கி எங்க கிட்ட இருந்து பிரிச்சிட்டு போகப் பார்க்கிறீயா? அர்ஜுனை நாங்க உனக்கு விட்டுத்தர மாட்டோம்!'' வசந்தி சீற்றத்துடன் நிற்க,

'' அர்ஜுனை கவர்ந்துட்டுப் போக ஒருநாளும் நினைச்சதில்லைம்மா.''

மென்று விழுங்கின நேத்ராவை எரிப்பது போல் பார்த்தாள் வசந்தியம்மாள்.

''நீ ஆசைப்பட்டாலும் உன் ஆசை ஒருநாளும் நிறைவேறாது.''

''அபாண்டமா பேசாதீங்கம்மா! ஒரே ஒரு கேள்வி மட்டும் நான் கேட்கவா?''

'' நிஜமாவே நீங்க அவரைப் பெற்ற தாய் தானா? அல்லது அவரைத் தத்தெடுத்து வளர்க்கிற தாயா? ''

நேத்ரா சட்டமாய் கேட்க, வசந்தி திகைத்தாள்.

''எப்படியும் அர்ஜுனுக்கு முப்பத்தைந்து வயதாகும்னு நினைக்கிறேன். ஒரே ஒரு ஆம்பளை பிள்ளையை பெத்து வச்சிருக்கீங்க. அவ



ருக்கு ஒரு கல்யாணம், காட்சின்னு செய்து வைக்க பிரியப்படாம இருக்கீங்களே? ''

''அர்ஜுனை நாங்க தத்தெடுக்கலே! எங்களைத் தான் அவர் அம்மாவா, அப்பாவா, கயலைத் தங்கையா தத்தெடுத்து வாழ வச்சிக்கிட்டு இருக்கார்.'' அவள் சொன்ன தகவலைக் கேட்க நேத்ரா அதிர்ச்சியின் விளிம்பில் நின்று கொண்டு இருக்க.

''எங்கள் மகள் கயல்விழி உனக்கு தெரிஞ்சிருக்காது. '' வசந்தியம்மா அழுகையோடு சொல்ல ஆரம்பித்தாள். தங்களுடன் அர்ஜுனுக்கு வந்த உறவு பற்றி...

# 10

சக்ரவர்த்தியின் ஒரே தவப்புதல்வன் சிவநேசன்!

ஏகப்பட்ட சொத்துக்களின் வாரிசான சிவநேசன் தந்தையோடு பண்ணை நிர்வாகத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது பண்ணைக்கு வேலை செய்ய வந்த பெண்ணோடு காதல் ஏற்பட்டு விட்டது.

சக்ரவர்த்தி அந்தஸ்து, ஜாதி, மதம், இனத்தைக் காரணம் காட்டி மகனின் ஆசைக்கு மறுப்பு சொல்ல...

தந்தையை மீறிக் கொண்டு போய் தன் காதலி அம்பிகாவை பதிவு திருமணம் செய்து கொண்டு வந்து சக்ரவர்த்தி முன்பு நிற்க... அவர் அவர்களை ஏற்றுக் கொள்ள மறுத்து, 'நீ என் மகனே இல்லை! என் மகன் இறந்து விட்டான்' என்று தலையில் தண்ணீரை ஊற்றிக் கொண்டு போய் கதவை மூடிக் கொள்ள...

தந்தையின் இந்த செயலால் சுயகௌரவம் தூண்டப்பட்டு சிவநேசன் மனைவியை அழைத்துக் கொண்டு சென்னை வந்து விட்டார்.

சிவநேசன் அம்பிகா தம்பதியினரின் மகிழ்ச்சியான வாழ்வில் மலர்ந்தான் அர்ஜுன்.

சக்ரவர்த்தி மகனை வீம்புக்காக துரத்தினாலும் பிரிவாற்றாமையால் வாடிப் போயிருந்த பின்னர் தனக்கு பேரன் பிறந்துள்ள செய்தியறிந்து தன்னுடைய வறட்டு கௌரவத்தை விட்டு விட்டு சென்னைக்கு தானாகவே தேடிச் சென்றார். மகன், தன் தந்தையின் அன்பில் உருகிப்போனார்.

பேரன் அர்ஜுனிடம் உள்ளத்தை பறிகொடுத்தவர் மகனையும்,

மருமகளையும் அழைத்து வந்து விட்டார். சக்ரவர்த்திபுரத்திற்கு!

அர்ஜுனுடைய பதினைந்தாவது வயதில் தாயும், தகப்பனும் சொந்தக்காரர்களின் திருமணத்திற்கு சேலத்திலிருந்து சென்று திரும்பும் போது விபத்தில் பலியாயினர்.

அதன் பிறகு அர்ஜுனுக்கு தாய், தந்தை, தாத்தா எல்லாமே சக்ரவர்த்தி தான்!

பனிரெண்டாம் வகுப்பு முடித்து கோவையில் பி.எஸ்ஸி. அக்ரி சேர்ந்தான்.

தாத்தாவிற்கு பேரனை மருத்துவம் படிக்க வைக்க வேண்டும் என்று ஆசை. ஆனால் அர்ஜுனுக்கு விவசாயப் படிப்பு தான் படிக்க ஆசை.

அதன் பிறகு எம்.எஸ்ஸி. அக்ரி, ஆராய்ச்சி படிப்பு என்று முடித்து விட்டு ஊர் திரும்பினான்.

நிலமின்றி பண்ணையில் தினப்படி விவசாய கூலியாய் வேலை செய்து வயிற்றைக் கழுவிய மக்களின் பின்தங்கிய வாழ்க்கையை கண்ணுற்றவன் அவர்களுக்காக பேசினான்.

தனக்கு இருநூறு ஏக்கரை வைத்துக் கொண்டு முந்நூறு ஏக்கர் நிலத்தை நிலமில்லாதவர்களுக்கு இரண்டு ஏக்கர் விதம் கொடுத்து வீடும் கட்டிக் கொடுத்தான்.

இயற்கை வேளாண்மை செய்தான். அவர்களையும் தன்வழிக்கு மாற்றினான்.

பண்ணையில் குடியிருந்த மக்களையே தனது விவசாய நிலத்தின் வேலைக்கு பயன்படுத்திக் கொண்டு சரியான கூலியைக் கொடுக்க அங்கே வசித்த மக்கள் மகிழ்ந்தனர். அந்த இடத்திற்கு தன் தாத்தா பெயரையே ஊரின் பெயராய் 'சக்ரவர்த்திபுரம்' என்று வைத்தான்.

இப்படித்தான் கல்வராயன் மலையின் அடிவாரத்தில் சக்ரவர்த்திபுரம் உருவானது.

''கபாலிய ஸ்டேஷனுக்கு போ நான் பின்னாடி வாரேன்னு எதேச்சையா சொன்னேன் வந்தானா''

''ரெயில்வே ஸ்டேஷனுக்கு வரச் சொன்னதுக்கு அவனோட பழக்கதோஷம் போலீஸ் ஸ்டேஷனுக்கு போயிருக்கான்.''

-எம்.செல்லையா
சாத்தூர்





அவன் ஏற்படுத்திய மாற்றத்தால் மண்வளம் மிகுந்து மாவட்டமே அவன் பின்பு இயற்கை வேளாண்மையை செய்தது.

கள்ளக்குறிச்சியை மையமாகக் கொண்டு கள்ளக்குறிச்சி, உளுந்தூர்பேட்டை, விழுப்புரம், ஆத்தூர் போன்ற நான்கு நகரங்களில் உரக்கடை வைத்து விற்பனை செய்யும் வெளிநாட்டு கம்பெனியோடு கைக்கோர்த்து விதைக் கம்பெனியும் வைத்து ஏகபோகமாய் கல்லாவை நிரப்பிய அரங்கநாதன், அவருடைய மகன் ராஜேஷ் போன்ற பெரிய விற்பனையாளர்களுக்கும், சிறிய அளவில் உரக்கடை வைத்து விற்பனை செய்தவர்களுக்கும் தலைவலியை ஏற்படுத்திவிட்டான் அர்ஜுன்.

## 11

வானமென்னும் பரந்த தோட்டத்தில் கிழக்கு பக்கம் இளமஞ்சள் நிறத்தில் கதிரவன் என்ற பெரிய பூ ஒன்று மலர்ந்து மனிதர்களை மயக்கிக் கொண்டு மெல்ல மெல்ல மேடேறி நாணத்தோடு நடை போட்ட காலை பத்து மணி!

முதல் நாள் வடக்கநந்தல் அரசினர் ஆண்கள் மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியரிடமிருந்து போன் வந்தது.

''அர்ஜுன் எங்க பள்ளி மாணவர்களை பாட்டனி பாடம் சம்பந்தமாய் உன்னுடைய பண்ணைக்கு நாளை சிறு சுற்றுலா அனுப்பி வைக்கட்டுமா?'' என்று கேட்டார்.

அவனுக்கு பாடம் கற்பித்த ஆசிரியர், தற்போது அந்த பள்ளியின் தலைமையாசிரியராக உள்ளார்.

அர்ஜுனுக்கு அன்று காலை ஒரு முக்கியமான வேலை இருந்தது. ஆனால் எப்படி மறுக்க முடியும்? மாணவர்களை வரவேற்று கண்ணனிடம் ஒப்படைத்து விட்டு வேலையைப் பார்க்க கிளம்பலாம் என்று எண்ணியவன் உடனே ''சரிங்க ஐயா!'' என்று அனுமதி கொடுத்தான்.

மறுநாள் அர்ஜுன் காத்திருந்தான்.

சரியாய் பத்தே காலுக்கு பஸ் வந்து நின்றது! மாணவர்கள் உள்ளிருந்து உற்சாகமாய் இறங்கினர்.

வயதான பாட்டனி டீச்சரை எதிர்பார்த்தவனுக்கு தேவலோகத்து மங்கையை ஒத்த அழகிய கொடியிடை மங்கையை கண்டதும் அவன்

இதுவரை இப்படியொரு அழகியை பார்த்திராதவன்,

அவளையே வைத்த விழி எடுக்காமல் பார்த்துக் கொண்டிருக்க அந்த அழகிய பூந்தோட்டம் மெல்ல நடந்து அவனருகில் வசந்தத்தோடு வந்து நின்று சிப்பி இமையை உயர்த்தி அவனை நோக்கி...

'' நீ நீங்க அர்ஜுன் சார்? '' என்று விழிவிரித்துக் கேட்க,

அவன் மீன் விழியில் சட்டென்று தூண்டிலில் மாட்டிய மீனாய் மாட்டிக் கொண்டான்.

'' நான் மலர்விழி! பாட்டனி டீச்சர் ''என்று அழகிய கையை எடுத்து மொட்டாய் குவித்து வணங்க,

''வணக்கம் டீச்சர்! உங்க வரவு நல்வரவாகட்டும்!'' என்று அர்ஜுன் இனிய சிரிப்பொன்றை உதிர்த்து சொன்னான்.

மாணவர்களையும், மலர்விழியையும் கான்பரன்ஸ் ஹாலுக்கு அழைத்து சென்று டீ, பிஸ்கட் கொடுத்து உபசரிக்க.

'' நோ தாங்க்ஸ் சார்! நான் டீ, காபி அருந்துவதில்லை. '' என்று புன்னகையோடு மறுக்க...

உடனே இளநீர் பறித்து வர வேலையாட்களிடம் கூற...

கொஞ்ச நேரத்தில் இளநீர் வந்தது.

மலர்விழி ''தாங்க்ஸ்'' என்று வாங்கிப் பருகினாள்.

'' உங்க பண்ணையைச் சுற்றிப் பார்த்து புதுப்புது தாவரங்களை மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தவும் மூலிகை செடி, கொடி, மரம்னு வளர்க்கறீங்களாமே அதையும் பார்க்கணும் சார். அப்படியே பாட்டனி பாடத்திற்கு ஹெர்பேரியம் செய்ய தேவையான தாவர பாகங்களும் வேண்டும். மாணவர்களுக்கு அதை பிய்த்துக் கொள்ள அனுமதிக்க வேண்டும். ''

'' ஓ உங்களுக்கில்லாததா டீச்சர்... தாராளமா வேண்டியதை எடுத்துக்கங்க. ''

''உங்களைப் பற்றி நிறைய கேள்விப்பட்டிருக்கிறேன். ரியலி கிரேட் மேன்! நான் உங்களை இன்று தான் சந்திக்கிறேன். என்னோட சொந்த ஊர் கடலூர். வடக்குநந்தல் பள்ளிதான் என் முதல் அப்பாய்ண்மெண்ட். இங்கே வந்து ஆறுமாதத்திற்கு மேலாகுது! ''

'' அப்பா, அம்மா? '' அவளைப் பற்றி தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆவலில் அர்ஜுன் கேட்க,

'' அப்பா தனியார் கம்பெனியில கிளர்க். அம்மா ஹவுஸ் வொய்ப்! ஒரு தங்கை இருக்கா. ''

'' அவங்கயெல்லாம்? ''

''இங்கே வந்துட்டோம் மொத்தமா! அப்பாவுக்கு ஆஸ்துமா! அதனால் வேலையை ரிசைன் பண்ணிட்டு அழைச்சிட்டு வந்துட்டேன்.''

பார்க்க வேண்டிய முக்கியமான வேலையை மறுநாளுக்கு ஒத்தி வைத்தான் அர்ஜுன்.



அவனே மலர்விழியோடு சென்று ஒவ்வொரு இடமாய் காட்டினான்.

மாணவர்களும், மலர்விழியும் பண்ணையில் உள்ள தாவரங்களை ஆர்வத்தோடு கண்டுகளித்தனர்.

மாணவர்கள் தங்களுக்கு தேவையான தாவர பாகங்களை ஹெர்பேரியத்திற்காக கொண்டு போன பைகளில் சேமித்தனர்.

'' டீச்சர் இன்று மதியம் எங்க வீட்டுல தான் சாப்பிடணும். '' அர்ஜுன் சொல்ல,

''இல்ல சார் நான் டப்பாவிலே சாதம் கொண்டு வந்திருக்கேன்.''

'' ம்கூம் நீங்க என் பண்ணைக்கு வந்த விருந்தாளி! உங்களுக்கு என் வீட்டுல தான் சாப்பாடு! மறுக்கக் கூடாது மலர் டீச்சர் ''

அவன் வற்புறுத்த மறுக்க முடியாமல் அவனோடு உண்ண உள்ளே சென்றாள்.

மலர் விழி தாத்தா சக்ரவர்த்தியைக் கண்டதும் அவர் காலைத் தொட்டு வணங்கினாள். '' நல்லாயிரும்மா '' என்று ஆசீர்வதித்தார் பெரியவர்.

அர்ஜுன் அவ்வளவு எளிதாய் எந்த பெண்ணோடும் பேசமாட்டான்.

மலர்விழியை உட்கார வைத்து பரிமாறி சாப்பிட சொல்லி தானும் அமர்ந்து அவளோடு பேசியபடியே அர்ஜுன் உணவு உண்டகாட்சி தாத்தாவிற்கு எதையோ உணர்த்தியது.

மாலை மறக்காமல் அவளின் செல்போன் எண்ணை வாங்கிக் கொண்டான் அர்ஜுன்.

பஸ்சில் ஏறி மலர்விழி கையசைத்து செல்ல அவளைப் பிரிந்து எப்படி இருப்பது? என்று மனம் வருந்தியது.

அன்று இரவெல்லாம் கனவில் வந்து அர்ஜுனை இம்சித்தாள் மலர்விழி!

தொடர்ந்து வந்த நாட்களில் மலர்விழியை பார்க்க வேண்டும், பேச வேண்டும் என்று ஏங்கியது. மனது பரபரத்தது!

அர்ஜுனின் தவிப்பு கூடிக் கொண்டே சென்றது.

அன்று இரவு 8 மணிக்கு அவளறையில் அடுத்த நாளுக்கு நடத்த வேண்டிய பாடத்தை வரிசைப்படுத்திக் கொண்டிருக்க செல் ஒலித்தது.

சலிப்புடன் எடுத்தாள்.

'' ஹலோ மலர்விழி டீச்சர் நான் அர்ஜுன். ''

மலர் ஆச்சரியப்பட்டாள்.

அவள் இதயக்குளத்திலும் அர்ஜுன் சிறு சலனத்தை ஏற்படுத்தியிருந்தான். அதனால் அவன் குரல் அவளது மனதை வருடுவதை போல உணர்ந்தாள். ஆனால் தனது தாய், நோயாளி தந்தை, தங்கையின் எதிர்காலத்தை நினைத்தும், குடும்பத்தை நினைத்தும் மனதைக்

கட்டுப்படுத்தினாள்.

"நல்லாயிருக்கீங்களா மலர்?"

"ம்!"

மகிலிறகாய் வருடிய குரலுக்கு பதிலளித்தாள்.

"என்னை நினைப்பீங்களா மலர்?"

"பதில் சொல்லத் தெரியலை சார்."

"நான் உங்களை மறக்காததால் தான் இப்ப பேசிக் கொண்டிருக்கிறேன்." இப்படியெல்லாம் ஒரு அழகான, கம்பீரமான வாலிபன் மயக்கும் இரவு நேரத்தில் பேசினால் மலரின் மனம் மயங்காமல் என்ன செய்யும்?

அர்ஜுனிடம் தறிகெட்டு ஓடி மனதிற்கு பெரிய சங்கிலியை பிணைக்க முயற்சி மேற்கொண்டாள். மனம் முரண்டு பண்ணியது.

நீண்ட நேரமாக மௌனம்.

அவன் குரலுக்கு மயங்கிய மதிகெட்ட மனதின் மேல் உள்ள கோபத்தை அர்ஜுன் மேல் காட்டினாள்.

"இருக்கேன்!

என்ன சார் விஷயம்?" பட்டென்று கேட்க.

"தூங்கிட்டு இருக்கீங்களா மலர்? உங்க தூக்கத்தை கெடுத்திட்டேனா?"

"ம்கூம்"

"ஆனால் நீங்க என் தூக்கத்தை கெடுத்துட்டீங்க மலர்."

அர்ஜுன் உருகலோடு சொல்ல...

"அர்ஜுன் நீங்களா இப்படி பேசுறீங்க?" சீறினாள்.

"மலர்.... மலர்..."

"போதும் போதும் இப்பென்ன நேரம்? நீங்க எவ்வளவு பெரிய ஆள்? இப்படி எல்லாம் இனி பேச வேண்டாம்."

"நல்ல கதை பெரிய ஆள் என்றால் இதயம்னு ஒண்ணு இல்லாத

"என்ன! மகள் கர்ப்பமா இருக்காங்கிற சந்தோஷத்தில அம்மா மயங்கி விழுந்திட்டாங்களா அப்புறம் என்ன ஆச்சு?"

"சோதிச்சு பார்த்தா அம்மாவும் கர்ப்பமா இருக்காங்களாம்."

-எம்.செல்லையா,
சாத்தூர்.





வனா இருக்கணுமா?" சிரிப்போடு கேட்க மலர்விழி போனை கட் செய்தாள்.

கடமை மட்டும் இல்லையென்றால் மலர்விழியாலும் அர்ஜுனை இன்பமாய் காதலிக்க முடியும்.

உடனே கைப்பிடிக்கவும் முடியும்.

கஷ்டப்பட்டு வளர்த்து ஆளாக்கிய பெற்றோர்களையும், தங்கையையும் விட்டு விட்டு சுயநலத்தை எப்படி தேடுவாள் மலர்விழி?

அவன் நினைவுகள் இம்சித்தாலும் அந்த ஆசைக்கு அணை போட்டு படுத்தாள்.

ஆனால் மனம் விழித்துக் கொண்டு அவன் நினைவுகளை அசை போட்டு சந்தோசித்தது!

# 12

அதன் பிறகும் அர்ஜுன் ஏதாவது காரணத்துக்காக அடிக்கடி மலர்விழிக்கு போன் செய்தான்.

ஒருநாள் கோமுகி அணைக்கு வரச் சொல்லி விட்டு நீண்ட நேரம் அவளுக்காக காத்திருந்தான்.

மலர்விழி போகவில்லை.

அடுத்த நாள் உள்ளூரில் உள்ள பூங்காவிற்கு வரச்சொன்னான்.

அதை அவள் காதில் வாங்காமல் அலட்சியம் செய்தாள்.

அடுத்த நாள் மாலை பள்ளி கேட்டருகே வந்து நின்று மலர்விழிக்கு போன் செய்தான்.

"மலர் நான் அர்ஜுன்! கொஞ்சம் வெளியே வரமுடியுமா?"

"என்ன விஷயம்? நான் பனிரெண்டாம் வகுப்புக்கு பாடம் நடத்திட்டு இருக்கேன். தொல்லை பண்ணாதீங்க அர்ஜுன் ப்ளீஸ்.

படிச்சவர் தானே நீங்கள் ஏன் பண்பாடு தெரியாமல் நடந்துக்கிறீங்க?" போனை அணைத்தாள்.

"கம்பீரமான ஆண்பிள்ளையா? கௌரவமான ஆண்பிள்ளையா?ன்னு நீங்க சொல்லக் கூடாது அர்ஜுன். நாங்க சொல்லணும். நீங்க அப்படி சொன்னால் அதுக்கு பேர் சுயபுராணம்."

"மலர் வெளியில் வந்து உன் மலர் வதனத்தை காட்டி விட்டுப் போயேன்."

"உங்க அட்டூழியத்திற்கு அளவே இல்லையா?"

மலர் செல்போனை அணைத்து விட்டு பாடத்தை நடத்தப் போக...

அந்த வகுப்பில் நன்றாக படிக்கும் அரவிந்தன் எழுந்து,

"டீச்சர் போன்ல அர்ஜுன் அங்கிளா?"

"உனக்கெதுக்குடா? வேண்டாத வேலை?" மலர் கோபமாய் கேட்க,

இடைவேளைக்குப் பிறகு வந்த மாணவன் மகேந்திரன், "டீச்சர் இன்டர்வெல்லுக்கு வெளியே போனப்ப அர்ஜுன் அங்கிள் கார் நின்னுட்டு இருந்தது."

இதற்கு என்ன பதில் சொல்வது மலர்விழி விழித்தாள்.

"அங்கிள் ரொம்ப நல்லவர் டீச்சர். நாம அவங்க பண்ணைக்கு போனப்ப நம்மை எப்படி கவனிச்சிட்டாங்க! இளநீர், ஸ்வீட், காரம், காபின்னு கொடுத்து நல்லா உபசரித்தாங்க. அவரே நாள் முழுக்க நம்மோட வந்து பண்ணையை சுற்றிக் காட்டினார்."

"சரி சரி இதையெல்லாம் என்கிட்ட பேசாதே! பாடத்தை மட்டும் பேசு."

மகேந்திரனிடம் பேச்சை வளர்க்காமல்

மேஜைமேல் கிடந்த புத்தகத்தை எடுத்து மார்போடு அணைத்துக் கொண்டு தன் அடுத்த வகுப்புக்காக வெளியே வந்தாள்.

கறுப்பு கண்ணாடி அணிந்து காம்பவுண்டுக்கு வெளியே காரில் சாய்ந்து நின்று கொண்டிருந்தான், அர்ஜுன்.

அவன் அழகை ரசிக்க இரண்டு கண்கள் போதாது! ஆயிரம் கண்களுக்கு மேல் வேண்டும்!

மரியாதைக்காக கேட் அருகில் சென்று பேச மலர்விழி சென்றதும் புன்னகையோடு எதிர்கொண்டான்.

"இனிய மாலை வணக்கம், மலர்!"

"நான் உங்கிட்ட கொஞ்சம் பெர்சனலா பேசணும், அர்ஜுன்!"

"சொல்லுங்க மலர்விழி"!

"மன்னருக்கு சிறு கல் இருந்தால் கூட கடுங்கோபம் வந்துவிடும்"

"சாப்பாட்டில் தானே?"

"புறமுதுகு காட்டி ஓடி வரும்போது பாதையில்"...

மு.மதிவாணன், அரூர்.





"அர்ஜுன்... உங்க மனசுல என்ன நினைச்சுட்டு இருக்கீங்க?"

"நான் வெளிப்படையாகவே கேட்கிறேன் மலர்விழி!"

"எங்க வீட்டு நிலைமையை விளக்கியிருக்கேன் இல்லையா? மீண்டும் எதுக்கு இப்படி ஒரு கேள்வி அர்ஜுன்?...

என் தங்கையின் படிப்பு தேவை அதுவும் அவள் கால் சற்று ஊனம் அவள் திருமணம் எங்களுக்கு பெரிய சவால் தான். அதன் பிறகு அப்பா அம்மாவுக்கு செய்து விட்டுதான் என் திருமணம் பற்றி நான் நினைக்கவே முடியும்!"

"நீ என்னை மணந்தால் உனது குடும்பம் என் குடும்பம் உன் பெற்றோர்கள் என்னுடைய பெற்றோர்கள் உன் தங்கை என்னுடைய தங்கை ரெண்டு பேரும் மணம் செய்துக்கொண்டு அதை கணவன் மனைவியா இருந்து கொண்டு செய்யலாமே மலர்"

"அவள் உள்ளத்தை உடைத்துக் காட்ட.....

"ஊஹூம்....அதெல்லாம் சரிப்படாது"

"ஏன் என்னைக்கண்டால் ஏமாற்றுக்காரனா தெரியுதா, மலர்?"

என்று கோபத்தோடு கூர்ப்பார்வை பார்க்க...

"ஊஹூம் உங்க தகுதிக்கும், திறமைக்கும், அழகுக்கும் ஏற்றவள், நானில்லை! அர்ஜுன்...உங்க வசதிக்கும்... நல்ல வசதியிருக்கும்... பணக்காரர்கள் வீட்டில் இருந்து பெண் எடுக்கலாம்!"

"எனக்கு பிடிக்கணும் இல்லையா? என் உள்ளம் கவர்ந்தவள், நீதானே"

"அர்ஜுன்...அர்ஜுன்....என்ன இது அடம்? ஏன் இந்த பிடிவாதம்? அப்படி உங்களை என்னிடம் ஈர்த்த சங்கதி எது?"

"தெரியல, மலர்! உன்னிடம் எல்லாமே எனக்கு பிடிச்சிருக்கு! நீ உன் மாணவர்கள்கிட்ட காட்டின அன்பு பாசம்... உன் வேலை மேல் வைத்த மதிப்பு... தாத்தா காலில் விழுந்து வணங்கின மரியாதை... குடும்பத்துக்காக நீ காட்டற அக்கறை, ஊனமான தங்கைக்கு நல்ல வாழ்க்கை ஏற்படுத்தி கொடுக்கணும்னு துடிக்கற தூய மனம்... பெற்றவர்கள் மேல் வைத்த அளவுக்கதிகமான நேசம்... இப்படி எல்லாமே சேர்ந்துதான் உன்னை எனக்கு இந்த அளவு பிடிச்சது"

அர்ஜுன் அத்தனையையும் கொட்ட... அவள் இதயம் நெகிழ ஆரம்பித்தது.

"இளவரசன் கணக்காய் இருக்கிறீர்கள் உங்கள் பக்கத்தில் நிற்கவே எனக்கு அருகதை இருக்கான்னு நான் நினைக்கும் போது... உங்களில் பாதியாய் ஏற்றுக் கொள்கிறேன் என்கிறீர்களே!

நீங்கள் எவ்வளவு பெரிய குடும்பம்! சாதிக்க வேண்டிய இளைஞர். உங்கள் உயரம் உங்களுக்கே புரியவில்லை"

"நீ என் வாழ்வில் வந்தால்... இன்னும் நிறையவே சாதிப்பேன், மலர்!"

"அதற்காக வெல்லாம் ஐ லவ் யூ சொல்ல முடியாது அர்ஜுன்

வீணாக என் மனதை சலனலப்படுத்தாதீர்கள்!''

அவள் அவனை நோக்கி கை கூப்பினாள்.

''அதற்கு மேல் அங்கு பொது இடமான சூழ்நிலையில் மாண வர்கள் நின்றதை கண்டு அவளிடம் என்ன பேசுவது?

சோகத்துடன் திரும்பினான் காரில்.

## 13

ஞாயிற்றுக் கிழமை!

ஆகாய வண்ண சட்டையும், கறுப்பு நிற பேண்டும் அணிந்து.... டைனிங் ஹாலுக்கு வந்தமர்ந்தான், அர்ஜுன்.

தாத்தா அவனுக்காக காத்திருந்தார். வேலைக்காரி பரிமாற உண்டனர்.

''அர்ஜுன்... உன் முகத்தில் நிரந்தர சிரிப்பு மிஸ்ஸிங்! கண்களில் சோர்வு இரவில் தூக்கமின்மைன்னு நிறைய மாற்றத்தைக் காண்கிறேன் என்ன விஷயம்? ''

தாத்தவை சின்ன சிரிப்போடு ஏறிட்ட அர்ஜுன்....

''என் இதயத்தில் ஒரு தேவதையை குடியமர்த்தியிருக்கேன், தாத்தா!'' அர்ஜுன் சிலாகித்து சொல்ல...

''நிஜம் தானா, அர்ஜுன்?'' தாத்தா சந்தோசமாய் கேட்க...

''ஆமாம் தாத்தா! யார்ன்னு கண்டுபிடியுங்க பார்க்கலாம்?''

''உன் இதயத்துல இருக்கற தேவதை பேர் மலர்விழியா?''

''தாத்தா... எப்படி.... எப்படி உங்களுக்கு தெரியும்?''

''நீ எந்தப் பெண்ணையும் சுவாரசியமா பார்த்து நான் கண்டதில்லே! அன்று மலர் விழி டீச்சர் வந்தப்போ நீ பார்த்த பார்வை.... பழகின விதம்... சாப்பிடமாட்டேன்னு சொன்ன பெண்ணை வற்புறுத்தி சாப்பிட வைத்த அக்கறை... அவள் மாலை பண்ணையை விட்டு திரும்பினப்போ... உன் கண்களில் தெரிந்த சோகம் என்று எல்லாமே எனக்கொரு செய்தியை சொல்லியது! நீ அடிக்கடி வடக்கநந்தல் பள்ளிக்கூடம் பக்கம் தென்படறதா என் கூட்டாளி ஒருத்தன் சொன்னான்! அப்போதே புரிஞ்சிக்கிட்டேன்! நீ மலர்விழி டீச்சர் கிட்ட சரணாகதி ஆகிட்டேங்கிறது!''

''தப்பா தாத்தா...?''

''எப்படி தப்பாகும்? என்னடா இவனுக்கு திருமண வயது ஆகி



விட்டதே! இன்னும் மண், மரம் இயற்கை, விவசாயம், விளைச்சல், சமூகம்ன்னு திரிஞ்சிட்டு இருக்கானே! கல்யாணம், காட்சின்னு எப்போ என் பேரன் வாழ்விலே நடக்கும்? நல்லப் பெண்ணாய் என் பேரன் கண்ணில் காட்டுப்பா பெருமாளேன்னு வேண்டிட்டேன்! என் வேண்டுதலுக்கு அந்த பெருமாள் செவிமடுத்துட்டான்!''

''மலர்விழியை உங்களுக்கு பிடிச்சிருக்கா, தாத்தா?''

''மலர்விழிக்கு என்ன குறை? தவிர என் பேரன் தப்பான ஒரு பெண்ணைத் தேர்ந்தெடுக்க மாட்டான் என்ற நம்பிக்கையும் எனக்கிருக்கு! எல்லாவற்றையும் சரியாய் செய்பவன்... வாழ்க்கைத் துணையையும் நீ சரியாத்தான் தேர்ந்தெடுப்பே!''

''உங்க நம்பிக்கையை மலர்விழி பொய்யாக்காமல் இருக்கணும் தாத்தா! இன்று ஞாயிற்றுக் கிழமையில்லையா? வீட்டுல அவள் பெற்றோரிடம் நேரில் என் விருப்பத்தை சொல்லி என்னை அறிமுகப்படுத்த விரும்பறேன். அங்கேதான் போறேன், தாத்தா! மலர் தான் எப்படி ரியாக்ட் பண்ணுவான்னு தெரியலை!''

''போயிட்டு வா, அர்ஜுன் தாத்தாவும் வரவா?''

''தேவேந்திரன், வசந்தி, மலர்விழி மூவரும் வாசலுக்கே வந்து வரவேற்றனர். அர்ஜுனையும், தாத்தாவையும்...

வீடு நகரத்தை விட்டு தள்ளி தனியே இருந்தது. சுற்றிலும் காம்பவுண்ட் சுவர் எழுப்பி... மத்தியில் பிரம்மாண்டமாய் கட்டியிருந்தனர். நகரத்தைவிட்டு தள்ளி இருந்ததால் வாடகை குறைவாய் இருக்க... அங்கே குடி வந்து விட்டனர், மலர்விழி குடும்பத்தினர்.

கயல்விழி ஆச்சரியத்துடன் அர்ஜுனை நோக்கிக் கொண்டிருந்தாள்.

''காபியா? டீயா தம்பி?'' வசந்தி கேட்க...

''அதெல்லாம் உடலுக்கு கெடுதிமா! சாத்துக்குடி ஜூஸ் எடுத்துட்டுவரேன்!'' என்று கூறிவிட்டு மலர்விழி உள்ளே போனாள்

''அவரு படி படியா முன்னுக்கு வந்தவரு..''

''என்ன வேலையில இருந்தாரு?''

''லிப்ட் ஆப்ரேட்டரா இருந்தாரு...''

-கே.பிரசன்னகுமார், குடந்தை.





"என் மாமியார் ஏற்கனவே பாதி செத்திட்டாங்க"

"அதனால?"

"ஆப்ரேசன் சார்ஜை பாதியா பண்ணுங்க..."

-கே.பிரசன்னகுமார்,
குடந்தை

"அக்காவுக்கு இப்பவே அத்தான் மேல எவ்வளவு அக்கறை? பார்த்தியாம்மா? இவள் திருமணத்துக்கு பிறகு நம்மை யெல்லாம் திரும்பி பார்ப்பாளா?"

கயல்விழி கிண்டல் செய்ய...

"என் வாயாடி...சும்மாயிருக்க மாட்டே?" வசந்தி அதட்டினாள்.

"தம்பி...மலர்விழி உங்களைப் பற்றி நிறைய சொன்னா நானும் உங்களைப் பற்றி நிறைய கேள்விப்பட்டிருக்கேன் நீங்க பணக்காரவங்க! எங்க தகுதி தெரியலை அதனால் தான் நாங்களும் மலர்விழியும் ரொம்பவும் தயங்கறோம்."

தேவேந்திரன் கவலையாய் கேட்க...

"பணம் கிடக்குது அங்கள்! பணத்தைவிட பாசமும், பண்பாடும் தான் பெரிசு! அது உங்க எல்லோரிடமும் குறைவில்லாம இருக்கு!"

அர்ஜுன் சொல்ல... தேவேந்திரன் மலைத்துப்போனார்.

"சிறுசுங்க மனசை புரிஞ்சுட்டு பெரியவங்கதான் பாந்தமுடன் நடந்து கொள்ளணும்" -தாத்தா எடுத்துரைத்தார்.

"தம்பி... எங்களுடைய வாழ்வாதாரமே மலர்விழிதான்! என்னால் இனி வேலைப்பார்த்து சம்பாதிக்க முடியாதுப்பா!"

"அங்கிள்... எனக்கு இந்த தாத்தா மட்டும் தான்! பெற்றோர்கள் இல்லே! அந்த இடத்துல இருந்து நீங்க என்னை வழி நடத்தினால் சந்தோசப்படுவேன், அங்கிள்!"

"என் பெண் ஒரு தங்கமான மாப்பிள்ளையைத் தான் மணக்கப் போறான்னு நினைக்கும் போது ரொம்ப மகிழ்ச்சியா இருக்குப்பா!"

வசந்தியம்மாள் சொல்லிக் கொண்டிருக்கும் போது ஆப்பிள் ஜூஸ் எடுத்து வந்து நீட்டினாள் மலர்விழி. அவன் எடுத்துக் கொண்டான்.

"அர்ஜுன் திருமணத்துக்கு பிறகு ஒரு அனுமதி மட்டும் கிடைக்குமா?"

"என்ன மலர்?"

"இந்த ஆசிரியர் வேலையை நேசிக்கிறேன், அர்ஜுன்! தொடர்ந்து இந்த வேலையை நான் செய்யணும்! நீங்க தடுக்கக்



கூடாது!''

''தடுக்கமாட்டேன், மலர்! ஆனால் நம்ம இடத்திலேயே அநாதை குழந்தைகளுக்கான இல்லமும், பள்ளியும் நடக்குதே! அதில் நீ பொறுப்பெடுத்து முழுமூச்சா அந்த ஆதரவற்ற குழந்தைகளுக்காக உழைக்கக் கூடாதா மலர்? ஆசிரியையாகவும், அதே சமயம் அந்தக் குழந்தைகளுக்கு தாயாகவும் மாறி இதம் தரக்கூடாதா மலர்?''

அர்ஜுன் ஆசையோடு கேட்க...

''உங்க விருப்பம் அதுன்னா நானும் மனப்பூர்வமா செய்யறேன், அர்ஜுன்!''

மலர் மலர்ந்த முகத்துடன் சொன்னாள்.

வசந்தி பார்த்து பார்த்து சமைத்து பரிமாற அர்ஜுன் ஆசையாசையாய் உண்டான் தாத்தாவுக்கு ரொம்ப திருப்தி.

''எங்க அம்மாவே உயிர் பெற்று வந்து... எனக்கு சமைத்து அன்போடு பரிமாறியது போல உணர்வு, ஆன்ட்டி! ரொம்ப நன்றி ஆன்ட்டி! ''என்றவன்... தாத்தாவும் அர்ஜுனும் விடை பெற்று திரும்பினார்கள்.

''இவ்வளவு வசதியான வீட்டுப் பிள்ளைக்கு கொஞ்சமும் தலைக்கனம் இல்லே! அலட்சியப் போக்கு இல்லே! திமிர் இல்லே! இது போல பிள்ளையை இந்தக் காலத்துல காண்பது அரிதுங்க!'' என்ற கணவரைப் பார்த்து சொன்ன வசந்தி.....''மலர்விழி... நிச்சயமாவே நீ கொடுத்து வச்சவடி! நாமெல்லாம் எந்தப் பிறவியில் செய்த புண்ணியத்தின் பலனோ இந்தப் பிறவியில் அர்ஜுனை நம் கண்ணில் கடவுள் காட்டியிருக்கார்.''

வசந்தி உணர்ச்சி பொங்க கூறினாள்.

அந்த நால்வரும் எதிர்கால பயம் நீங்கி ஆனந்தத்தில் மகிழ்ந்தனர்.

## 14

காலை முதல் இரவு வரை ஒரு மூட்டை உரம் கூட விற்பனையாகவில்லை! ஒரு கிலோ விதைக்கூட விற்பனையாக வில்லை!

கொள்முதலாளர்கள் வருவார்கள் என்று எதிர்பார்த்து ஏமாந்தது தான் மிச்சம்!

இந்த நிலை இன்று நேற்று ஏற்பட்டதல்ல! அர்ஜுன் இயற்கை



விவசாயத்தில் தலையெடுக்க ஆரம்பித்த நாளிலிருந்தே லேசாய் ஆரம்பித்த தலைவலி இன்று மண்டையே பிளந்து போகும் அளவு கடுமையான தலைவலியாகிவிட்டது.

ஏற்கனவே கடனுக்கு உரமும், விதையும் வாங்கி போய் கடனை அடைக்காமல் வைத்திருக்கும் சில விவசாயிகளுக்கு தொல்லைக் கொடுத்தாலாவது அவர்கள் கடைக்கு மீண்டும் வருவார்கள் என்று ராஜேஷை கடனாளி வீட்டிற்கு அனுப்பினார், அரங்கநாதன்.

ராஜேஷ் தன்னோடு சில ரவுடிகளை அழைத்துப் போய் ''உடனே கடனைக் கொடு! இல்லே நம்ம கடைக்கு உரம் வாங்க ரெகுலரா வரேன்னு இந்தப் பத்திரத்தில கையெழுத்துப் போட்டுக் கொடு'' என்று மிரட்ட...

அந்தக் கடனாளிகள் ராஜேஷிடம் இரண்டு நாட்கள் அவகாசம் கேட்டனர்.

அர்ஜுன் முன்பு போய் நின்றனர்.

சமீபமாய் இயற்கை விவசாயத்திற்கு மாறிய விவசாயிகளை ஊக்குவிக்க...அவர்கள் கேட்ட தொகையினை அர்ஜுன் தர...

''கண்டிப்பா கொஞ்ச கொஞ்சமா திருப்பி தந்துடறோம், தம்பி!''என்று கூற...

''பரவாயில்லே சிரமப்படாமல் கொஞ்ச கொஞ்சமாய் கொடுங்க!'' என்று கூறி அனுப்பி வைத்தான்.

விவசாயிகள் ராஜேஷ் முகத்தில் விட்டெறியாத குறையாய் பணத்தைக் கொடுக்க...

அரங்கநாதனும், ராஜேஷும் கொதிப்பின் உச்சநிலைக்கே சென்று விட்டனர்.

சிறிய அளவில் உர விற்பனை செய்தவர்கள் கடையை இழுத்து மூடிவிட்டு...வேறு தொழில் பார்க்க....

''அரங்கநாதனால் இந்த லாபம் தரும் தொழிலை விட முடியமால் கஷ்டப்பட்டார்.

அவருக்கு கோபமெல்லாம் விவசாயிகள் மேல் இல்லை. அர்ஜுன் மேல்தான் இருந்தது.

''அப்பா...இதுக்கு எதுக்கு கவலைப்படறீங்க? நான் அர்ஜுன்கிட்ட பேசிப்பார்க்கறேன்! இந்த இயற்கை வேளாண்மை, பயிற்சி மண் பரிசோதனை அது இதுன்னு செய்ற வேலையை நிறுத்துடா! இல்லேன்னால் கையை, காலை வாங்கிடுவேன்னு மிரட்டிப் பார்க்கறேன்!''

ராஜேஷ் ஆத்திரத்தின் விளிம்பில் இருந்து கொண்டு சொல்ல...

''அவன் உன் மிரட்டலுக்கு அடிபணிவான்னு நினைக்கறியா, ராஜேஷ்?''

''பார்க்கலாம்ப்பா! முயற்சிதானே?''

''செய் ராஜேஷ்! நமக்கு எதுவும் தீங்கு வராமல் செய்!''

அரங்கநாதன் சொன்னார்.

ஒரு நாள் அர்ஜுனனை கள்ளக்குறிச்சி எல்லையில் கண்டுவிட்டு வழிமறித்தான், ராஜேஷ்!

''அர்ஜுன்...எங்க வழியில குறுக்கிடாதே! கோடிக்கணக்கான ரூபாயை முதலாப் போட்டு நாலு இடத்துல ஒஹோன்னு விற்பனை பண்ணிட்டு இருக்கோம்! அமோகமா இருந்த உர விற்பனை, விதை விற்பனை... இப்போ உன்னால படுத்துடிச்சி!''

''இங்கே பார், ராஜேஷ்! மக்களுக்கு எது நல்லது? எது கெட்டது ன்னு தெரியுது! கெட்டதை தவிர்த்து நல்லதைத் தேர்ந்தெடுக்கறாங்க! அது என் தப்பில்லையே!'' என்று அர்ஜுன் பொறுமையாய் விளக்க...

''ஏய்... நம்ம பகுதி ஒட்டு மொத்த விவசாயிங்க மனசையும் கெடுத்து வச்சிருக்கடா!''

ராஜேஷ் கொதிப்போடு மரியாதையின்றி பேச... அர்ஜுனும் கோபமானான்.

''வழியை மறித்து கலாட்டாவா பண்றே? யார்டா கெடுத்தது? நீங்க தான்டா நம்ம மண்மாதாவை கெடுத்து நஞ்சாக்கி வச்சிருக்கீங்க! நீங்க கொள்ளையடிச்சி கொழுக்கறதுக்கு வேற வழியே இல்லே? அதை விட்டு பூமித்தாயின் தன்மையைக் கெடுத்து, நோஞ்சானாகவும், விஷமாகவும் ஆக்கிவச்சிருக்கீங்களே!...

இது நாள் வரையும் உயிர் வாழ உண்ணும் உணவிலேயே விஷம் கலந்தது தெரியாமல்.... சாப்பிட்டு... தங்கள் உடலை நோய்ங்கிற அரக்கனுக்கு பலியாக்கிட்டு வந்தாங்க, மக்கள்!....

இப்போ மக்களும், விவசாயிகளும் விழிச்சிட்டாங்க! இயற்கையோடு கை கோர்த்துட்டாங்க! அதை யாராலும் தடுக்க முடியாதுடா!....

இயற்கையா விளைவிக்கற உணவுப் பொருட்களுக்கு விவசாயிகள் செய்யற செலவும் குறைச்சல்! அவங்க விற்பனை செய்வதும் குறைஞ்ச விலையிலே! அதை மனமகிழ்வோடு வாங்கி சந்தோசமா பயன்படுத்துறாங்க மக்கள்! அதெல்லாம் உங்களுக்கு பிடிக்கலையா?''...

அர்ஜுன் பேசப் பேச.... ராஜேஷின் முகம் எரிமலையின் தணலானது!

''விவசாயிகளோட மனசைக் கெடுக்கற வேலையை இதோடு நிறுத்த முடியுமா...? முடியாதா?''

''என் உயிர் உள்ளவரை இந்த மக்களுக்கு உழைப்பதை, விழிப்புணர்வு ஏற்படுத்துவதை நான் நிறுத்தமாட்டேன்!''

''இதனால் நீ பெரிய பின் விளைவுகளைச் சந்திக்க வேண்டி வரும்!''

''நீயும் என்னைப் போல ஒரு மனிதன்! உன்னால் என்னை என்னடா செய்ய முடியும்?''



''இந்தப் போராட்டத்தில் மிஞ்சப் போறது நீயா? நானா? ன்னு பார்த்துடலாம்!''

ராஜேஷ் சண்டைக் கோழியாய் சிலிர்த்து கத்த....

''என்னை என்னடா உன்னால் செய்ய முடியும்? போடா உன் வழியைப் பார்த்துட்டு! உலகத்துல உரத் தொழிலை விட்டா வேற தொழிலே இல்லையா?....

பெரிசா கட்டடம் கட்டி... ஒரு மாடியில துணிகளும்.... இன்னொரு மாடியில தங்கமும், வைரமும்... இன்னொரு மாடியில பாத்திரங்களும்ன்னு... மக்களுக்கு அலைச்சல் இல்லாமல் ஒரே இடத்துல வாங்கறாப் போல கடைகளை நடத்தி பெரிசா வியாபாரிகள் லாபம் பார்க்கலே! அது போல ஏதாவது செய்து பிழைப்பது தானே''

அர்ஜுன் அவனிடம் வாதாடி விட்டு காரை கிளப்பிச் செல்ல... ரத்தமென சிவந்த விழிகளால் அவன் கார் செல்லும் பாதையையே பார்த்துக் கொண்டிருந்தான், ராஜேஷ்!

அதன் பிறகு கொஞ்ச நேரத்தில் தந்தை அரங்கநாதன் முன்பு நின்றான்.

''அப்பா...அவன் நம்ம மிரட்டலுக்கெல்லாம் அடிபணிய மாட்டான்!'' என்றவன் அர்ஜுனோடு நடந்த வாக்குவாதத்தை ஒப்புவிக்க..

''என்னடா செய்யலாம்? இந்த வியாபாரத்தை விட்டுட்டு வேற ஏதாவது செய்யலாமா?''

அரங்கநாதன் முகம் வாடிக் கேட்க... ராஜேஷ்க்கு தாங்க முடியவில்லை.

''அதெல்லாம் வேண்டாம்ப்பா!''

''அர்ஜுன் இருக்கும் வரை இந்த வியாபாரம் சாத்தியமில்லே, ராஜேஷ்!''

''சாத்தியப்படும்!'' திடமாய் ராஜேஷ் சொல்ல...

''என்ன கபாலி அந்த வீட்லே திருடப் போன நீ வெறும் கையை வீசிக்கிட்டு எதுவுமே திருடாம வார்றே..?''

''எனக்கு கொஞ்ச முன்னாடி தான் மாப்பிள்ளை வீட்டுக்காரங்க வந்துட்டு போனாங்களாம்''.

-மு.மதிவாணன்.



"எப்படி? அர்ஜுனனைப் போட்டுத்தள்ளப் போறியா?"

"அர்ஜுனனைக் கொன்றால் அவன் தியாகியா போய் சேர்ந்துடுவான்! அவன் வழியைப் பின்பற்றிய விவசாயிகள் அவனுக்கு சிலை வைத்து, மாலை மரியாதை செய்து... அவன் விட்டுச் சென்ற கொள்கையை இன்னும் அதிகமாகவே கடைப்பிடிப்பார்கள்!"

அரங்கநாதன், மகன் என்ன சொல்ல வருகிறான் என்று புரியாமல் பார்க்க...

"அர்ஜுன் தலை தூக்காமல் முடங்கிடணும்! அதுக்கு அவன் இதயத்துல அடிக்கணும்! இதயத்தில் வலிக்க ஏற்பட்ட அடியால் அவன் அப்படியே எழவே முடியாமல் விழுந்துடணும்!"

"நீ சொன்ற எதுவுமே புரியலே, ராஜேஷ்!"

"அவன் இதயத்துல ஒருத்தி இருக்காளாம்! அவளைப் பற்றி செய்தி சேகரிக்க என் நண்பனிடம் சொல்லியிருக்கேன். அவளைக் கொன்று... அர்ஜுன் மேல பழியை போடப்போறேன்"

"நீ எனக்கு ஒரேப் பிள்ளை! போலீஸ், கேஸ்ன்னு ஏதாவது ஆயிடப் போகுது ராஜேஷ்!"

"அதெல்லாம் ஆகாம செய்துடலாம்!"

"முடியுமா, ராஜேஷ்?"

"ராஜேஷ் நினைச்சி முடியாமல் போன காரியம் உண்டாப்பா?"

அவன் மமதையோடு சிரித்தான்!

# 15

தென்றலின் நேசமும், மலர்களின் வாசமும் கலவையாய் கலந்து வந்து... மனிதர்களின் மேனி தொட்டு, மெய் தொட்டு, சிலிர்க்க வைத்த அழகான மயக்கும் மாலைப் பொழுது!

கோமுகிடேம் பூங்காவில் மறைவிடம் தேடி அமர்ந்தனர்... அர்ஜுனும், மலர்விழியும்!

எதிரெதிரே அமர்ந்து ஒருவரை ஒருவர் நேசத்தோடு தாபத்தோடு பார்வையால் விழுங்கிக் கொண்டிருந்தனர்!

ஒருவார காலப்பிரிவு!

மலர்விழி பனிரெண்டாம் வகுப்பு தேர்வுத்தான் இருந்த விழுப்புரம் சென்றிருந்தாள்.

காலை, மாலை போனில் அன்பைப் பரிமாறிக் கொண்டாலும்...



நேரில் நின்று... இதயம் தொட... விழிகளால் ஒருவரை ஒருவர் ஆசையோடு ஸ்பரிசித்துக் கொள்ளும் சுகமே தனிதான்!

"அர்ஜுன்... நான் இல்லாமல் ரொம்ப கஷ்டப்பட்டீங்களா?"

"ம்... ரொம்ப ரொம்ப மலர்ம்மா தவிச்சிட்டேன் துடிச்சிட்டேன்டா, கண்மணி!" அவன் உயிர் உருக சொல்ல...

"என்ன ஆம்பளை, நீங்க? இந்த சின்ன பிரிவையே உங்களால தாங்க முடியலையா?" அவள் கேலியாய் கண்டிப்பாய் கேட்க...

"பிரிவுல சின்ன பிரிவு, பெரிய பிரிவுன்னு என்ன இருக்கு? மலர்... மலர்ம்மா... நீ என் அருகிலேயே இருக்கணும்ன்னு ஏங்குதுடா! இனி என்னை விட்டு இப்படி எங்கும் போகாதே!"

"சரி!"

"திருமணத்துக்கு தாத்தாவை நாள் பார்க்க சொல்லட்டுமா?"

"என்ன அவசரம், அர்ஜுன்? இன்னும் கொஞ்ச நாள் போகட்டுமே!"

"படிச்சவன் முன்பு வகை வகையான உணவை வச்சிட்டு... கையைக் காலை கட்டிப் போட்டாப்பல இருக்கு, என் நிலைமை! உன்னிடம்தான் சின்ன ஓட்டல், உரசல், கைத் தொடல் இடைக்காதே! அங்கங்கே தேசிக்கறவங்க காதலி மடியில புரள்றதும்... கட்டிக்கிறதும்... கிஸ் பண்றதும்ன்னு நல்லா என்ஜாய் பண்றாங்க! ஆனால் நீ...?" என்று முறைப்போடு கூற...

"என்ன அவசரம், அர்ஜுன்? நாமும் அப்படி எல்லாம் இருப்போம்!"

"எப்போ?"

"திருமணத்துக்கு பிறகுதான்!"

மலர்விழி அழகாய் சின்ன இதழ் சுழித்து சிரிக்க...

"பாவி... பாதகி... என்னை இப்படி இம்சித்து கொல்றியே...! பிள்ளைகளுக்கு மட்டும் பாடங்களை பாடத்தை செய்முறையோடு விளக்கறே? எனக்கு இந்த பாடத்தை வெறும் விளக்கத்தோட மட்டும் தான் நடத்தறே? எனக்கு எல்லாம் செய்முறை விளக்கம் கிடையாதா?"

அர்ஜுன் குறும்போடு கண்சிமிட்டிக் கேட்க...

"புத்திப் போகுது பாரு! இதுக்குதான் காதல் காதல்னு உருகுறீங்களா?

இந்த தவிப்பெல்லாம் தாகம் தீர்றமாதிரி ஒரு நாள் தீர்ந்து மனம் சமநிலைக்குபோனதும் இதே அன்பாவதுமிஞ்சுமா?"

"உனக்கு எல்லாம் சந்தேகம்தான் காதலைவிட்டு தாபத்தை பிரிக்க முடியுமா? இரண்டும் ஒன்றுக்குள்ள ஒன்று..."

"போதும்டா சாமி! இன்னிக்கு சிறிதளவு மட்டும் அந்த மீறலுக்கு அனுமதியுண்டு!" அவள் கையை எடுத்து தன் மடியில்

வைத்துக் கொண்டாள் மலர்விழி.

''அவன் உற்சாகமானா.''

''ஏய் திருட்டு பூனை? அப்பப்பா ...இப்படி பாயாங்கறது?''

''ஆமா... யார் பூனை?''

''நீங்கதான்! அதுவும் பயங்கர பசியோடு இருக்கற பூனை!''

மலர் கன்னச் சிரிப்பை மென்று விழுங்கி கூற...

''ஏய்... ஏய்... பார்த்தியா... பார்த்தியா...? நான் பூனையா? காதலி சொன்னதுக்கு மதிப்பு கொடுத்து வச்சா நான் பூனையாடி? இன்று உன்னைக் கிஸ் பண்ணாமல் விடமாட்டேன்!''

அவன் அவளைத் தாவி அணைத்து.... முகம் தேடிப் போக...

அவள் முரட்டுத்தனமாய் அர்ஜுனைப் பிடித்துத் தள்ள...அர்ஜுன் புல்வெளியில் மல்லாந்து விழுந்தான்.

மலர் எழுந்து ஓடினாள்.

''ஏய் அழகான ராட்சசி... இந்த ஆம்பளை மனசைப் புரிஞ்சிக்காத அரக்கி...'' என்று அர்ஜுனும் விரட்டிக் கொண்டு ஓட.....

இந்தக் காட்சியை சில காதலர்கள் ரசித்துப் பார்த்து சிரித்தனர்.

பின்னர் காரில் ஏறி பயணித்தனர்.

''மலர் பயப்படாமல் ராத்திரி தனியே இருந்துப்பியா? உங்க அப்பா, அம்மா உறவினர் வீட்டு கல்யாணம் போறதா சொன்னேல்ல?''

''வெளியில பெரிய காம்பவுண்ட் சுவர்... பெரிய கேட்.... அதை மூடிட்டு மெயின் டோரை மூடிட்டால் என்ன பயம்? ம்?''

மலர்விழி அழகாய் சிரித்தாள். காரிலிருந்து இறங்கி டைட சொல்லி நடந்தவளை.. அர்ஜுன் திரும்பி திரும்பி பார்த்துக் கொண்டு சென்றான்.

இரவு பதினொரு மணி! காலிங் பெல் சப்தம்!

திருமணத்துக்கு சென்றவர்கள் இரவோடு திரும்பி விட்டார்களோ என்று ஆசையோடு கதவைத் திறக்க... அங்கே யாரோ புதியவனைக் கண்டு... அதிர்ச்சி தாக்கி... சிலையாய் நிற்க.. அதைப் பயன்படுத்திக் கொண்டான், ராஜேஷ்.

மலரை உள்ளே தள்ளி கதவை மூடினான்.

''ஏ... ஏய்... யார் நீ? என்னடா செய்யறே?'' என்று பயத்தோடு கேட்க...

''நான் உன் மச்சான்டி! உன்னை மாலைவிட்டுப் போற மச்சான்டி!'' அவன் பயங்கர சிரிப்பொன்றை உதிர்த்து சொல்ல..

''ஏய்.. ஏய்..'' என்று அவள் பின்வாங்க..

''உன்னைக் கொல்லணும்னு துடிச்சிட்டு வந்தேன்! உன்னைப் பார்த்த பின்பு என் முடிவை மாத்திட்டேன் இப்படி ஒரு ரதியைக் கொன்று பழி தீர்க்கணும்னு இல்லே! உன்னை அனுபவிக்க முடிவு செஞ்சுட்டேன். எதாவது ஒரு வழியில் அர்ஜுனை பழி வாங்க



ணும்னு முடிவே பண்ணிட்டேன். உன்னை எனக்கு ரொம்ப பிடிச்சிருக்குடி!'' ராஜேஷ் சொல்லிக் கொண்டே சிறுசிறு அடியாய் எடுத்து வைக்க...

''நாயே.. என்னடா பேசறே?''

''எச்சருக்கு புரியலையா என்ன? தமிழ்லதானே பேசறேன் நம்ம ரெண்டு பேருக்கும் இப்ப முதல் இரவு! பிறகு இருவருமா! என் பாலிசி என் செல்லக்குட்டிக்கு பிடிச்சிருக்கா என்ன?''

''டேய்.. மரியாதையா உள்ளறையைவிட்டு வெளியே போடா'' பத்திரகாளியாய் மாறி சத்தம் போட்டாள்.

''உன்னை மாலைவிட்டுப் போறவன் நான்! கொஞ்சம் மரியாதை கொடுக்க பழகிக்கடி!''

''உனக்கெல்லாம் மரியாதை ஒரு கேடா? பொறுக்கி நாயே... எனக்கு மாலைவிட்டப் பொறந்தவன் அர்ஜுன் மட்டும் தான்டா! என் உடல், உயிர்... ஏன் என் சுவாசத்தைக் கூட அடுத்தவர் தொடாமல் பத்திரமா என் அர்ஜுனுக்காக பாதுகாத்து வச்சிருக்கேன் அப்படியிருக்க நீ என் உடலைத் தொட்டுடுவியா? தொட்ட கையை வெட்டுவேன்டா! அப்போ... அர்ஜுன் சொன்ன ராஜேஷ் நீதானா? உங்களுக்கு பிழைக்க வேற பொழப்பே கிடைக்கலையாடா? அடுத்தவங்க வயித்துலேயும், உயிர்லேயும் அடிச்சி... இப்படி ஒரு மானம் கெட்ட பிழைப்பு நடத்தணுமா?''

''என்னடி பேசிட்டே போற? வாடி!''

ராஜேஷ் அவள் கையைப் பற்றி இழுக்க... அவள் உதறிவிட்டு அறையைச் சுற்றி ஓட..... அவன் விரட்ட..... மாடிப் படிகளில் தபதபவென்று ஓடினாள்.

அவளறையில் இருந்த செல்போனை எடுத்து அர்ஜுன் நம்ப

''ஏங்க.. என்னங்க நீங்க?
வேலைக்காரியைக் கண்டுமா நடுங்கிறீங்க''?
''பின்னே... உன் சேலையை அவகிட்ட கொடுத்து கட்டிக்கச் சொல்லிட்டியே..
உன்னைப் பார்த்த மாதிரியே இருந்துச்சு.. அதான்''!

- ஆர்.ஜி.கல்யாணி,
திசையன்விளை



க்குதட்ட... அர்ஜுன் எடுத்ததும்..

''அ...அர்ஜுன்... அர்ஜுன்.. நா...நான்... ரா... ராஜேஷ்.. ராஜேஷ்... என்னை...''

ராஜேஷ் வெடுக்கென்று செல்போனை ஆப் செய்து அவற்றை தூக்கி பலமாய் வீச... அது உடைந்து உருவில்லாமல் போனது!

''ஏய் என்னடி... அர்ஜுனைக் கூப்பிடறீயா? அவன் என்ன பரந்தாமனா வந்து காப்பாத்துவான்னு நினைப்பா? அவன் வந்து சேர்வதற்குள் நீ என்னவளாய் ஆகிடுவே தெரியுமா?''

ராஜேஷ் சிங்கமாய் கர்ஜித்துக் கொண்டு அவளை அணைக்க... அவள் திமிறினாள்.. அவன் மார்பில் பலம் கொண்ட மட்டும் குத்தினாள்.

அவன் வெறி அதிகமானது! அவன் அவளை வேகமாய் அணைத்து கட்டிலில் தள்ளி.. அவள் மீது கவிழப் போன சமயம்.. மலர்விழிக்கு எங்கிருந்துதான் அவ்வளவு பலம் வந்ததோ... அவனைப் பிடித்து தள்ளிவிட்டு.. அந்த அறையை விட்டு ஓடிவந்தாள்.

மாடிப்படிகளில் இரண்டு படி இறங்கியிருக்க மாட்டாள். அதற்குள் கால் இடறி 'கடகட'வென மாடிப்படிகளில் உருண்டு.. மண்டை பிளந்து ரத்த வெள்ளத்தில் கிடந்தாள்.

அந்த கோலத்தில் அவளைக் கண்ட ராஜேஷ் வெறியிறங்கி உடல் விதிர்விதிர்த்து.. வந்த வழியே திரும்பிப் பாராமல் ஓடினான்.

சற்று நேரத்தில் அர்ஜுன் அங்கே வந்து.. அவள் கோலம் கண்டு... அள்ளிப் போட்டுக் கொண்டு ஆஸ்பிட்டலுக்கு ஓடினான்.

உடனடியாய் அவசரப்பிரிவில் சேர்க்கப்பட்டாள்.

தேவேந்திரன், வசந்தி, கயல்விழி, தாத்தா அத்தனை பேருக்கும் தகவல் சொல்ல... கதறியடித்துக் கொண்டு வந்து சேர்ந்தனர்.

டாக்டர்கள் எவ்வளவு போராடியும் அவள் கண் விழிக்கவில்லை!

'மூளைச்சாவு' ஏற்பட்டுவிட்டதாய் டாக்டர் தெரிவிக்க...

''ஐய்யோ.. '' என்று வயிற்றில் அடித்துக் கொண்டு கதறினாள் வசந்தி.

அர்ஜுன் கத்தினான்.. கதறினான்... துடிதுடித்தான்..

ஒருநாள் பூங்காவில் 'அர்ஜுன்.. நான் என் கண்களை இறப்புக்கு பிறகு தானமா தருவதா... ஒரு விண்ணப்பம் பூர்த்தி செய்து கொடுத்திருக்கேன் நீங்க..?'

'நான் எப்போதே செய்துட்டேன், மலர்!''

'அர்ஜுன்.. எனக்கு ஏதாவது விபத்து நேர்ந்து பிழைக்க முடியாத நிலை ஏற்பட்டுட்டா என் இதயம், கண்கள், நுரையீரல், கல்லீரல், மண்ணீரல், கிட்னின்னு எடுத்து தானம் செய்யணும், நீங்க தெரியுதா?''

''ஏய் மலர்... எதுக்கு இப்படி அபசகுனமா பேசறே? நான் வாழறதைப் பத்தி கலர்கலரா கனவு கண்டால் நீ.. சாவறதைப் பத்தி பேசறே?'' என்று அர்ஜுன் கோபமாக...



''நெருப்புன்னா வாய் வெந்துடாது அர்ஜுன்! என் விருப்பம் இது! அதைத்தான் சொல்றேன்! செய்வீங்க தானே?''

''நாம ரெண்டு பேரும் ரொம்ப நாள் மகிழ்ச்சியா வாழ வேண்டாமா?''

''வாழணும்தான்!''

''அப்படின்னா சாவைப்பத்தி பேசாதே, மலர்! எனக்கு பயமா இருக்கு!'' அவளை அணைத்துக் கொண்டான்.

மலர்விழியின் ஆசையை பெற்றோர்களிடம் சொல்ல.... இன்னும் கத்திவிட்டார்கள்.

உடனடியாய் டாக்டரிடம் தெரிவிக்க... அவளை சென்னை மருத்துவமனைக்கு எடுத்துப்போய்...

அர்ஜுனை உயிராய் நேசித்த இதயம்.. ஆசையாசையாய் அவனை பார்வையால் விழுங்கிய கண்கள்... என்று எல்லா உறுப்புகளையும் தானமாய் கொடுத்து விட்டு வெறும் உயிரற்ற... உறுப்புகளற்ற உடலைக் கொண்டு வந்து அடக்கம் செய்தனர்.

அவள் சாவுக்கு காரணம் ராஜேஷ் என்று தெரியும்! சாட்சி சொல்ல வேண்டியவள் சடலமாய் போய்விட்ட பிறகு என்ன கேஸ் கொடுத்தாலும் நிற்காது என்று அர்ஜுன் நினைத்தான்.

ஆனால் போலீஸ் புலிகளுக்கு மலர்விழியிடமிருந்து ராஜேஷ் பிடுங்கி வீசி எறிந்து உடைந்து கிடந்த செல்பேசியும், அதிலுள்ள சிம்மில் மலர்கடைசியாக பதற்றத்துடன் பேசியிருந்த அர்ஜுன் எண் பதிவாகியிருந்ததும் அவள் பேச்சுக்களை எப்போதும் போல அர்ஜுன் பதிவு செய்து வைப்பதால் அவன் செல்லில் பதிவாகியிருந்ததும் சரியான ஆவணமாக கிடைத்துவிட முறையான விசாரணை நீதிமன்ற வழக்கு மூலம் ராஜேஷ் ஆயுள் தண்டனை பெற்று சிறைக்கு அனுப்பப்பட்டான். அதன்பிறகு அவன் தந்தையும், உர வியாபாரிகளும்

''என் பொண்டாட்டியும், கேரம் போர்டும் ஒண்ணு!''
''எப்படி?''
''அப்பப்ப பவுடர் போட்டுக் கிட்டே இருக்கணும்!''
-ப கோபிபச்சமுத்து.
கிருஷ்ணகிரி.



...டன் போக துணிந்து விட்டனர்.

தேவேந்திரன், வசந்தி, கயல்விழியைப் பார்த்து கண்ணீரோடு சொன்னான், அர்ஜுன்.

"அங்கிள்... இனி நீங்க என் அப்பா! ஆன்ட்டி என் அம்மா! கயல்விழி என் தங்கை! இனி என் எதிர்காலம் நீங்கள் எல்லோரும்தான்!"

வசந்தி முழுவதையும் நேத்ராவிடம் கொட்டிவிட்டு விம்மிக் கொண்டிருந்தாள். அங்கே கயல்விழி, தேவேந்திரன் வந்து சேர்ந்தனர்.

# 16

"அர்ஜுன் தான் மலரோட நினைவுல தன் எதிர்காலத்தை மறந்துட்டு வாழ்ந்தாலும்... அவருக்கு அறிவுரை சொல்லி.. நாங்கதான் நல்ல வாழ்க்கை அமைச்சுக் கொடுத்திருக்க வேண்டும்.

அந்தக் கடமையிலிருந்து தவறியது எங்க தப்புத்தான்"

மூவரும் குற்ற உணர்ச்சியில் தலையை தொங்கப் போட..

"மலர் இருக்க வேண்டிய இடத்தில் உன்னை வைத்துப் பார்க்க மனமில்லாமல் தான் இருந்தேன். ஆனால் எங்கள் மகள் கயல்விழிக்கு டாக்டர் வரனை மணம் செய்வித்து அவளுக்கு வாழ்க்கை அமைத்துக் கொடுக்க நீ முயற்சித்து வருவது தெரிஞ்சதும் என் மனம் நெகிழ்ந்து விட்டது" என்று கூறிய வசந்தி "உன்னைப் பார்க்கும் போது இப்போதெல்லாம் மலரே உயிர்பெற்று வந்தாற்போல எனக்குத் தோணுது."

சட்டென்று நேத்ராவை அணைத்துக் கொண்டாள், வசந்தி!

"நீயும் என் மகள் போலத்தாம்மா.. மலர் இருந்து என்ன செய்வாளோ அதைத்தானே நீ செய்திட்டு வர்றே?"

வசந்தியம்மாள் கண் கலங்கினாள்.

அந்த நேரம் தாத்தா உள்ளே வந்து.. அத்தனையும் அறிந்து குதூகலமானார். பின்னர்...

"அர்ஜுன் மனசை மாத்தி நேத்ராவை மணக்கத்தான் சம்மதிக்கணும்னா கயல்விழிக்கு முதல்ல திருமணம் நடக்கணும்!"

"சரி, கயலிடமும் முதலில் கேட்டு விடுவோம்!"

"சரி.. கயல்! உதய் உன்னை விரும்புறது தெரியும். ஆனா நீயும் டாக்டரை நேசிக்கிறாயா?"

"ம்..." என்று வெட்கத்தில் நிலம் நோக்கினாள், கயல்விழி!



"சீக்கிரமே உதய்-கயல்விழி திருமணம் முடியணும், தேவேந்திரா! அதன் பிறகுதான் அர்ஜுன் திருமணத்தைப் பற்றி பேச முடியும்! நேத்ரா பொண்ணு... நான் சொல்வது சரிதானே?"

"நூறு சதவீதம் சரி தாத்தா!"

நேத்ரா முகமெல்லாம் மலர்ச்சியோடு.. மகிழ்வோடு சொன்னாள்.

உடனே, தாய், தம்பியைச் சென்னையிலிருந்து வரவழைத்தான், உதய்! தன் விருப்பத்தைச் சொன்னான்.

உதயின் தாய் உடனே சம்மதித்து... முறைப்படி பெண் கேட்க..

"கயல்விழி... டாக்டர் உதய்யைவிட ஒரு நல்ல மாப்பிள்ளை உனக்கு கிடைக்கவே மாட்டாங்க! நியலி... நீ லக்கி கேர்ள்தான்!"

அர்ஜுன் கூறிவிட்டு கண்கள் கலங்கினான்.

நாள் பார்க்கப்பட்டது!

ஒரு நல்ல நாளில் உதய் கயல்விழியின் அழகிய கழுத்தில் தாலியைக் கட்டி.. தனது மனைவியாக்கிக் கொண்டான்!

உதய்யின் திருமணத்திற்கு வந்த நேத்ராவின் பெற்றோர்கள்... தாத்தா சக்ரவர்த்தியின் வேண்டுகோளுக்கிணங்க.. அங்கே பத்து நாட்களுக்கு மேல் தங்கிவிட்டனர்.

அர்ஜுனிடம் நேத்ராவை மணக்கச் சொல்லி கேட்கும் போது அவர்களும் இருந்தால் நன்றாக இருக்கும் என்று விரும்பினார், பெரியவர்!

காரணம்...?

அர்ஜுன் உடனடியாய் மறுப்பு சொல்லாமல் சம்மதம் கொடுத்தால்... விரைவிலேயே திருமணத்திற்கு நாள், நட்சத்திரம் பார்த்துவிடலாம் என்ற பேராசை அவர் மனதில் உதயமானதுதான்!

அன்று மதிய உணவு முடிந்து எல்லோரும் ஹாலில் குழுமியிருக்க... தாத்தாதான் பேச்சை ஆரம்பித்தார்!



"டி.வி.சீரியல் கதாநாயகியை.. கல்யாணம் செஞ்சது தப்பாபோச்சுடா..."

"ஏன்?"

"முதலிரவுக்கு அழைத்தால், இன்னும் நூறு எபிசோட் முடிஞ்சப்பிறகு நேரம் இருந்தால் பார்த்துக்கலாம்னு சொல்லிட்டடா."

-தென்கரை. சி.சங்கர்
வந்தவாசி



"நேற்று என் காதலியை கூட்டிகிட்டு பீச்சுக்கு போனேன்டா.."

"அப்புறம்?"

"பட்டாணி, சுண்டல், பஞ்சி மிட்டாய், முருக்கு, பச்சி வாங்கி தந்தும் வாங்க மறுத்திட்டா"

"அப்புறம்?"

"மாங்காய் தான் வேனும்னு அடம் பிடிச்சுட்டா..."

-தென்கரை.சி.சங்கர்,
வந்தவாசி.

''அர்ஜுன்... மலர்விழி கேட்டுக் கொண்ட கடமையில் பெரிய கடமை, கயல்விழியின் திருமணம்! அதை நல்ல குணமுள்ள, அந்தஸ்துல உயர்ந்த டாக்டர் மாப்பிள்ளைக்கே ஜாம் ஜாம்ன்னு திருமணத்தை முடிச்சி வச்சிட்டே!...

இப்போ இங்கே ஒரே ஒரு குறைதான்!.. ஒரு பேரசி இல்லாததுதான்!''

சக்ரவர்த்தி புன்னகையோடு சொல்ல...

''என்ன தாத்தா சொல்றீங்க?'' என்று அர்ஜுன் கோபத்தோடு கேட்க..

''உனக்குன்னு ஒரு மனைவி, குழந்தைங்கன்னு நல்ல எதிர்காலம் வேண்டும், அர்ஜுன்!''

''அதெல்லாம் அடுத்த ஜென்மம்தான், தாத்தா! மலரும், நானும் மீண்டும் இந்த மண்ணில் மனிதராய் பிறந்து வாழ்வில் இணைந்தால்தான் முடியும்!''

அர்ஜுன் அதற்குமேல் சொல்ல முடியாமல் நா தழுதழுத்தான். கண்களில் கண்ணீர் பொங்கியது.

அந்தக் கோலத்தில் அவனைக் காண நேத்ராவிற்கு முடியவில்லை!

''அர்ஜுன்.. இத்தனை நாளும் மலர் பிரிவாலும்.. மலர் இருக்க வேண்டிய இடத்தில் இன்னொரு பெண்ணை வைத்துப் பார்க்க முடியாமலும்.. எங்க எதிர்காலத்தை மட்டும் நினைத்தும் சுயநலமா உனக்கொரு திருமணத்தை நடத்தி வைக்காமல் முட்டாள் மாதிரி இருந்திருக்கோம்பா!''

வசந்தி சொல்லிவிட்டு அழ...

''இதுவே உனக்கொன்னு ஆகி.. மலர் உயிரோடு இருந்திருந்தால் அவனுக்கொரு கல்யாணம், காட்சின்னு அவளை வற்புறுத்தாமல் சத்தியமா இருந்திருக்க மாட்டோம், அர்ஜுன்! உன்னைப் பெத்த மகனா பாவித்தோம்! ஆனால் பெத்த மகனுக்கும் செய்ய வேண்டிய கடமையைச் செய்யாமல் இப்படி சுயநலமா வாழ்ந்திருக்கோம்னு



நினைக்கும்போது அவமானமா இருக்குப்பா, அர்ஜுன்!''

தேவேந்திரன் உணர்ச்சி குமுறலோடு பேசி கண்கள் கலங்கினார்.

''இந்த வம்சம் உன்னோடு முடிந்து விடக்கூடாது, அர்ஜுன்! எனக்கு உன் வாரிசு வேண்டும், அர்ஜுன்! நீ இதை நிறைவேத்தலனா.. நான் இறந்த பிறகு என் நெஞ்சு வேகாது, அர்ஜுன்!''

''ஏன் தாத்தா இப்படியெல்லாம் பேசி என்னை வருத்தப்பட வைக்கறீங்க?''

''நேத்ரா பொண்ணு உன்னை உயிருக்குயிரா விரும்புது, அர்ஜுன்!''

இவர்கள் இப்படி பேச நேத்ராதான் காரணம் என்று அறிந்த, அர்ஜுன்.. அவளிடம் சீறலோடு கேட்டான்.

''என்ன நேத்ரா... தாத்தா சொல்றது உண்மையா, என்ன?''

''ஆமாம், அர்ஜுன்! உங்களை நேசிக்கிறேன், அர்ஜுன்!''

நேத்ரா உயிர்க்காதலோடு சொல்ல...

''தாத்தா, அம்மா, அப்பா எல்லோரும் என்னை வற்புறுத்த நீதான் காரணமா?''

''நான் மட்டுமே காரணம் அல்ல! அவர்கள் விருப்பத்துடன் இணைந்திருக்கிறது என் விருப்பமும் ஏன் என்னைப் பிடிக்கலையா, அர்ஜுன்?''

நேத்ரா பட்டென்று முகம் வாடிக் கேட்க...

''உன் அன்பு, பண்பு, பாசம், கருணை, இரக்கம், ஜீவகாருண்யம், சுய மரியாதை, சுய நம்பிக்கை, சுய தெளிவு, மக்களுக்கு செய்யற மகத்தான சேவைன்னு உன்னிடம் நிறைஞ்சிருக்கற எல்லா குணமுமே ரொம்ப ரொம்ப பிடிச்சிருக்கு, நேத்ரா!''

''அப்போ என்னை மணந்துக்க என்ன தடை, அர்ஜுன்?''

''மனைவியா உன்னை ஏத்துக்க என் மனம் தயாராகலை நேத்ரா!''

''என்ன சொல்றீங்க, அர்ஜுன்?''

''என் மனசுல மலர் அழுத்தமா உட்கார்ந்திருக்கா, நேத்ரா! என்னை இப்போ வழி நடத்துறதுகூட மலர்தான், நேத்ரா'' அவன் திடமாய் சொல்ல..

''இதில் யாரும் ஒருவரை ஒருவர் நிர்பந்திப்பது கூடாது. என் விருப்பம் ஒரு தலையானதுங்கறது தெரிந்த பிறகு நான் சொல்றதுக்கு ஒண்ணுமில்ல.. அர்ஜுன்''

நேத்ரா மனம் வலிக்க வலிக்க கண்ணீரோடு சொன்னாள்.

''அர்ஜுன் முடிவா என்னதான் நீ சொல்ல வரே? நேத்ராவை மணக்க முடியுமா? முடியாதா?''

தாத்தா கோபத்தோடு கேட்க..

''வேற எது வேண்டுமானாலும் சொல்லுங்க.. நான் உங்க பேச்சை மீற மாட்டேன்! இது ஒன்றில் மட்டும் என்னை வற்புறுத்த வேண்டாம், தாத்தா!''

அர்ஜுன் தாழ்மையுடன் சொல்லிவிட்டு... காரைக் கிளப்பிக் கொண்டு வெளியேற...

பரணிதரன், ஈஸ்வரிக்கும் மனம் விட்டுப் போய்விட்டது.

"நேத்ரா.. இனியும் நீ இங்கே இருக்கணுமா?"

"என்னம்மா சொல்றே?"

"உன் நேசத்தை மறுத்தவன் அருகில் உன்னால் சந்தோசமா இனி இருக்க முடியுமா? அர்ஜுன்தான் ஆணித்தரமா முடியாதுன்னு சொல்லிட்டானே! அதன் பிறகு நீ இங்கே வேலை செய்யத் தேவையில்லை!" அம்மா சொல்ல

"நீ கிளம்பு நேத்ரா!" அப்பா திடமாய் கூற...

"இத ஒரு பிரச்சனையாக வச்சு நான் உங்களோட வரமாட்டேன்!"

அப்படி சொன்ன நேத்ராவை மிரட்டி... அழுது.. பணிய வைத்து... அங்கிருந்த அனைவரும் கெஞ்ச கெஞ்ச நேத்ரா அங்கிருந்து சென்றுவிட்டாள்.

மாலை வீட்டிற்கு வந்த அர்ஜுனுக்கு செய்தி கேட்டு ... மனதிற்குள் லேசாய் வலி புறப்பட்டது!

# 17

பெற்றவர்கள் எத்தனை வற்புறுத்தியும் சரியாய் உண்ணவில்லை! உறங்கவில்லை!

அவள் நினைவுகளில் வியாபித்திருந்த அரக்கன் அர்ஜுனையே நினைத்து நினைத்து நெஞ்சத்தையும், உடலையும் கெடுத்துக் கொண்டிருந்தாள்.

அர்ஜுன் போன் பேசுவான்.. நேரில் வருவான்.. என்று எதிர்பார்த்து எதிர்பார்த்து மூன்று மாதங்களுக்கு மேல் காத்திருந்து ஏமாந்து போனாள், நேத்ரா..

அவன் வரவேயில்லை!

அர்ஜுன் உள்ளுக்குள் குமுறிக் கொண்டிருந்ததுடன் வேதனைப்பட்டான்...!

அவனுக்குள்ளே நேத்ராவின் மேல் மெல்லிதாய்.. மென்மையாய் நேசம் பூத்திருந்தது!

அது, அவள் அங்கிருந்து சென்ற பின்புதான்.. அவள் மேல் ஈர்ப்பு, நேசம், காதல் இருந்தது அவனுக்குமே தெரியவந்தது!



அவளிடம் வலிந்து செல்ல சுய கௌரவம், சுய பச்சாதாபம், சுய மரியாதை, சுயகௌரவம் என்று ஏதுவோ தடுத்தது!

சென்னை சென்ற நேத்ரா விரைவிலேயே திரும்பி வருவாள். வந்த பின்னர் சொல்லலாம் என்றும் தன் நெஞ்சுக்குள்ளே நேசத்தைப் பொத்தி பொத்தி வளர்த்திருந்தான்.

"நேத்ரா... எப்போது என்னுள் காதல் விதையை விதைத்தாய்?

அது வேர்விட்டு, முளைவிட்டு, கிளை பரப்பி ஓங்கி உயர்ந்து.. விண்ணுக்கும், மண்ணுக்குமாக வியாபித்து கம்பீரமாய் நிற்கும் போது நீ எங்கே விலகிப் போனாய்?

நேத்ரா.. உன் கள்ளமற்ற அன்பு, பண்பு, மனம், சேவையால் தானே என்னைக் கவர்ந்தாய், என் மலர்விழியாய் மீண்டும் வந்து என்னைத் தாங்கிக் கொள்வாயா?

நேத்ரா... மலர்விழிக்கு பிறகு நான் உன்னை சந்திக்காமலேயே இருந்திருக்கலாம், நேத்ரா! இறைவன் என்னை மட்டும் ஏன் இப்படி சோதிக்கிறான்?"

அவனால் அன்றாட பணியில் இயங்க முடியவில்லை!

நேத்ராவை நினைத்து நினைத்து கண்கள் பொங்கியது! இதயம் விம்மியது!

தொண்டைக்குள் பிடி உணவு இறங்கவில்லை!

தனிமையை நாடினான்! தனக்குத் தானே வேலி போட்டுக் கொண்டான்.

அர்ஜுனின் நடவடிக்கை கண்டு ஏன்? என்ன அர்ஜுன்? என்று சக்கரவர்த்தியும், வசந்தியும் கேட்க..

அவன் சொல்லவில்லை! சொன்னால் மட்டும் நிறைவேறிவிடுமா? நேத்ரா திரும்ப அவனுக்கு கிடைத்துவிடுவாளா?

# 18

இயல்விழி உதய நிலவென்று திடுமென வந்து நின்றதும் நேத்ராவுக்கு ஒரு கணம் எதுவும் புரியவில்லை.

"நேத்ரா! நீ பிரிந்து வந்த பிறகு தான் அவன் இதயத்தில் நீ இருப்பதை அர்ஜுன் உணர்ந்து தவித்துக் கொண்டிருக்கிறான். அவனாக வந்து அழைத்தால் நடந்ததை மறந்து ஏற்றுக் கொள்வாயா சொல் நேத்ரா?"



"போர் ஆரம்பிக்கும் முன்னாடி நம்ப மன்னர் புல்லா தண்ணி அடிச்சிபுட்டுதான் கிளம்புவாரு"

"எதுக்கு"

போதையில எது நடந்தாலும் தெரியாமயிருக்கத்தான்"

-தென்கரை.சி.சங்கர், வந்தவாசி.

உதய் கேள்வி எழுப்பினான்.

''மலர்விழியை மறக்க முடியாமல் தவித்தவன் அவளே மனதில் அழுத்தமாக இடம் பெற்றிருப்பதாக கூறியவன் எப்படி திடீரென மாறினான்? நம்ப முடியலை உதய்! ஏய் கயல் நீயாவது உண்மையைச் சொல்லுடி!

சொல்றதுக்கு என்ன நேத்ரா? நீ விலகிவந்த பிறகு ஏற்பட்ட வெறுமையில்தான் உன்னை மிஸ் பண்ணிட்டோம்னு உணர ஆரம்பிச்சிருக்கான். நீங்க ரெண்டு பேரும் சேர்ந்து வாழணுங்கிறதுதான் எங்க விருப்பம். தாத்தா, வசந்தியம்மா எல்லோர் விருப்பம்!''

''அர்ஜுனுக்கு அந்த ஆசையும், காதலும் வரட்டும். அது இப்ப உடனடியாக இல்லேன்னாலும் எதிர்காலத்துலயாச்சும் வரட்டும். நான் எப்பவுமே அர்ஜுனைத்தான் மனசிலே வச்சிருக்கேன். வச்சிருப்பேன்..'' கண்கலங்கினாள்.

''இவ்வளவு மனசுல வச்சிட்டு ஏன் மூணு, நாலு மாசமா ஏன் வந்து உட்கார்ந்துட்டே! காற்றுல கையைத் துழாவுற மாதிரி உங்க காதல் கண்ணுக்கு தென்படாத ரூபமா இருந்தா எப்படி? இங்கே உன்னை சந்திக்கத்தான் அர்ஜுண்ணா வந்திருக்கார்''

காரில் இத்தனை நேரமும் அமர்ந்திருந்த அர்ஜுனை அழைத்து வந்தான் உதய். நேத்ரா முன் கொண்டு வந்து நிறுத்தினான்.

இரண்டு ஜோடி கண்களும் சந்தித்துக் கொண்ட உருக்கத்தில் கண்கள் தழும்பி ஒருவர் உருவம் ஒருவருக்கு தண்ணீரில் பிம்பம் போல நிழலாடின.

அவன் கைகளை நீட்ட பற்றிக் கொண்டாள் நேத்ரா.

அவர்கள் இதயங்கள் திறந்து பேசுவதற்கு வசதியாக உதய்-கயல்விழி ஜோடி அங்கிருந்து ஜகா வாங்கியது.

**முற்றும்**